# காந்தீயக் கதைகள்



31

* "Question not the Veracity of a friend"
* Use your leisure time for Improvement
* "Respect the Counsel of elders."
* A friend in need is a friend indeed


ந. சிவபாதம்
புத்தொளி
செல்வ அகம்
ஆலைக்கோட்டை

B

[illegible]


# காந்தீயக்
# கதைகள்

காந்தி நூல்கள்
ஐந்துள்
இதுவும் ஒன்று



# காந்தீயக் கதைகள்

அரசு வெளியீடு: 24



விலை ரூ: 3-00

அரசு வெளியீடு,
231, ஆதிருப்பள்ளித் தெரு,
கொழும்பு-13 (இலங்கை).

தொகுப்பாசிரியர்:

எஸ். பொன்னுத்துரை

வெளியீட்டாளர்:

எம். ஏ. ரஹ்மான்

First Edition:
Gandhi Centenary (1969)

Price: 3-00

# Gandhiyak Kathaikal

Compiled & Edite ‹ by:

S.Ponnuthurai

Published
under the auspices of
Ilampirai
by
M. A. Rahman
ARASU PUBLICATIONS
231 Wolfendhal Street
Colombo-13 (Ceylon)

# கதைஞரும் கதைகளும்

## ஆர். பாலகிருஷ்ணன்

அகில இலங்கைப் போட்டிகளில் மூன்று முறை முதற் பரிசு களும் பாராட்டுதலும் பெற்ற கதைஞர். சிந்தனையைத் தூண்டும் நகைச் சுவையுடன் கூடிய ஓரங்க நாடகங்களை எழுதுவதில் வல்ல வர்; நாடக நடிகர். சிறுவர்க்கேற்ற விஞ்ஞானச் சித்திரங்களும் எழுதியுள்ளார். 'இளம்பிறை'யின் பதின்மூன்றும் பக்கத்தார். கிழக்கிலங்கை எழுத்தாளர் சங்கப் பொதுச் செயலாளர்.

நறுக்குத் தெறிக்கும் சிறு உரையாடல்களின் மூலமே கதைக்கு ஜீவத்துவம் ஏற்றுதல் இவரது தனித் துவ முத்திரை. மீனவனுக்கும் பொலீஸ் அதிகாரிக்கு மிடையில் நடைபெறும் உரையாடலிலே சிந்தனைப் பொறி எழுப்பி, தர்மத் தூது சென்றவனுக்கு சத்திய நெறி பற்றிப் புனர்விசாரணை செய்ய வேண்டிய நிலை உதயமாவதைச் சுவைபடச் சொல்லும் கதை:

தர்மத் தூது ...9

## தேவன் - யாழ்ப்பாணம்

'கேட்டதும் கண்டதும்', 'அவன் சுற்றவாளி' (நாவல்கள்); 'தென்னவன் பிரமராயன்' (நாடகம்); 'மணி பல்லவம்', 'வாடா மலர்' (மொழிபெயர்ப்பு), 'வான வெளியிலே' (விஞ்ஞானம்) ஆகிய பல நூல்களின் ஆசிரியர். நாடகப் பிரதிப் போட்டியில் இரு தடவை இலங்கைக் கலைக்கழகப் பரிசு பெற்றவர். நாடறிந்த நாடக நெறியாளர். 'இளம்பிறை'யின் 'மகான்'. அகில இலங்கை எழுத்தாளர் சங்கப் பொதுச் செயலாளர்.

யதார்த்தச் சூழலின் நிழலிலே மறைந்திருக்கும் மனோரதியச் சீர்மையைச் சித்திரித்தல் இவரது கதை களின் தனித்துவம். பஸ் கண்டக்டருடைய மனப் போராட்டம் என்னும் நிலைக்களனில், அவன் யாருக்

கும் வாயாரக் கொடுக்காத சத்திய வாக்கினைக் காப்பாற்றும் உறுதியிலே மலரும் மனோரதியச் சீர்மையை லாவகமாகச் சித்திரிக்கும் கதை:

**சத்திய சாதனை . 16**

## இராஜநாயகன்

*யாழ்ப்பாணத்திலே தோன்றிய முதலாவது மறுமலர்ச்சி இலக்கியச் சஞ்சிகை நடத்திய சிறுகதைப் போட்டியில் 'விழிப்பு' என்ற தமது கதைக்குப் பரிசு பெற்றதின் மூலம் அறிமுகமாகி கடந்த கால்நூற்றாண்டு காலமாகச் சிறந்த கதைஞராக நிலைத்துள்ளார். எண்ணிக்கையைப் பாராட்டாது, கதையின் கலைத்துவக் கோலத்திற்கே முதலிடம் அளித்து ஒறுப்பாக எழுதுபவர்.*

ஊமைச்சி காணும் கனவைக் கூட, ஒத்தூதும் ஊமைக் குழலிலேயே பிழிந்து காட்டும் அபூர்வ ஆற்றல் இவருடைய கதைகளின் தனித்துவ முத்திரையாக அமைந்துள்ளது. மதுவிலக்குப் பிரசாரத்தில் இருவர் கொண்டுள்ள நோக்கம் பற்றிய மறைகவர்ச்சி-பொருத்தமான தலைப்பு-நளினமான கலைத்துவம் இத்தனையும் பொருந்தும் கதை:

**ஓநாய்கள் கவனம்...24**

## என். எஸ். எம். ராமையா

*ஒரு தசாப்த காலம் வானொலி நாடகங்கள் எழுதுவதில் தமது ஆற்றல் இலக்கிய முனைப்பினைச் செலவுசெய்து, 1960 ஆம் ஆண்டில் 'ஒரு கூடைக் கொழுந்து' என்ற கதையுடன் கதைஞரான இவர், மலையகக் கதைகளுக்கு யதார்த்த இலக்கணம் வகுத்த மூத்த மகனாகவும் உயர்ந்தார்.*

கதைகளின் நிகழ்ச்சிக் கூறுகளைப் பார்க்கிலும், கூர்மையாகவும்-யதார்த்தம் பிறழாமலும் வடித்தெடுக்கப்படும் பாத்திரங்களின் ஆளுமை மேலோங்கி நிற்பது இவருடைய தனித்துவ முத்திரையாக முதிர்ந்து

நிற்கின்றது. விவகாரங்களிலே சுழலுவதை வாழ்க்கை யாக்கிக் கொண்டுள்ள மனிதருக்கு, பக்திகூட விவ காரமாகிவிடும் அவலத்தை நேர்மையான மலையகக் களத்திற் சித்திரிக்கும் கதை:

ரகுபதி ராகவ...38

## வ. அ. இராசரத்தினம்

கிழக்கிலங்கைக் கதை முயற்சிகளின் முன்னோடியாகவும் முதல் வராகவும் விளங்கி, ஈழத்துக் கதை இலக்கியத்தில் புதிய சுருதி லயத்தைப் புகுத்திய இவர், 'கொழுகொம்பு' (நாவல்), 'தோணி' (சிறுகதை) ஆகிய நூல்களின் ஆசிரியராவர். புனை கதைத் துறைக்கு ஸ்ரீ லங்கா சாகித்திய மண்டலப் பரிசு பெற்றவர். வரலாற்று நாடகங்களும் எழுதியுள்ளார். அனைத்திலங்கை எழுத்தாளர் கூட் டமைப்பின் தலைவர்.

மகாவலிகங்கைக் கரை சார்ந்த கொட்டியாரப் பகுதியை அழகிய நிலைக்களனாக அமைத்து, அன்றாட வாழ்க்கையையே நிகழ்ச்சிக் கூறுகளாக இசைத்து, தெளிந்த நடையில் எழுதுதல் இவரது கதைகளுக்குத் தனிப்பாணியைச் சேர்க்கின்றது. வானொலி நிகழ்ச்சி களின் துரித கதியில் நகரும் வேதநாயகம் வாத்தி யாரின் அன்றாடக் காலை வேலைகளைச் சித்திரித்து, அதன் நீவுகளுக்கிடையில் உடலுழைப்பின் மேன்மையை நயமாகக் குத்திக் காட்டும் கதை:

மீண்டும் காந்தி பிறப்பார்!...46

## ராஜ்-மித்ரா

இலக்கியத்தின் பல உட்பிரிவுகளிலும் தமது மேதைமையை நிலைநாட்டியுள்ள பேனா மன்னரான இவர், எண்ணற்ற புனை பெயர்களுக்குட் புகுந்து 'சித்து விளையாட்டுக்கள்' காட்டுவதிலும் விண்ணர்.

'நடை புதிது; உரு புதிது; உத்தி புதிது; தொனி புதிது' என்று வகைக்கு ஒன்றாக எழுதினாலும், மேதைமையைப் பொறித்தல் இவரது தனித்துவம். 'சோஷலிஸ யதார்த்தம்' என்பதற்கு மார்க்ஸிஸவாதிகள் தரும் இலக்கணத்திற்கு இசையக் 'கதை பண்ணுதல் இப்படித்தான்' என்ற நையாண்டி-கருச்சிதைவுக்கு Plastic surgery போன்ற குழூஉக்குறிகள் தொற்றிய மறை கவர்ச்சி ஆகிய படுதாக்களிலே பிரமச்சாரியத்தைக் 'கம்யூனிஸ'க் கண்கொண்டு பார்க்கும் கதை:

**சில நேரங்களில் சில தோழர்கள் 57**

## தெளிவத்தை ஜோசப்

*வெகு குறுகிய காலத்திற்குள் நிறைய எழுதி தமிழக வாசகருக்கும் அறிமுகமாகியுள்ள கதைஞரான இவர், 'வீரகேசரி' நடத்திய மலையகச் சிறுகதைப் போட்டிகளில் இரு தடவைகள் பரிசு பெற்றுள்ளார். 'காதலினாலல்ல......' என்ற நாவலையும் எழுதியுள்ளார். மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தின் செயலாளர்.*

கதை நிகழ்ச்சிக் கூறுகளை நாடகப் பண்பு சேர்த்துச் சுவையுடன் சித்திரித்தல் மூலம் இவருடைய கதைகள் தனித்துவம் பெறுகின்றன. தூய்மையான இலட்சியங்களிலும் கொள்கைகளிலும் கதாபாத்திரம் ஈர்க்கப்பட்டாலும், நடைமுறையில் சாதாரண மனிதனாக செயற்படுவதைத் தவிர வேறு வழியில்லை என்பதைக் கலைத்துவமாகக் கூறும் கதை:

**கத்தியின்றி இரத்தமின்றி...75**

## இரசிகமணி கனக-செந்திநாதன்

*மரபிலே திளைத்து, தமிழிலே தோய்ந்து, இலக்கிய ரசனையைத் தமது வாழ்க்கையாக்கியுள்ள இவர், நடுநிலைமை தவறாத இலக்கியக் குணமாய்வு செய்பவர்; 'ஒரு நடக்கும் வாசிகசாலை'!*

தற்கால ஈழத்தமிழ் இலக்கிய வரலாறு பற்றிய முதனூலாக இவரது 'ஈழத்து இலக்கிய வளர்ச்சி' விளங்குகின்றது. சிறுகதை-நாவல்-நாடகம்-கவிதை ஆகிய துறைகளிலே ஆக்க இலக்கியமும் செய்து மகிழும் இவர் 'வெண் சங்கு' (கதைகள்), 'ஈழம் தந்த கேசரி' (வரலாறு) ஆகிய பத்துக்கு மேற்பட்ட நூல்களின் ஆசிரியர். மறுமலர்ச்சிச் சங்கம் தொடக்கம், யாழ்-இலக்கிய வட்டம் வரை பல எழுத்தாளர் சங்கங்களுக்குத் தூண்டுகோலாக இருந்து வருபவர்.

அன்பு-கருணை-மன்னிப்பு ஆகிய பண்புகளை மரபு தவறாத பண்டைய யாழ்ப்பாண நிலைக்களன்களில் வைத்துச் சித்திரித்தல் இவருடைய கதைகளின் தனிப் பண்பாகும். சத்தியத்தை நம்பி, அன்பைத் துணைப் பற்றும் காந்தி பொன்னையாவின் வாழ்க்கையில் ஏற்படும் சலனத்திலே, மன்னிக்கும் பண்பின் மகத்துவத்தை விளக்கும் கதை:

**அன்பின் ஒலி...86**

## கே. வி. நடராஜன்

பத்து ஆண்டுகளுக்கு மேலாகக் குடத்து விளக்காக இருந்து கதைகள் எழுதி வந்த இவர், 'யாழ்ப்பாணக் கதைகள்' என்ற தமது கதைத் தொகுதியை வெளியிட்டுச் சகலருடைய கவனத்தையும் ஈர்ந்தார். யாழ்ப்பாணக் கலாசாரத்திற்குரிய தனித்துவத்தை 'யாழ்ப்பாணக் கதை'களுக்கு முன்னரும் பின்னரும் எந்தத் தொகுதியும் அவ்வளவு அச்சாவாகப் பிரதிபலிக்கவில்லை. யாழ்-இலக்கிய வட்டப் பொருளாளர்.

பாத்திரப் படைப்பிலே முழுத்துவம்-யாழ்ப்பாணத்துப் பயிலுதமிழை உயிர்த்துடிப்புடன் கையாளுதல் ஆகியன இவருடைய சிறுகதைகளின் தனித்துவம். ஒரு சாராரின் வழிபாட்டிற்குக் குறுக்கே ஆலயங்களை அடைத்து வைத்திருக்கும் 'பழைமை'க்கும், 'திறந்து விடு' என இயக்கம் நடத்தும் 'புரட்சி'க்கும் இடையில் நடைபெறும் மோதுதலைச் சிந்தனைக்கும் விருந்தாகப் படைக்கும் கதை:

**கதவே திற...98**

## எம். ஏ. ரஹ்மான்

*'இளம்பிறை' மாசிகையின் நிர்வாக ஆசிரியர். ஈழத்து ஆற்றலிலக்கியத்துறையில் அதிக நூல்களை வெளியிட்டுள்ள 'அரசு வெளியீடு'வின் உரிமையாளர். 'மரபு', 'தீபன்' (ஈழத்தில் வெளிவந்த இரண்டே இரண்டு உருவகக் கதைத் தொகுதிகள்), 'இளமை ப்பருவத்திலே' (சிறுவர் இலக்கியம்), 'கதைவளம்' (விமர்சனம்) ஆகிய நூல்களின் ஆசிரியர். வரலாற்று நாடக ஆசிரியர். இலங்கை ரீதியாக நடைபெற்ற மூன்று சிறுகதைப் போட்டிகளில் முதற் பரிசுகளும், பாராட்டுதலும் பெற்ற கதைஞர். முஸ்லிம் எழுத்தாளர் சங்க உபதலைவர்; அனைத்திலங்கை எழுத்தாளர் கூட்டமைப்பின் இணைச் செயலாளர்; கொழும்பு இலக்கிய வட்டத் துணைத் தலைவர்.*

அரிய பெரிய தத்துவங்களைச் சிறிய உவமைகள்-உருவகங்களுக்கிடையில் அடக்குதல் இவருடைய கதைகளிலுள்ள தனிச்சிறப்பாகும். ஒன்றுக் கொன்று சம்பந்தமற்றனவாகத் தோன்றும் நான்கு நிகழ்ச்சிகளை உருவகப் பூக்களாக்கி, அகிம்சை-உறுதி-நம்பிக்கை-உண்மையாகிய தொனிப் பொருளை நறுமணமாக ஏற்றி, மிக இறுக்கமாகச் சத்தியாக்கிரகத்தின் தத்துவத்தை விளக்கி, இடையில் ஆழமான நகைச் சுவையைப் புகுத்தும் கதை:

**உண்மையில் உறுதி 108**

# பண்டாரமும் பணியும்

'ஆண்டிப் பண்டாரம் உன்னை வேண்டிக் கொண்டேனே' என்கிற குரல். பண்டாரத்தின் ப்ரக்ஞை. சொச்சம் **Motor Habit.** குடலையும் குறட்டுத்தடியும் உட்படக் கா நோக்கிநடை. அதுவும் இதுவும் பழக்க வசத்தே. பண்டாரமும் ஆற்றங்கரையும். ராமன் பாதம்பட்ட அயோத்திபோல, யமுனை தெரிகிறது. நீரின் சுழிப்பிலே கற்பனைச் சடைப்பு. இழிபின் சுறணம். ஓடும் நீர். ஒரு கண நொடிப்பில் அதுவல்ல இது. அதைத் தேடும் உன்னலில், அதற்கு அப்பாலுள்ள நேற்று. நேற்று முன் நேற்றுகள். இறந்த காலத் தொடையல் பல கடக்க வரும் ஒரு யுகம். அதன் ஒருநாள். நாளின் ஒரு வேளை. கரணியின் கற்பிதம். பராசரன் ராக்ஷசர்களைச் சங்கரிக்க யாகம் இயற்றி, வினையிலே வென்றி பெற்று, யமுனையைக் கடக்கின்றான். ஏகாந்தம். சூழ நீர். நடுவில் ஓடை. அதிற் பயணி அவன். பக்கலில் மீன்மொச்சைச் சிறுமி. கண்ணிமைப் பொழுது. அற்புத வேளையின் மதர்ப்பு. காமத்தீயில் இந்திரிய முறுக்கு. மீன்மொச்சைச் சிதையிற் பரிமளம். யோசனகந்தியின் தோற்றம். பிஞ்சுக் கருப்பை முற்றி, இச்சையுடன் வித்திய சுக்கிலத்தைக் கௌவ, அர்த்தநாரீஸ்வர ஜாலத்திற் சித்தித்த சுகிப்பு. யோனி நீங்கி, நச்சுக் கொடியைத் தோளிலே போட்டுக் கொண்டு வியாசர் கமண்டலதாரியாக ஓடுகிறார். அவரே பாரதத்தை இயற்றும் பாவச்சுமையின் கதி. யமுனைக் கரையிலே தவிசிருந்து பாரதம் கண்ட மரங்கள் பாழ்பட, புதியன கவையாகிக் கொம்பாகிப் பாழ்பட, பாழிலே புதியன தோன்றிப் பாழ்பட என்ற சங்கிலித் தொடரிலே கால நதியின் ஓட்டம்! இன்று. பண்டாரம் ஆற்றங்கரையில் நிற்கின்றான், கரையிலே செதுக்கிய வெண்ணெயின் உயிர்ப்பும். நாமம்: கொக்கு. தவமே கோலம். 'ஓடுமீன் ஓடி உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாங் கொக்கு' என்று கிழவி பாடுகிறாள். "இல்லைப் பாட்டி, குருவியாகும் முனைப்பே இத்தவம்" என்று சுட்ட பழ உத்தி தெரியாத புத்திக் குஞ்சு திருத்துகிறான். "ஓமோம்; அவை விதைப்பதுமில்லை, அறுப்பதுமில்லை" என்று திருத்துவதற்கிடையிற் காலச் சுழிப்பு! குருவிகள் பறவைகள். அவற்றின் கொந்தல். சுவைப்பும் உணவும். யார் நட்ட மரம்? யார் வைத்த பூ? சூலின் விந்தை? கனிக் கரணி? உண்ணும் உரிமை அவற்றிற்கு! பழந் தின்றும் உரிமை பறவைகளுக்கு; புலால் தின்னும் உரிமை வேடனுக்கு. ஆட்டை உரிக்கிறான் ஒருவன். உண்ணும் உரிமையே அவனுக்கு வாழும் உரிமை. இன்

ஒருவன் முடமான ஆட்டை தோளிலே சுமந்து செல்கின்றான். அன்பே வாழும் நெறி என்பது இவன் மதம். மீண்டும் வியாசரின் தோற்றம். அவர் முகத்தில் பரிதாபம் வழிகின்றது. இவர் படைத்ததில் எவனோ ஊடு சேர்த்துவிட்டான். பாலில் விளையும் கொக்குத் திருடித் தின்றவனின் மாயம். 'கிளைஞரைக் கொல்' எனப் பணிக்கின்றான். அந்த ஆணை வேதமாகி, அதுவே அகிம்சையின் அடித்தளமாகின்றது. ஞான ரதத்தில் ஏறிய பண்டாரத்தின் அலைச்சல்! காலக் கெடு அவனை அங்குசம் கொண்டு மடக்குகின்றது. அரும்பில் உயிர்த்து, வீயிலே சிதையேகும் பயன்தராப் பூக்கள். காய்களையும் கனிகளையும் கொய்து வயிற்றுக் கர்ப்பக்கிரகத்தில் பசிக்கு நைவேத்தியமாக்கல். மனிதனின் சுயப் பூஜை! ஏனைய பூக்கள் ஈசன் உவக்கும்பூக்களாம். நல்ல ஏற்பாடு. கடவுள் படைத்த மனிதனுக்கும், மனிதன் படைத்த கடவுளுக்கும் சம்மதம். உதிரத் துளியோ? சிந்தூரத் துகளோ? ரோஜா! கொம்மை முலை பகரும் கொடியாளின் கோவை இதழில் சின்னம் எனக் கவிஞன் மறுக, பாட்டாளி சிந்தும் உதிரத்தை உண்டு வெடிக்கும் புரட்சி பண்டாரத்திற்கு ஞாபகம் வருகிறன்து. மல்லிகையின் நிர்மலம். அது நிகர்த்த தந்தமுடையவளே வாழ்க்கையென்ற கானல்நீர்ப் பயணியான கனவும், பண்டாரமான நிதர்சனமும், 'ஆண்டிப் பண்டாரம்' என்ற குரலின் புதுத் தொனி. கற்பனைக் ககனத்தில் நீந்தும் பட்டத்தை வலிக்க, குடலையிலே பூக்கள். கங்கை-கா-மரங்கள்-பூக்கள் எல்லாமே வைத்தவன் சொத்து. அவன் அறியாதன. குடலையும் தடியும் கோயிற் சொத்து. ஆண்டிப் பண்டாரம்! ஆனாலும், பூக்களின் வண்ணமும் வ்கையும் அறிவான். பூக்ன் சந்நிதிக்கு வருகின்றன. தடியும் குடலையும் ஓய்வு பெறுகின்றன. குடலை இப்பொழுது ஓலையின் ஸ்திதியே. இவை இல்லாதன போலவே பண்டாரமும் இல்லை. கதைகள் பூக்கள். தேர்ந்த கலையுள்ளம் சந்நிதி. இலக்கியச் சுவைப்பே பூஜை. வியாசரும் கண்ணனும் விவாதத்தில் ஈடுபடுகிறார்கள். பண்டாரம் எஸ். பொ.வை நாடிப் புறப்பட்டான். இடையில் நீ? பூஜை உன் யோகம். பயனே சுதனம்.

**எஸ். பொன்னுத்துரை**

மட்டக்களப்பு
2-10-69.

# பதிப்புரை

காந்தி நூற்றுண்டு நினைவாக ஐந்து நூல்களை வெளியிடுவதிற் பேருவகையடைகின்றேன். தமது பிரார்த்தனைகளிலே அல்லாஹ்வின் திருவசனத்தையும் உச்சரித்து, பாரத நாட்டிலுள்ள ஆறு கோடி முஸ்லிம் களுந் தலை நிமிர்ந்து வாழத் தன்னம்பிக்கை யூட்டும் பணியிலே தமது உயிரையே பலியிட்ட அந்த இனியவரின் நினைவாக ஐந்து நூல்களை ஏககாலத்தில் வெளியிடுவதால் உவகை இரட்டிப்பாகின்றது.

ஐந்து நூல்களுள் இதுவும் ஒன்று. ஈழத்து இலக்கிய அன்பர்களும், தமிழ் நூல் வெளியீட்டாளரும் இதனை ஒரு சாதனை என்றே கருதுவர். இப்பெருமையை எனக்குரியதாக எடுத்துக் கொள்ளாது, உலகிலே அன்பினுற் சாதனைகள் பல புரிந்த அந்த மஹாத்மாவுக்கே இச்சாதனையையும் பயனையும் அர்ப்பணமாக்குகின்றேன்.

'இலக்கியம் சிறுகதையே; சிறுகதையே இலக்கியம்' என்று கதைஞர்களே சுயப்பிரமிப்புக் கொள்ளும் அளவுக்குத் தமிழில் இவ்விலக்கிய உருவம் உயர்ந்தது. உயர்ந்தது என்றல்ல; பிரபலம் அடைந்தது என இக்கூற்றினைத் திருத்துதல் பொருந்தும். எனவே, காந்தி நூல்கள் ஐந்தினை வெளியிடும் எத்தனத்தில், 'அதில் ஒன்று சிறுகதைத் தொகுதி' என்ற எண்ணம் இயல்பாக ஒன்றிற்று. மறுகணமே துருவ ஈர்ப்பு! 'காந்தீயத் தத்துவங்களைப் புதிய தளங்களில் வைத்து, குறைந்தது பத்துச் சிறுகதைகளையாவது, படைப்பின்

பூரண கலைத்துவ சேதனையைத் தம்முள் வசக்கி வைத்திருக்கும் கதைஞர்களைக் கொண்டு எழுதுவித்தல் சாத்தியமா? சாத்தியம் மூன்றே வாரத்திற் சாதனையாகுமா?' என என் மனம் மறுகியது. காரணி தொற்றிய மறுகுதலே! நமது கதைஞர்களுட் பலர் ஒதுங்கி வாழும் ஒருவகை நோய் வசப்பட்டுள்ளார்கள். இதன் காரணிகளை ஆராய்தல் சுவையான இலக்கிய விசாரணையே யாயினும்,' ஏற்ற ஆய்கூடம் இதுவல்ல. நோயி லிருந்து—கௌரவமாகவும் சௌகரியமாகவும் அதனைச் சோம்பலென அழைத்தாலுங்கூட—கதைஞர்கள் விடுதலை பெறுதல் சேமமான சங்கதி. இலக்கிய நலம் பேணும் நாட்டினுல் இக்குறிப்பு! ஆண்டுக் கணக்காக ஒதுங்கி இருப்பவர்களையும் 'முடுக்கி', மூன்றே வாரத்துள் சிறுகதைகளை எழுதிப் பெறமுடியுமா? 'கதை உற்பத்தி எந்திரங்கள்' (கதைஞர்கள்) எத்தனை 'துருப்பிடித்து' (எழுத்தூக்கமற்று) இருக்கின்றனவோ? 'தயார் நிலையிலுள்ளவர்களுள் எத்தனை பேர் நாம் வகுத்துள்ள எல்லைக்கட்டுகளுக்குள் எழுத முன்வருவார்கள்? என்மீது கவிந்த தயக்க நிழல் நீளலாயிற்று. இத்தயக்கத்தை நண்பர் எஸ். பொ. விடம் விளக்கினேன். ஆனல், எதிர்பார்த்தது போலவே, ''முடியும்'' என்று ஏக வார்த்தையில் பதிலளித்தார். இலக்கியத்துறையைப் பொறுத்த வரையிலாவது 'முடியாது' என்ற சொல் அவர் அகராதியில் இல்லை. ''முடியுமாயின், சிறுகதைத் தொகுதியின் பொறுப்புக்கள் முழுவதையும் நீங்களே ஏற்றுக் கொள்ளுங்கள். ஏனைய நூல்களின் பதிப்பு வேலைகளைக் கவனிக்க எனக்கு அதிக அவகாசம் தந்து உதவுதலும் ஆகும்'' என இப்பொறுப்புக்களை எஸ். பொ. விடம் ஒப்படைத்தேன்.

இப்பணியில் ஈடுபட்டிருந்த அவர், ''சுதந்திரப் போராட்டத்தில் காந்திஜி கண்டு பிடித்த ஆயுதம்

சத்தியாக்கிரகம் ஆனால், இலங்கையில் சுதந்திரத்திற்குப் பின்னரே, பல்வேறு சந்தர்ப்பங்களில், சத்தியாக்கிரக இயக்கங்கள் நடத்தப்பட்டன. மாறுபட்ட நிலைக்களங்களிலே சத்தியாக்கிரகம் என்பதைத் தொனிப்பொருளாகக் கொண்ட சிறுகதை ஒன்றையும் நமது தொகுதியிலே சேர்த்தால் என்ன?" எனக் கேட்டார். அவருடைய பீடிகைக்கான ஏதுவை அறியாத அப்பாவியாக, "விரும்பத்தக்கது; சேர்த்துக் கொள்ளுங்கள்" என்றேன். "உங்களைக் கொண்டு அச்சிறுகதையை எழுதுவித்துச் சேர்த்துக் கொள்வதாக உத்தேசம்" எனத் தொடங்கி, 'அப்பீ' லுக்கு இடமில்லாத பாணியிலே தமது கட்சியை வலியுறுத்தினார். "பதிப்பு வேலைகள்; 'இளம்பிறை' மலர்; தொடர்புக் கடிதங்கள் என எனக்கிருக்கும் வேலைச் சிரமங்களை நீங்கள் அறிவீர்கள். வேறொரு கதைஞரை அணுகுங்கள்" என்றேன். "அப்படியா? மேல் மாகாண வாழ்க்கையில் ஒன்றியவராகவும், காந்தி வரலாற்றிலும் கொள்கைகளிலும் திளைப்புள்ளவராகவுமுள்ள முஸ்லிம் கதைஞர் ஒருவரின் பெயர் தருக" என்றார். நான் யோசிக்கலானேன். "வாரக் கணக்காக யோசித்தாலும் பதிலாளைச் சிபார்சு செய்தல் சிரமம். நமது கதைஞருக்கு அவரவர் சொந்தப் பணிகள் அநேகம். எல்லோர் சலிப்பும் இதுவே. இருப்பினும், ஒரு சிறுகதையை எழுதுவதற்கான நேரத்தை ஒதுக்க முடியாது, இலக்கியகாரன் என்று நெஞ்சு நிமிர்த்துவதில் என்ன அர்த்தம்?" என்று பலகூறித் தமது கட்சியையே நியாய பூர்வப்படுத்தினார். நான் கொடாக்கண்டனாகவும், அவர் விடாக்கண்டனாகவும் விவகாரம் இருதினங்களாக இழுபட்டது. ஈற்றில் இத் தொகுதியில் இடம்பெறும் என் கதையைச் சமைத்தேன். என் அநுபவத்தை அளவு கோலாகக் கொண்டு, தொகுதிக்கான கதைகளை எஸ். பொ. எவ்வாறு 'வசூலித்திருப்பார்' என்பதை ஒரளவு ஊகிக்கலாம்.

''என் கதை தானுகக் கனியவில்லை; உங்களுடைய நெருக்குதல் என்ற அடியிலே பழுத்தது'' என்று ஓரளவு அவையடக்கமும் பேணினேன். ''அடித்துப் பழுக்க வைத்த கனிகளை நான் கொய்துள்ளதாகக் கதைஞர் பலரும் கூறிவிட்டனர். என் விளக்கமும் இருக்கிறது. கதைஞர்கள் மச்சகந்திகள் என்ருல், அவர்களுடைய கற்பனைக் கருப்பையில் வியாசர் ஜனிக்கக்கூடிய சுபவேளையைத் தேர்ந்தெடுத்த பெருமையை எனதாக்கிக் கொள்ளுகின்றேன். 'நெருக்குதல்' என்ற விபத்தின்றி இக்கதைகளும், தொகுதியும் தமிழுக்கு என்றுமே சித்தித்திருக்கமாட்டாது. ஆக்கிமிடிஸ் தத்துவம் தொடக்கம், பென்ஸிலின் வரை எத்தனையோ விஞ்ஞானப் புதுமைகள் விபத்துக்களின் அறுவடைகளே! விபத்தின் பயனறுவடைகள் கலைவிவகாரத்திற்குப் பொருந்தாதா? பொருந்தும்'' என்ருர். மறுதினமே, இத்தொகுதிக்கான கதைகளை வரிசைப்படுத்தியும் சீர்ப்படுத்தியும் என்னிடம் கையளித்தார். ''என் வேலை முடிந்தது; இனித் தங்கள் பணி. கதைகள் எல்லாவற்றையும் ஒட்டுமொத்தமாகப் பார்வையிட்டு, விமர்சனப் பார்வையையுந் தங்கள் பதிப்புரையில் இணைத்துக் கொள்ளுங்கள். விமர்சனம் பிரசவக் கிரியையாகவும் கொள்ளப்படும் பொழுது, சூலின் காரணன் அங்கு பிரசன்னமாக இல்லாமலிருப்பது விரும்பத்தக்கது'' என்ருர்.

''முடியும்'' என்றவனின் பணி முடிந்தது. முடிக்க வேண்டியவனுடைய பணியின் தொடர்ச்சி!

எஸ். பொ. தொகுத்துத் தந்துள்ள 'காந்தீயக் கதைகள்' என்னும் இந்நூலினுல் ஈழத்துச் சிறுகதை இலக்கியம் மேலும் வளம்பெற வழி சமைந்துள்ளது என்பதிற் பெருமை. சம்பிரதாயமான பெருமை உணர்ச்சியன்று. ஏனைய சிறுகதைத் தொகுதிகளைப்

போல இஃது ஒரு பகுதியின் - வட்டத்தின் மனோ பாவத்தை மட்டும் பிரதிபலிக்கவில்லை. யாழ்ப்பாணம் - திருக்கோணமலை - மட்டக்களப்பு - மலைநாடு - கொழும்பு ஆகிய பல மாவட்டங்களைச் சேர்ந்த பிரதிநிதித்துவக் கதைஞரின் படைப்புகள் இடம் பெற்றுள்ளன. பழையவர் - புதியவர் ஆகியோருடைய படைப்புக்கள் சரியாசனம் பெற்றுள்ளன. இலக்கியப் போக்கிலும் பார்வையிலும் இக் கதைஞர்கள் மாறுபட்டவர்கள். சிலர் மரபுவாதிகள்; பிறர் புதுமைப் பிரேமிகள். பல மதங்களையுஞ் சார்ந்தவர்கள். எனவே, பல்வகை வகைத்தான வளங்களின் விளைச்சல் என்ற பெருமை சேருகின்றது.

'காந்தியடிகள் என்றதுமே அகிம்சை, சத்தியம், தீண்டாமை, மது விலக்கு என்ற நாலுமே நினைவுக்கு வரும்' என்ற முடிவுடன் தமிழகக் கதைஞரும், இலக்கியக் குணமாய்வாளரும் வழிகாட்டி விட்டார்கள் போலும்! இவற்றுக்கு அப்பாலுங் காந்தீயக் கொள்கைகள் பரந்துபட்டவை. இந்த உண்மையின் பிரக்ஞையுடன் நமது கதைஞர்கள் இலக்கியஞ் செய்துள்ளார்கள். காந்தீயக் கொள்கை என்ற ஒரு நரம்பினைத் தேர்ந்து, அந்த நரம்பின் சுருதியை ஒலித்துக் காட்டுவதினால், பத்து வேறு சுருதிக் கலவையினாற் பெறப்படும் இசையின் சுகம் இந்நூலிலே கிட்டுகின்றது. வேற்றுமையில் ஒற்றுமை என்ற வனப்பின் பெருமையும் இசைகின்றது.

மீனவன் - பஸ் கண்டக்டர் - தவறணைக்காரர் - பள்ளி ஆசிரியர் - அரசியல்வாதி - தொழிற்சங்கவாதி - தோட்டத் தொழிலாளி - புரட்சிவாதி - சமூக சேவையாளர் - ஹரிஜன் - நாவலாசிரியை ஆகிய பல்வகைப் பாத்திரங்கள்! தளங்களும் வேறு; வாழ்க்கை நெறிகளும் வேறு. தொடர்பற்ற தனித்துவர்கள். அவர்

களுடைய தனித்துவத்தைப் பிழிவதில், கதைகளின் தனித்துவ முத்திரை தெரிகிறது. சூரியனைச் சுற்றும் கோள்களைப் போல, கதாபாத்திரங்கள் காந்தீயக் கரு என்ற மையத்தைச் சுற்றுவதினால், ஒரே குடும்பத்தின் அங்கத்தவர்கள் என்ற ஒருமைப்பாடு சித்திக்கின்றது. ஒருமைப்பாட்டின் அமைதிக்கு காந்திஜியின் மேற்கோள்கள் கலைத்துவ நுட்பமுடன் பொருந்துகின்றன. இந்த உத்தியினால் முழுமையின் முழுத்துவத்தில் கதைஞரின் தனித்துவம் முகங்காட்டுவது சுவையாக உள்ளது. கடந்த நான்கு தசாப்தங்களாகத் தமிழகக் கதைஞர் காந்தீயக் கொள்கைகளை வைத்துக் கதை செய்துள்ளார்கள். அவை பிரசாரத்தை அடிநாதமாகக் கொண்டு எழுந்தவை. சான்று: காந்தி வழிக் கதைகள்! பிரசார வேகத்திற்குக் கலைத்துவத்தை அமுக்கும் பண்பு இருக்கிறது. இக்கதைகள் வேறு தளத்தவை. குறிப்பிட்ட பகைப்புலம் ஒன்றில் காந்தீயக் கொள்கையின் ஓர் அம்சத்தின் வெற்றி தோல்வியின் மதிப்பீடு என்பது தொனிப்பொருளின் உப விளைவு. எனவே, பிரசாரம் அமுங்கிக் கலைத்துவம் மேலோங்குகின்றது. இவ்வாறு, காந்தீயக் கதைகளுக்கு இவை இலக்கணம் வகுப்பதினாலும் பெருமை சேருகின்றது.

இங்கு, இச்சிறுகதைகளுக்கு அப்பால்—ஆனாலும், இவற்றுடன் நெருங்கிய தொடர்புடைய — ஒன்றினை அழுத்துதல் பொருந்தும். காந்தீயத்தைத் தமது வாழ்க்கையாக்கிக் கொண்டவர்களுள் மூத்த முதன்மையர் எல்லைக்காந்தி கான் அப்துல் கப்பார்கான் ஆவர். காந்திஜியின் கண்முன்னாலேயே, அவர் இந்தியக் குடியுரிமை இழந்து அந்நியராகும் துர்ப்பாக்கியம் அநுபவித்தவர். இருபத்திரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர், காந்தி நூற்றாண்டு விழாக்களிலே கலந்து கொள்ள இந்தியா சென்றுள்ள அந்த எண்பது வயதுக் கிழவர், ''இந்நாட்டிற்கும், இதன் மக்களுக்கும்

எவ்வளவு நீண்ட காலம் காந்திஜி சேவை செய்துள்ளார் என்பதையும், அவரை இவ்வளவு சீக்கிரம் மறந்துவிட்டார்கள் என்பதையும் காண மிகவும் மன வருத்தம் உண்டாகின்றது'' என மனம் உருகக் குறிப்பிட்டுள்ளார். காந்தீயம் பிறந்த மண்ணிலே அழிந்து, அந்நிய மண்களிலேதான் வேர் கொள்ளும் போலவுந் தோன்றுகின்றது. ''புத்தரின் அபாரமான கருணையைப் பாருங்கள்! அக்கருணை மனித வர்க்கத்தோடு நின்றுவிடவில்லை. எல்லா ஜீவராசிகளிடத்திலும் அக்கருணை பரவியது. அவருடைய தோள்களிலே ஆட்டுக்குட்டி ஆனந்தமாகப் படுத்திருப்பதை எண்ணும் பொழுது நம் உள்ளத்தில் அன்பு வெள்ளம் பொங்குகிறதல்லவா?'' எனக் காந்திஜியே வியந்த கருணாமூர்த்தி புத்தரின் போதனைகள்கூட இந்திய மண்ணிலே ஒட்டவில்லை. ஆனால், ஈழம் உட்பட வேறு நாடுகளில் பௌத்தம் பெரும்பான்மையோர் மதமாக நிலை கொண்டுள்ளது. பௌத்தம் ராஜாங்கமதமாகியுள்ள இலங்கையில் காந்தீயம் எவ்வாறு வேரூன்றியுள்ளது என்பதைக் கதைஞர்கள் நேர்மையுடன் யதார்த்தமாகச் சித்திரித்துள்ளார்கள். ஒரு கதைமட்டும் யதார்த்தத்திற்கு அப்பாலுள்ள நம்பிக்கைத் தளத்தில் அமைந்துள்ளது. இந்த விதிவிலக்குக்கூடப் பொதுவான விதியை வலியுறுத்தவே உதவுகின்றது.

இந்தக் கதைகளனைத்தும் தொகுதிக்காக என்ற பிரக்ஞைத் தளத்தில் எழுதப்பட்டு, பத்திரிகைகளிலே பிரசுரிக்கப்படாமல், முதன் முதலாக இத்தொகுதியிலேதான் இடம்பெறுகின்றன. புத்தம் புதிய கதைகளை அடக்கி வெளிவரும் முதலாவது கதைத் தொகுதி இதுவேயாகும். எத்தனை நந்திகள் வழி மறித்தாலும், 'இச'ங்களில் ஈடுபாடுடைய இலக்கியக் குணமாய் வாளர் தமது அளவுகோல்களைக் கொண்டு அளந்து

பார்த்துத் தமது உதடுகளைப் பிதுக்கி எதையோ 'கண்டுபிடித்த' தாக அபிநயித்தாலும், இச்சிறுகதைத் தொகுதி ஈழத்துக் கதைஞரின் பிரக்ஞை பூர்வமான இலக்கிய ஆக்கமாக அமைந்து, இலக்கிய வரலாற்றில் நிச்சயமான இடத்தைப்பெறும் என்பதினுலும் பெருமை உண்டாகின்றது

இந்தப் பெருமைகளுக்குக் கால்கோளாக நின்றுழைத்த எஸ். பொ வுக்கும், அவருடைய 'நெருக்குதலுக்கு' மசிந்து மிகக் குறுகிய கால அவகாசத்தில் இவற்றைப் படைத்துதவிய எழுத்தாள நண்பர்களுக்கும் 'இளம்பிறை' சார்பாக என் உளமார்ந்த நன்றிகள். குறுகிய காலத்தின் நெடிய பணி. எனவே, சக அச்சக அன்பர்களுடைய ஒத்துழைப்பை நாட நேர்ந்தது. இந்நூலின் கதைப்பகுதிகள் முழுவதும் ரஞ்சனு அச்சகத்தில் அச்சிடப்பட்டன. ரஞ்சனு அதிபர் ஆ. நடராசா அவர்கள் தமிழ் நெஞ்சினர்; தமிழ்ப் பணிகளிலே முந்தி நிற்கும் இயல்பினர். நமது சிரமங்களைப் புரிந்து, மன உவப்புடன் உதவியை இயற்றித் தந்தார். அவர் நல்கிய இனிய ஒத்துழைப்பு என்றும் என் நினைவில் நிலைக்கும்.

இனி, கதைகளின் உங்கள் சுவைப்பு. அதன் நிறைவே, இப்பணியின் இலக்கியக் குறிக்கோளுமாம்.

**எம். ஏ. ரஹ்மான்**

ஆர். பாலகிருஷ்ணன்

# தர்மத் தூது

"பிறந்து சில மாதங்களே ஆன குழந்தையுடன் என் மனைவியை விட்டு விட்டு, என் தாயாரின் அனுமதியையும் ஆசிர்வாதங்களையும் பெற்றுக் கொண்டு குதூகலமாகப் பம்பாய்க்குப் புறப்பட்டேன். அங்கே போய்ச் சேர்ந்ததும், ஜூன், ஜூலை மாதங்களில் இந்து மகாசமுத்திரத்தில் கொந்தளிப்பு அதிகமாக இருக்குமென்றும், நான் இப்பொழுதுதான் முதல் முறையாகக் கப்பல் பிரயாணம் செய்வதால் நவம்பர் மாதம் வரையில் நான் கப்பலேற அனுமதிக்கக் கூடாது என்றும் நண்பர்கள் என் சகோதரரிடம் கூறினர். 'இப்பொழுதுதான் புயல் காற்றினால் ஒரு கப்பல் முழ்கிவிட்டது' என்றும் யாரோ சொன்னார்கள். இதனால் என் சகோதரருக்கு மனக் கலக்கம் உண்டாயிற்று. உடனே கப்பல் பிரயாணம் செய்ய என்னை அனுமதிக்கும் அபாயத்திற்கு உடன்பட அவர் மறுத்து விட்டார்."

தினமும் பொழுது சாய்ந்த பின்னர் கடலுக்குப் போகவேண்டியவர்கள் சூசையும் சகாக்களும். கடற்கரையில் காற்று வாங்குவதற்காக வந்திருப்போர் இருட்டிய பின்னர் தங்குவதில்லை. ராணுவ ரோந்து சற்றுக் கெடுபிடியாக இருப்பது அவர்களுக்குத் தெரியும். ஆனால் சூசையோ அவனது கூட்டுத் தொழிலாளிகளோ இவ்வாறு செய்யமுடியுமா? வயிற்றுப் பிழைப்பிற்காக பரம்பரை பரம்பரையாகக் கடலன்னையிடம் தஞ்சம் புகுந்தவர்கள் அவர்கள்.

> "எங்கள் கையால் நாங்களே செய்து கொண்ட துணிகளைத்தான் நாங்கள் உடுத்த வேண்டும் என்பதே நாங்கள் கொண்ட லட்சியம். இந்தியாவில் தயாரான நூலைக்கொண்டு கையினுல் நெய்த துணிகளை மாத்திரமே அணிவது என்று ஆசிரமத்தைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் தீர்மானித்துக் கொண்டோம்."

தொழில் முறையிலே ஒரு புரட்சி புகுந்திருக்கும் காலம். யந்திரமில்லாத கட்டுமரம் ஒன்றுகூடக் கடற்கரையிற் கிடையாது. நைலோன் வலைகள் தம் ஆக்கிரமிப்பைக் காட்டி வெள்ளை மணலில் விரிந்து கிடக்கின்றன. எண்ணெய்த் தகரத்தைக் கையிற் சுமந்த வண்ணம் சூசையின் மருமகன் வருகிறுன். அவனும் கட்டுமரத்திற் போகவேண்டியவன். 'அவுட்போட் மோட்டரை'ப் பராமரிப்பதிற் கைதேர்ந்தவன். யந்திரத்தை அவனது பொறுப்பிலேயே விட்டு வைத்திருக்கிறுன் சூசை.

சும்மா சொல்லப்படாது. நவீன நாகரிகத்தை எப்படி வேண்டுமானுலும் பழிக்கலாம். ஆனுல், மீனவர்க்கு 'நைலோன் புரட்சி' செய்துள்ள நன்மை கொஞ்ச நஞ்சமல்ல. வருடக் கணக்காக நாளெல்லாம் கடலோடு போராடியும் ஈட்டிற் கிடந்த வளவை மீட்க முடியாது தவித்தவன் சூசை. இப்பொழுது அதிலேயே ஒரு வீடு அமெரிக்கன் பற்

றேனில் கட்டி தனது ஒரே மகளுக்குச் சீதனமாகக் கொடுத்திருக்கிறுன்.

ஒரு குஜராத்திப்பாடல் என் அறிவையும் உள்ளத்தையும் கொள்ளை கொண்டது.

... ... .... ...... ...

உண்ணும் நீர் தந்த ஒருவனுக்குக்
கைமாருய்
விண்ணமுதைப்போல் அன்னம் விரும்பிப்
படைத்திடுவாய்.
அன்போடு கும்பிட்டால் அடிபணிந்து நீ
தொழுவாய்.
செம்பான காசுக்குச் செம்பொன்னைத்
தந்திடுவாய்.

அவள் இரவுச் சாப்பாட்டைக் கட்டிக் கொடுத்தாள். மாதாகோயில் திருந்தாதி ஒலிக்கின்றது. 'பிதாவினதும் சுதனினதும், இஸ்பிரிஸ்து சாந்துவினதும் நாமத்தில் என் யேசுவே'... சிலுவை அடையாளமிட்டபடி கடற்கரைக்கு விரைகின்றுன்.. பிரயாண முஸ்தீப்பு... அவை அவை வைக்கப்படவேண்டிய இடங்களில் வைக்கப்படுகின்றன. கட்டுக்களை இறுக்கிக் கொள்கிறுன் சூசை. சற்று நேரத்தில் கட்டுமரம் நீரைக் கிழித்துக்கொண்டு முன்னேறுகின்றது.

காலையில் கடற்கரையிலே பெரிய கூட்டம் திமிலோகப்படுகின்றது. சூசையும் மருமகனும் கட்டுமரத்தைக் கொண்டுவந்து சேர்த்த இடத்திலே பெரும் பரபரப்பு ...

இருட்டோடு திரும்பியவாறே சூசையும் மருமகனும் கரையோரத்தில் ஏதோ புலப்படவே நெருங்கிப் பார்த்தனர். ஒரு பிணம் கடலில் மிதக்கிறது. தூரத்தில் வரும்போதே சூசை பார்த்துவிட்டான். கொலையோ? தற்கொலையோ?

கரைக்கு வந்ததும் செய்ய வேண்டிய வேலை தலைக்கு மேலே. சூசையோ அந்தப் பிணத்தைப்போய்ப் பார்க்க வேண்டுமென்று ஓடினன். மருமகனுக்குப் பிடிக்கவேயில்லை. ''எங்கடை வேலையைப்பார்க்க நேரத்தைக் காணன் ஏன் இந்த ஊராவீட்டுச் சனியனை விலைக்கு வாங்க வேணும்?'' என்று மருமகன் புறுபுறுக்கிறன். ''பிணமல்லே தம்பி? யாரின்ரை எண்டாலும் அந்தரிக்க விட்டிட்டுப் போறது முறையே? என்ன அநியாயம் நடந்திருக்கோ? மனுஷன் மாஞ்சாதி எண்டால் உதுகளுக்குத்தானே உதவவேணும்'' என்று கூறிய சூசை பிணம் கிடக்கும் 'தப்புத் தண்ணி'யை நோக்கி நடக்கின்றன்.

கூட்டமும் பரபரப்பும் கதிரவன் உதயத்தோடு அதிக மாயின.

''இது கொலையாத்தான் இருக்கும்..''

''ஓமோம் மேலிலை அடிகாயங்களும் இருக்கு ''

''எந்தப் பாவியள் செய்த வேலையோ ''

''உது கந்தையனல்லே குடிச்சுப்போட்டுப் புசத்தித் திரிவானே தவிர ஒருதரின்ரை அல்லுத் தொல்லைக்கும் போறேல்லை பாவம் .''

''இனி என்ன பொலிசுக்குப் போய் ஆரேன் சொல்லத் தானே வேணும் ?''

பொலிஸ் என்றதும் பலரது பேச்சுக்களிலும் ஆராய்ச்சி களிலும் காணப்பட்ட காரசாரம் குறைந்தது. ஒவ்வொரு வருக்கும் ஏதோ ஒரு அவசரவேலை எப்படியோ தோன்றி யது. கூட்டம் கலைந்தது. சூசையும் மருமகனும் நிற் கிறர்கள்.

''இப்படியே விட்டிட்டுப்போனல்,... என்ன செய் யிறது? வா, போவம்... பொலிசுக்கு...'' என்று மனிதாபி மானத்துடன் சூசை கூறுகின்றன்.

பொலிஸ் ஸ்ரேஷனுக்கு வந்து சேர்ந்து வெகு நேரமாகி விட்டது. விசாரிக்கும் உத்தியோகத்தர் இன்னும் வர வில்லே. காத்திருக்கிருர்கள்.

தென்னுபிரிக்காவில் பொது இலா காக்கள் மக்களின் நன்மைக்கு என்றே இருந் தன. அவை பொதுஜன அபிப்பிராயத்திற் கும் பதில் சொல்லக் கடமைப்பட்டவை. ஆகையால் அதிகாரிகள் மரியாதையுடனும் அடக்கத்தோடும் நடந்து கொள்வார்கள்...

ஆசியாவிலிருந்து அதிகாரிகள் வந்து சேர்ந்ததும் அவர்களுடன் எதேச்சாதி காரமும், அங்கே எதேச்சாதிகாரிகள் பெற்றி ருந்த பழக்கங்களும் கூடவே வந்துவிட்டன.''

தான் கண்டதைச் சொல்ல வேண்டியது தனது கடமையென்று நம்பியே சூசை வந்திருந்தான். தகவல் கொடுத்து விட்டால் தனது பொறுப்பு முடிந்தது. அதற்கு மேல் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள் என்றெல்லாம் நினைத்திருந்தான் சூசை. பொலிஸ் ஸ்ரேஷ னிலே இப்படியெல்லாம் குறுக்கு விசாரணையெல்லாம் நடக்கு மென்பது எப்பொழுதாவது வந்திருந்தாலல்லவா தெரியும்?

''பிதந்ததை யார் முதலிலே கண்டது?''

''நான்தான் பார்த்தேன்''

''வெளிச்சம் நல்லாயிருந்ததா!''

''இல்லே வெள்ளி பூத்திருந்த வெளிச்சந்தான்.''

''அந்த வெளிச்சத்தில் எவ்வளவு தூரத்திற்கு உன் ஞல் பார்க்க முடிந்தது?...''

''ஞாயமான தூரத்திற்கு ''

''ஞாயமான தூரமெண்டால்?''

சூசை இதையெல்லாம் அளந்து வைத்திருந்தானா?

''சரி இங்கை வந்து பொய் சொல்லப்படாது. தெரியுதா? உனக்குத் தெரிந்தது அது என்ன என்று நினைத்தாய்?''

''ஏதோ பிரேதம் ஒன்று மிதப்பது தெரிந்தது...''

''பார்த்தவுடன் உனக்கு அது மனிதனென்று விளங்கிப் போயிட்டுது ஆ அப்படித்தானே...''

''ஓம், ஐயா, நல்ல தெளிவாக .''

''ஏன் அதை மரக்கட்டை யென்று நினைக்கவில்லை?''

சூசை இக்கேள்வியைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. இப்படிக் குறுக்குக் கேள்வி அவனுடைய பாமர நெஞ்சத்தில் எழவும் இல்லை.

''உனக்கு எல்லா சங்கதியளும் நேரகாலத்தோடை தெரியும் போலை... இஞ்சை உண்மையைச் சொல்லு... உண்மையைச் சொன்னால் அடிக்க மாட்டம்.''

சூசை வேறு உண்மையை அறிந்திருக்கவுமில்லை.

''இரவு கடலுக்குப் போறதுக்கு முந்தி அவனோடை போய்க் குடிச்சிட்டு வாய்த்தர்க்கப் பட்டனியல்லே?''

''கண்ணாணை நான் ஒரு நாளும் அவனோடை குடிச்சதில்லை ''

''எப்ப நீ அவனை முதல் முதலாகக் கண்டனீ?''

''விடியப்புறந்தான் முதன் முதலாகக் கண்டனான் '' சூசையின் குரல் கம்மிற்று.

''ஏன் கொலையெண்டு நினைச்சனீ ''

''மேலிலே அடிகாயம் கிடக்குது ''

''யாரோடையேன் அடிபட்டு, அந்த ரோஷத்திலே வந்து கடலிலே விழுந்து தற்கொலை செய்திருக்கலாமில்லையே...''

சூசையின் குரல் கம்முவதும், பொலிஸ் உத்தியோகத்தரின் குரல் கடினமாவதும் வெளிவிறாந்தையிலுள்ள வாங்கில் அமர்ந்திருந்த மருமகனுக்குத் தெரிகின்றது.

சூசையின் உள்ளத்தில் உண்மை கலங்குகின்றது.

> "அரிச்சந்திரன் என்னும் நாடகம் என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது, எத்தனை தரம் பார்த்தாலும் எனக்குச் சலிப்பு ஏற்படாது....
> 'அரிச்சந்திரனைப் போல எல்லோரும் ஏன் சத்திய சீலர்களாகக் கூடாது' என்று அல்லும் பகலும் என்னை நானே கேட்டுக்கொள்வேன். சத்தியத்தைக் கடைப்பிடிப்பதும், அதற்காக அரிச்சந்திரன் அனுபவித்த துன்பங்களையெல்லாம் அனுபவிப்பதுமாகிய லட்சியமே ஒரு புத்துணர்ச்சியை உண்டாக்கியது.''

**கட்டுமரம் நிறையக் கொண்டு வந்த மீனைப்** பற்றிய ஞாபகம் மருமகனின் உள்ளத்திலே பளிச்சிடுகின்றது. 'எக்கணம் நாறிப் போகும்'.

''சூசை, உண்மை சொல்லப் போறியோ, அல்லது எங்கடை முறையிலை உண்மையைக் கறந்தெடுக்கட்டுமே? என்னைத் தெரியும்தானே?'' என்று உரப்பிய பொலிஸ் உத்தியோகத்தர், எச்சரிப்பதைப் போல, குண்டாந்தடியை எடுத்து மேஜையிலே ஓங்கி அறைந்தார்!

தேவன் - யாழ்ப்பாணம்

# சத்திய சாதனை

"காந்தி சொன்னர்........"

ஒலி பெருக்கியில் குரல் கேட்கிறது. அவர் கதராடையும் சால்வையும் அணிந்தவர்தான். ஆனாலென்ன?

சொல்லலாம் சொன்னபடி வாழ்வது?
காந்தி சொல் வீரரல்ல, செயல்வீரர்.

வாய்மை, சத்தியம், நேர்மை, கற்பு வெறும் வார்த்தைகளா இவை? அல்ல. அரிச் சந்திரன் என்ெருரு மன்னன் வாழ்ந்ததும் பொய் சொல்ல மறுத்ததும் காசிநகர் வீதியில் மனைவியையும் மகனையும் விலை கூறி விற்றதும் மயானம் காத்ததும் — அந்த நாடகத்தை ஒரு தடவையா, இருதடவையா — எத்தனையோ தடவை பார்த்திருக்கிருன். அரிச் சந்திரனுக அந்த நடிகன் வைரமுத்து—அவனை யார் கண்டார்கள்? வீட்டில் அவன் கதை என்

ளவோ? — மேடையில் அவன் மூலம் அரிச் சந்திரனையே மக்கள் கண்டார்கள். கண்ணீரு குத்தார்கள் பின்னர் வீட்டுக்குப் போனுர்கள். அவனும்தான். காந்தியும் கூட எப்பொழுதோ இளவயதில் இந்த நாடகத்தைப் பார்த்தார். மனத்தில் பதிந்து விட்டது போதனை...... எத் தனையோ லட்சியங்கள்? எல்லோருமே காந்தி யாகி விட்டால் உலகம்?

எண்ண நறுக்குகள் அதன் போக்கில் மணியத் தின் நெஞ்சிலே தைத்தன. அவன் மெத்தப் படித்தவனு மல்ல. பெரியவனுமல்ல. பஸ்கண்டக்டர். ஆனுல், அவனு டைய வாழ்வும் ஒரு சத்திய சோதனைதான். இளமையிலி ருந்தே அவனுக்கு சுற்றிலும் காணப்பட்ட யதார்த்த உல கம் தான் கற்றது, கற்பனை பண்ணியது எல்லாவற்றுக்கும் முரணுனதாகவே காணப்பட்டது. செல்வச்சீமான்கள் சுக போக வாழ்வில் வறிய சேரிச் சகதியில் உழலும் மாந் தர் மத்தியில்... இன்பம் உண்டோ, இல்லையோ — நிம்மதி உண்டோ, இல்லையோ மணியம் கவலையுறும், காலெ டுத்து வைக்கும் போதெல்லாம் கால்கட்டாய்த்தென்படும் ஒழுக்கம், சீலம், நெறி, பண்பு என்ஞென்றும் கிடையாது.

இரண்டு நாள்களுக்கு முன் தன் கடைசிக் குழந் தையை மாமியார் வீட்டில் பார்க்கப் போயிருந்தான். அவ னுடைய மனைவியின் தங்கை எழில் கொஞ்சும் அரம்பை யாக அலங்கரித்துக் கோப்பிக் கோப்பையுடன் முன்னுல் வந்து நின்றபோது, வரப்போவதை அவனுல் ஊகிக்க முடி யாமலிருக்கவில்லை. இன்றெழுந்த பிரச்சினையல்ல. சூசகமாக பட்டும் படாமலும், மெதுவாக ஓதப்பட்டு வந்த சங்கதிகள் அவனுக்குப் புரியாமலிருக்க அவன் முட்டாள் அல்லவே! எட்டி ஒட்டிப்பார்த்தவள், தட்டி முட்டிப் பட்டுச் செல்லத் தொடங்கியது தூண்டுதலும் காரணமும் இல்லாமல் அல்ல.

மனச்சாட்சி என்று ஒன்றிருக்கிற தல்லவா? அவன் பார்த்த தொழில் நீதிமன்ற அனுபவத்தை அவனுக்கு நிறையக் கொடுத் திருந்தது. சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொள்வதும், வெளியே 'மனச்சாட்சிக்கு விரோதமாய் எப்படிச் சொல்வது?' என்பதும், கடைசியாக விசாரணையின் போது முழுப் பூசணிக்காயை சோற்றுக்குள் மறைப்பதும் .. ஏன் தான் சிலரை இப்படி தேவையற்ற சிந் தனையில் பொழுதைப்போக்கி, உக்கிஉலர்ந்து பாழாகும்படி பரமன் படைத்தானோ? நீதி மன்றத்தில் ஏறி நின்று ''எல்லோருக்கும் மேலே ஒருவன் இருக்கிறான். அவன் தீர்ப்பு வழங்கும் போது... '' என்று நீதிபதிக்கே எச் சரிக்கை விடுத்த ஒருவர். யார் அவர்? வேறு யாருமல்ல. மகாத்மா காந்திதான். ஆயிரத் தில் ஒருவர். அல்லது ஆயிரம் வருடங்களுக்கு ஒருவர் தான் அப்படித் தோன்றுவாரோ? உள் ளத்தில் ஊறிய நம்பிக்கை, பலம், விசுவாசம் எதனால் விளைந்தது?

வெறும் உதட்டுச் சேவை செய்யும் பிரசாரகர் கூட்டத்தில் ஒருவராக... மது விலக்குக் கூட்டத்தில் பேசிய அலுப்புத் தீர தவறணைக்கு ஓட்டம் பிடிப்பவராக . வள் ளுவன் விழாவில் புலாலுண்ணாமைபற்றி நீட்டி முழக்கி விட்டு இறைச்சிக் கடைக்கு நடை யைக் கட்டுபவராக...... சமத்துவம், சகோ தரத்துவம் பேசி விட்டு ... சீ! இப்படியே நீண்டு கொண்டு போகும் பட்டியல்தானே இன்றைய இளைஞர் மத்தியில் அவநம்பிக் கையை, விரக்தியை, வெறுப்பை, அடங்காப்

பிடாரித்தனத்தை, அவிழ்த்து விட்ட கடா மாட்டு சிவியத்தைப் பரப்புகிறது? உள்ளத்தில் இருட்டு. வாக்கில் ஒளி பிறக்குமா?

சொந்தப்பிரச்சினை பூதகரமாய் தலைதூக்கி நிற்கிறது. இப்போது வயதென்ன? முப்பத்தெட்டோ, முப்பத்தொன்பதுதான். ஆனால் கடைசிக் குழந்தையைப் பெற்றதோடு அவனுடைய மனைவி காலனுக் கிரையாகி விட்டாள். அவனுடைய மூத்தது இரண்டும் பாடசாலைக்குப் போய் வந்து கொண்டிருக்கிறார்கள். இந்தக் கைக்குழந்தையைப் பாரமரிக்க அவனுடைய வீட்டில் ஒரு பெண் புரசு இல்லை. முடியுமானால் மாமியார் வீட்டைத் தவிர்த்திருக்கலாம். ஆனால் வேறு கதியில்லை.

அவளோடு வாழ்ந்த போது...... எத்தனையோ இன்ப நினைவுகள். அவளுடைய குழிவிழும் கன்னங்களைப் பார்த்து, வெறி கொண்டு, தான் உளறிய வார்த்தைகள்! காப்பாற்றப்பட வேண்டியவைதான். வேடிக்கைக்கு ஒரு பேச்சு, உண்மைக்கு இன்னொன்று என்றும் இருக்க முடியுமா? தன் குழந்தை காலையில் வேலைக்குப் புறப்படும்போது 'வருப்போது பீஸ்கட், அப்பா' என்றால் 'ஓம்' என்று கூறி விட்டு, மறந்து போனால் அவன்படும் நரகவேதனை. பிள்ளையாவது மறந்து விடுமென்று எதிர்பாத்தால், அவளுக்கு உலகம் மிகச்சிறியது. ஞாபகத்தில் திணிப்பதற்கு உள்ளவை கொஞ்சம். அதிலும் 'பீஸ்கட்' விஷயம் மிகமுக்கியமானது. ஆகவே வீடுதிரும்பும் போது கேட்கும் முதற்குரல் 'அப்பா, பீஸ்கட் கொண்டாந்தியலா?' போதும். வார்த்தை வழுவிய வேதனையா, வாஞ்சை ஊட்டிய மன வருத்தமா? இதை 'அவள்' அறிவாள் போலும். அவள் எதையாவது பேசினால் அல்லவோ—எது அவளுக்குத் தெரியும், எது தெரியாது என்று நிர்ணயிக்க முடியும். அவள் எதையும் கேட்டதில்லை, அவள் ஒப்புக் கொண்டதில்லை,

அப்புறம் மறந்ததில்லை. அவள் வரையில் அரிச்சந்திரன் வாக்குறுதி கொடுத்தலெல்லவோ மீறுவதற்கு.

## அவளுடைய இடத்தில்......

ஒரு சலனம், சபலம்... தங்கைதானே? வயதும் அதிகமாகி விடவில்லை. மூன்று குழந்தைகளில் ஒன்று கைக்குழந்தை. பார்க்க, மேய்க்க ஒரு ஆள் வேண்டும்
ஆனால் வாயும் வயிறும் வேறுதானே? தன் வயிற்றில் ஒன்று தோன்றி விட்டால் அப்புறம் அக்கா, தங்கை என்பதெல்லாம்... இதுகளின் பாடு, இதுகளுக்கு ஒன்று என்றால்
அவள்... அவள்!! காற்றாய் கரியாய் போய் விட்டாலும் கூட

அந்த டாக்டர் நல்லவர். ஆனமட்டும் பார்த்தார். முடியாது என்றதும் அவனை அவளருகே யிருக்க அனுமதித்து விட்டார். அவள் பேசுவதே குறைவு. இந்த நிலையில்...... விழிகளில் தேங்கி நின்ற வினா...... அதற்கு வார்த்தைகளால் பதில் சொன்னானோ, அல்லது மனத்தந்தியில் பேசினானோ? ஒரு குறையும் வராது, நான் பார்த்துக் கொள்வேன் என்றால்........

அந்த நிமிஷம், அந்த நேரம் மறுமணம் செய்ய மாட்டேன் என்ற மனோ வைராக்கியம், திட சித்தம் அதற்குள் அடக்கம்.

அது கூடப்பரவாயில்லை. 'உன்னைத்தவிர வேறு யாரையும் முன்னும் சரி பின்னும் சரி... இப்படியெல்லாம் ஏன் பேசினான் என்பது இன்று வியப்பாக இருக்கிறது. அவள் கேட்டாளா?

குழைந்து, துவண்டு, நெளிந்து, புரண்டு இதய மொழி பேசும் அவளிடம்...... பேசினால்தானா பெருமதி? மனத்தால் நினைத்தால்... மனம், வாக்கு, காயத்தினால்......

நினைவுச் சுழலில் ஆலமரமொன்றின் கீழ் ஒரு பிச்சைக்காரனைப் பார்த்ததும், அவனுக்கு ஏதாவது கொடுக்க வேணு மென்று நினைத்ததும்

உடனே ஏன் செய்யவில்லை? பின்னர் அந்தப் பிச்சைக்காரனை அங்கு காணவில்லை. செத்துப்போனானோ, யாராவது உறவினர் அழைத்துச் சென்றனரோ, வயோதிபர் விடுதிச் சாலையை நாடினானோ, அல்லது புதிய இடம் தேடிப் போனானோ? யாருக்கும் தெரியாது. மணியத்துக்கு 'திக்' கென்றது. நொந்தது. மனதைக் குடைந்தது.

தாய்க்குக் கொடுத்த வாக்குறுதியை பாடுபட்டு எத்தனையோ சோதனைகளுக்கு மத்தியில் பேணிக் காத்து 'ஒரு அசகாய சூரத்தனத்தை சாதித்துவிட்டேன்' என்று பெருமையுடன் கட்டியம் கூற வந்த காந்தி, அன்னை மறைந்து விட்டாள் என்றதும், அவருக்குக் கொடுத்த வாக்குறுதியையே வாழ் நாள் முழுவதும் அனுஷ்டிக்கும் விரதமாய் மேற்கொண்டார். தாய்க்கு நோட்டெழுதிக் கொடுத்தாரா, சாட்சிகள் நாலு பேருக்கு முன்னால் சத்தியம் செய்தாரா? இல்லையே.

சந்தர்ப்பம், சூழ்நிலை எல்லாமே ஒன்று கூடி மணியத்தைத் திணறடிக்கின்றன. அந்தக் கைக்குழந்தையைக் காட்டி 'எத்தனை நாளைக்கு?' என்று கேட்கிறவர்களுடைய வாயை மூடும்படி ஒரு பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. அதற்கு......

கஸ்தூரிபாயைத் தவிர இன்னெரு பெண்ணை ஏறெடுத்தும் பார்க்காத காந்தியெங்கே, மணியத்தைப் போன்ற மனிதப் புழுக்களெங்கே! உண்மையே தெய்வம் — இது காந்தியின் வேதம்.

உண்மையென்றால்...... அவளுக்குச் சொன்னவை போலியாய், பொய்யாய், பசப்பாய், மாய்மாலமாய் ஆகக்கூடாது. படைத்தவன் படியளக்காமலா விடுகிறான்? கல்லினுள் தேரைக்கும் கருப்பையுள் சிசுவுக்கும் இப்படியெல்லாம் சிந்திக்கக் கூடாது. மனித யத்தனம் என்றொன் றிருக்கிறதல்லவா? வாழ்க்கையொரு போராட்டம். கோழையாய் பயந்து ஒதுங்குகிறவன் வாழ ஏன்விரும்ப வேண்டும்? உடல் வலிமையிருந்து பிரயோசனமில்லை. மனோ வைராக்கியம் ...

'அற்ப விஷயம். அலட்டிக் கொள்கிறாய். அவனைப்பார் இவனைப்பார்' 'துரோகமல்ல. நன்மையே நீ செய்கிறாய்' 'அவளுடைய விருப்பங்களை நிறைவேற்றத் தயங்குகிறாய்' 'உனக்குப் பின்னடியிலை வரப்போற கஷ்டங்களை உணர ஏலேல்லை' 'இப்ப அப்படித்தானிருக்கும். போகப் போக எல்லாம் சரியாய்ப் போய்விடும்'

அடிமேல் அடிவிழுகிறது. தகடு நெளிகிறது. உருக்கு நிமிர்ந்து நிற்கிறது. அடி தாங்கா விட்டால் உடையும், வளையாது. ''உங்களுக்குப் பிள்ளையைப் பாக்கிறது இடைஞ்சலாயிருந்தால், என்னட்டைத் தாருங்கோ''

''நாங்கள் அதுக்குச் சொல்லேயில்லை.''

"காந்தி சொன்னார்'' — ஒலிபெருக்கி.

**மணியம் செய்தான்.**

மணியம் மகாத்மாவானான் — தனக்குள்ளே. மலை யென உயர்ந்தான். மனித இனத்துள் ஒரு தெய்வம், பொய்யா விளக்கு.

இராஜநாயகன்

# ஓநாய்கள் கவனம்

வாசலை நெருங்குவதற்கு ஏழு எட்டு அடிகள் இருக்கும் போதே, காலணிகளை ஒதுக்குப் புறமாகக் கழற்றி விட்டு, உள்ளத்தைப் புனிதமாக்கி, ஒன்றுபட்ட மனத் தோடு ஆச்சிரமத்தை நோக்கி அடி எடுத்து வைத்த என் பவித்திரத்திலேயே நான் மிதந்து செல்கிறேன். அந்த நிலை யில், என்கூட எனக்குப் பக்கத்தில் வந்து கொண்டிருந்த நண்பர்கள், என்னைப் பொறுத்த வரையில் அங்கில்லை.

உள்ளே நுழைகிறேன்.

''வாருங்கள்'' என்று வரவேற்கும் ஒரு குரல் என் காதுப் பறைகளை மெதுவாய்ச் சீண்டுகிறது.

யாழ்ப்பாணத்திலே சர்வ மதத்தினரும் தலைவணங் கும் ஆதமீகமாய், அந்த ஆத்மீகத்திலே தன் பூர்வாசிரமத் தையே மறந்து விட்டுத் துல்லியமான ஓர் ஒளியாய் விளங் கிய 'பிள்ளையார் சுவாமி'யின் ஆச்சிரமத்துள் நான் நிற்கி றேன்.

நடுவிலே புகைந்து கொண்டிருந்த ஊதுபத்திக் கற்றை யின் நறுமணத்தையும், புதிதாகச் சாணத்தால் மெழுகிடப்

பட்டிருந்த தளத்தின் வாசனையையும் பிய்த்துக் கொண்டு, என் மூக்கில் ஆத்மீகம் பரிமளித்தது. கண்கள், அந்த ஆத்மீகத்தின் மூலத்தைத் தேடி, நான்கு ஓரங்களையும் இரண்டு முறை சுற்றி வந்து அதைக் காணாத ஏக்கத்தில் அங்கிருந்தோர் மேல் படிந்தன.

தெருவோரத்திலே, ஒழுங்கையிலே நெடுஞ்சாணையாய்க் கிடந்து கால்களைத் தொட்டுக் கண்களில் வைத்துக் கொள்கிற பக்தர்களுக்கு, அவரவர் பக்குவத்துக்குத் தக்கபடி, ஆத்மீகத்தையோ - லௌகீகத்தையோ, ஆசியாக - வசையாக வழங்கி நிற்கும் அந்தப் புரியாத புதிரைக் காண என்னுள் வளர்ந்து நின்ற ஆவல் இப்பொழுது கரைந்து கொண்டிருந்தது.

அரையிலே வரிந்து கட்டியிருந்த சால்வைகளோடு பல பெரிய மனிதர்கள் ஒரு புறமாக ஏதேதோ மெல்லிய குரலில் பேசிக் கொண்டிருந்தார்கள்.

நானும், என்னோடு வந்த நண்பர்களும், அங்கு முன்னரே வந்து கூடியிருந்த, எங்களுக்குத் தெரிந்த சிலரோடு ஒரு பக்கத்தில் அமர்ந்து கொண்டோம்.

எதிர்பார்ப்பு, அந்த ஆச்சிரமத்தின் புனிதமான சூழலிலே, நிமிஷங்களின் கழிவிலே பெருமலையாய்க் கனத்தது.

அரையிலிருந்த சால்வையை அவிழ்த்து, மறுபடியும் இறுக வரிந்து கட்டிக் கொண்டே எழுந்து நின்ற ஒரு பெரிய மனிதர், ஒரு கல்லூரியில் அதிபராயிருந்து இளைப்பாறியவர், சுவாமிகள் இருக்கிற மான்தோல் ஆசனத்தைப் பார்த்து வணக்கஞ் செலுத்தி விட்டு ஆரம்பித்தார்.

''சுவாமிகளின் ஆசீர்வாதத்தோடு நாம் தொடங்கப் போகிற புனிதமான சேவைக்குரிய இந்த ஆலோசனைக் கூட்டத்தைத் தேவார பாராயணத்தோடு தொடங்குவோம்.''

எனக்குப் பக்கத்திலிருந்த ஒருவரை அதிபர் பார்க்க, அவர் எழுந்து நின்று, ''திருச்சிற்றம்பலம்'' என்று தேவார பாராயணத்தைத் தொடங்குகிறார். எல்லோரும், என்னோடு வந்த ஒரு கத்தோலிக்க நண்பர் உட்பட, எழுந்து நிற்கிறோம்.

இறுதியில், ''எல்லா உயிர்க்கும் இறைவாபோற்றி'' என்று அங்கு நிலவிய புனிதத்தையே புனிதமாக்கி அமர்ந்தோம்.

நின்று கொண்டேயிருந்த அதிபர் மறுபடியும் தொடங்கினார்.

''சுவாமிகளின் ஆசீர்வாதத்தோடு இந்தப் பெரிய கைங்கரியத்தை, புனிதமான இத்தொண்டை ஆரம்பிக்கிற இந்தச் சந்தர்ப்பத்திலே, சுவாமிகள் இங்கு பிரத்தியக்ஷமாக இல்லாவிட்டாலும் கூட, அவரது ஆசியும் கருணையும் எங்கள் மேல் கவிந்து, எம்மை வழி நடத்தி, வெற்றிதரும் என்பதில் எனக்கும், இங்குள்ள நண்பர்களுக்கும் அசைக்க முடியாத நம்பிக்கையுண்டு. 'எங்கும் பிரகாசமாய்' இருக்கும் எங்கள் நடமாடுந் தெய்வத்தின் 'அலகிலா விளையாட்'டுக்களில் இதுவும் ஒன்று.''

தன்னை மீறி வந்த புன்னகையில் திளைத்து, தன்னையே ஒரு கணம் மறந்து நின்ற அதிபர், புன்னகையைக் கலைக்காமலே தொடர்ந்தார்:

''எங்களை இங்கு கூட்டிய திருவருளின் நோக்கம் பற்றி எல்லோரும் அறிவீர்கள். அந்த நோக்கமே நமக்கெல்லாம் இடப்பட்ட பணியுமாகும். இந்தப் பணி, சுவாமிகளின் கருத்தாக எழுந்ததே எங்கள் பெரும் பேறுகும்.

''யாழ்ப்பாணத்திலேயுள்ள சாராயத் தவறணைகளை எல்லாம் பொதுசன வாக்கெடுப்பின் மூலம் ஒழித்துக்கட்ட

வேண்டும் என்பதே எமக்குக் காட்டப்பட்டிருக்கும் நோக்காகும். இதற்குரிய பணி, இங்கு கூடியிருக்கிற, பொறுக்கி எடுக்கப்பட்ட எங்களைச் சார்ந்திருக்கிறது.''

அதிபர் கூறிய—நாங்கள் அங்கு வந்து கூடிய - நோக்கம் பற்றி எனக்கு முன்னரே தெரியும். இளமை வீறு தூண்ட, தேர்ந்தெடுக்க ஒரு துறை தெரியாத குருட்டுப்போக்கில், மக்களிடையே புகுந்து 'தொண்டு' செய்ய வேண்டும் என்று உள்ளே துடிக்கிற துடிப்போடு ஆசிரியனாகச் சேர்ந்து விட்ட அந்நிய நாட்கள். எங்கள் கல்லூரித் தலைவர் என்னையும், இன்னும் மூன்று ஆசிரியர்களையும் 'பொறுக்கி' எடுக்கும் போதே, எம்முன்னால் வைக்கப்படப்போகிற இந்தப் பணி பற்றிச் சொல்லியிருந்தார். ஆனாலும், இதனை இந்த இளைப் பாறிய அதிபரின் பக்குவமிகுந்த குரலில் கேட்டபோது, உடலிலே ஒரு சிலிர்ப்பு; உள்ளத்திலே ஒரு பரவசம்; சூக்குமத்திலே (சுவாமிகளுக்குத் தெரிந்துவிடக் கூடாதே!) எனக்கே பிடிபடாத ஒரு பெருமை.

இப்பெருமையுள் மூழ்கி நான் வெளிப்படுகையில் பேச்சொலி கேட்கிறது:

''திருநெல்வேலி, சாவகச்சேரி, சங்கானை போன்ற இடங்களிலெல்லாம் உள்ள தவறணைகளே முதலில் எமது இலக்குக்கு உரியவை... அதிலும் முதன் முதலில் திருநெல் வேலியே நமது மதுவிலக்குப் போர்க்களமாகும். ஒல்லாந்தருக்கு மாட்டுக்கறி கொடுக்க மறுத்துத் தாய்நாடு சென்று பேரும் புகழும் (ஓ, பேரும் புகழும்!) ஈட்டிய ஞானப்பிரகாசரது தாயகமான இக்கிராமமே எமது முதற் களமாவது மிகப் பொருத்தமானதும் உற்சாகந் தருவது மாகும்.''

சபையிலே, தம்மை மறந்த நிலையில் கைதட்டி, ஆச்சிரமத்தின் புனிதத்துக்குக் களங்கமாய் விடுமோ என்ற அச்சத்தில், இடையில் நிறுத்திவிட்ட சிலரின் அவலம் ஒரு கணம் தேங்குகிறது.

''இங்குள்ள எல்லோருமே இந்தத் தவறணை ஒழிப்பு—மது ஒழிப்புப் போராட்டத்தில் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். ஆனாலும் கிராமத்துக்குக் கிராமம் — இடத்துக்கிடம் செயலாளராக அந்த அந்த இடத்துக்குரியவரை நியமித்தல் பொருத்தமாகும் என எண்ணுகிறேன்.

''முதற் களமான திருநெல்வேலிக்கு, அவ்விடத்தைச் சேர்ந்த திருவாளர் செயலாளராக இருந்தால் மிக நல்லது என்பது என் அபிப்பிராயம்''.

எல்லாக் கண்களும் என்மேல் படிகின்றன. அந்தரத்தில் பறப்பது போன்ற உணர்ச்சியில் நான் மிதந்து மீள்கிறேன்.

''அவரே பொருத்தமானவர்'' என்று பல குரல்கள் ஆசிகளாக வந்து என்மேல் குவிகின்றன.

''எமது இப்போராட்டத்துக்குத் தூய்மையான உள்ளமும் சேவா உணர்ச்சியுமுள்ள இளைஞர்களே முன்னணியில் நிற்க வேண்டும். இது எவ்வளவு முக்கியமோ, அது போலவே எமக்கு நிதியும் முக்கியமானது. பிரசாரத்துக்கு, வாக்கெடுப்பின்போது போக்கு வரத்துக்கு, தொண்டர்களின் உணவுக்கு என்று நாம் எதிர்பாராத விதத்தில் எத்தனையோ செலவுகள் முன்வந்து நிற்கும்.

''ஆனால் அதுபற்றி நாங்கள் யோசிக்கவே வேண்டியதில்லை. காரணம் இதோ இருக்கிற திருவாளர் முத்துத்தம்பி அவர்களே. நிதி சேர்க்கிற சிரமத்தை எங்களுக்கு வைக்காமல், முழுச்செலவையும் தாமே ஏற்றுக் கொள்ள முன் வந்திருக்கிறார். முதலில் சுவாமிகளின் ஆசீர்வாதத்தோடு இன்று அவர் தரப்போகிற தொகை .... ''

முத்துத்தம்பியரை அதிபர் திரும்பிப் பார்க்கிறார்.

அடக்கமே உருவாக, அரையில் கட்டிய தும்பைப் பூப் பரமாஸ் சால்வை அவிழ்ந்து விழுகிற நிலையில், நெற்றியில்

துலங்கும் சந்தனப் பொட்டோடு முத்துத்தம்பியர் எழுந்து சட்டைப் பைக்குள் கைவிட்டு ஒரு 'செக்'கை எடுத்து கீழே தயாராக இருந்த வெற்றிலை பாக்குப் பழத்தின் மேல் வைத்து, பவித்திரமாக நீட்டுகிறார்.

மான்தோலுக்கு வணக்கஞ் செலுத்தி, அதிபர் அதனை வாங்கிக் கொள்கிறார்

எதிர்பார்ப்பு, மௌனத்தில் புடைத்து நிற்கிறது.

அதிபர் 'செக்'கைப் பார்த்து விட்டு, ''ஓ, இரண்டாயிரம்! இரண்டாயிரம் ரூபா!'' என்றார்.

சொற்கள் எங்களுள்ளே மின்சாரமாய் இறங்க, உடல் புல்லரித்தது.

அதிபரின் சொற்கள் உணர்ச்சியில் குழைந்து மறுபடியும் வெளிவந்தன.

''திருவாளர் முத்துத்தம்பியை இங்கு பலரும் அறிவார்கள். ஆனாலும் அவரை அறியாதவர்களுக்காக, அவரை அறிமுகப்படுத்தவேண்டியதுகடமை. இந்தப்பெரிய வள்ளல், இந்தத் தொகையையும் தந்து, இன்னும் தருவதாக வாக்களித்திருக்கிறார், தனக்குத் தானே குழி தோண்டுவது போல. ஏனென்றால் இவர் தான் இந்தக் குடாநாட்டிலுள்ள சகல தவறணைகளையும் குத்தகைக்கு எடுத்திருக்கிறவர். காந்தியத்தின் மேலுள்ள தீவிரமான பற்றினால், தனக்குத் தானே குழி தோண்டுகிறவர் போல ''

தலைவர் முடிக்கவில்லை. உணர்ச்சிப் பெருக்கில் எல்லோரும் ''முத்துத்தம்பியர் வாழ்க!'' என்று கோஷமிட்டார்கள்.

எல்லோரையும் கையெடுத்துக் கும்பிட்ட முத்துத்தம்பியரின் கண்களில் கண்ணீர் துளித்திருந்தது.

## காந்தி!

காந்தி என்ற மகாசக்தியின் பிடியில் என்னை இழந்து ஆறு ஆண்டுகளுக்கு முன் அந்தப் பேரொளி உலகை அந்தகாரத்தில் விட்டுச் சென்றபோது, யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதுமே யுகயுகாந்தரங்களாய்த் திரண்டு குவிந்த துக்கத்தின் உருவெடுத்து, பண்ணைக் கடலோடு சங்கமமாகச் செல்கிற சனசமுத்திரமாய்ப் பிரவகித்துச் சென்றபோது, அதில் ஒரு பரமாணுவாய், 'உடுத்தக் கதராடை இல்லையே' என்ற இல்லாமையின் அரிப்போடு சென்ற நான் இன்று கதராடை பூண்டு பிரசாரத்துக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறேன்.

உண்மை, அஹிம்ஸை என்பவற்றில்என்னைத் தோய்த்து காந்தீயத்தை எனது முழுமையான உயிர்ப்பாக்க எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை என் உயிரே இறுகப் பற்றிக் கொண்டிருந்தது. சிந்தனை, செயல், மூச்சு எல்லாவற்றிலுமே காந்தீயம் தோய்ந்து கிடந்தது

இதற்குப் பின்னணியாய் அமைந்து, என்னை இந்தத் துறையிலே உந்திவிட்ட இன்னும் ஒரு சம்பவமும், பம்பரமாய் நாங்கள் செய்த பிரசாரத்தின் மத்தியிலே, நான் எனது கதராடையைப் பார்த்துக் கொள்ளுகிற சந்தர்ப்பங்களிலே அடிக்கடி என் மனத்திரையில் படங்காட்டும்.

ஆறு வருடங்களுக்கு முன், காந்தி என்ற காந்தி அணைந்தபோது, பண்ணையை நோக்கிச் சென்ற சனசமுத்திரத்தில் என்னோடு மணியும் வந்து கொண்டிருந்தான். எங்களுக்கு முன்னால், "வைஷ்ணவ ஜன தோவை" இசைக்கும் இசையாகி, பெண்களின் கூட்டமொன்று வீதியின் ஒரு நீளத்தில் வழிந்துகொண்டிருந்தது.

ஊதுபத்தி, சாம்பிராணி என்பவற்றிலிருந்து கிளம்பிய வெண்புகை, அப்பெண்கள் அணிந்திருந்த வெள்ளைவெளேரென்ற உடைகளிலிருந்து பிறந்து, வானவெளியில் வியாபித்து நிற்கிற மகாத்மாவுக்கு அஞ்சலி செலுத்துவது போல மேலே பரவிற்று.

அந்தக் கூட்டத்தில் ஒருத்தி, நடை தளர்ந்து, வீதியின் ஓரத்தில், சாக்கடையின் விளிம்பிலே காலை வைத்தவள், ''ஐயோ'' என்று நான் கதற முன்னரே, சாக்கடையுள் குதித்துவிட்ட மணியின் தோளிலே விழுந்து துவண்டு கிடந்தாள்.

பின்னால் தங்கி, இரண்டு பெண்களோடு மணியும் நானுமாக அப்பெண்ணுக்கு முதலுதவி செய்த காரணத்தால், அடுத்த ஆண்டில் மணியையும் அந்தப் பெண் மாலாவையும் மணப் பந்தலில், ''கஸ்தூரிபாயும் காந்தியும் போல் வாழ்க!'' என்று வாழ்த்துகிற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

கல்யாணமான ஆறுமாதத்தில், உடற் பயிற்சி ஆசிரியராக இருந்த மணி, அதை உதறி விட்டு 'நேவி'யிலே சேர்ந்துவிட்டான். மூன்று மாதத்துக்கொருமுறை யாழ்ப்பாணம் வந்து போவான்.

ஒரு முறை அவன் வந்திருந்த போது அவனைத் தேடிப் போயிருந்தேன்.

உள்ளே ஏதோ கலவரம்.

''இதென்னடா உன் கோலம்?''—மணியின் தகப்பனாரின் ஏக்கத்தில் குழைந்த கேள்வி.

''யூ, மை டியர் பப்பா, யூ மைன்ட் யுவ பிஷினெஸ்''. தடுமாறுகிற வார்த்தைகளைத் தொடர்ந்து ஒரு பேய்ச் சிரிப்பு.

தொங்கிய முகத்தோடு மணியின் தகப்பனுர் வெளியேறுகிறுர். நான் வாசலில் நின்றதைக் காண அவர் கண்களில் நின்ற கண்ணீர்ப்படலம்.

நான் அறையினுள் எட்டிப் பார்க்கிறேன்.

நிலத்தில் வாந்தித்துவிட்ட சகதியின் மேல் அலங்கோலமாக முகட்டைப் பார்த்துக் கொண்டு, மணி கிடக்கிறுன். ஒரு மூலையில் நின்று கட்டை விரலை வாயுள் திணித்துக் கடித்து அழுகையை அடக்கிக் குமுறிக் கொண்டு மாலா நிற்கிறுள். அவளது நிலையும் சாராய நெடியும் என்னை வெளியே தள்ளுகின்றன.

''ஐயோ, காந்தி! கஸ்தூரிபாய்!'' என்று ஓலமிடுகிற என் இதயத்தைப் பொத்திக் கொண்டு வெளியேறினேன்.

இந்த நினைவில் பிறந்த உத்வேகத்தில், என் கிராமத்திலும் யாழ்ப்பாணக் குடா நாட்டிலும் மட்டுமல்ல, இலங்கை முழுவதும் — உலகம் முழுவதும் உள்ள தவறுணகளை ஒழித்துக் கட்டிவிட வேண்டும் என்ற ஒரு நினைவு என்னுள் மகாமேருவாய் வளர்ந்து நின்றது.

ஓ மாலா, உனக்கும் உன்
போன்ற பெண்களுக்கும் வாழ
வழி வகுக்கிறேன், பார்!

நண்பர்களும், சுவாமிகள் வீட்டிலே கூடிக் கதைத்த பெரியவர்களும், நானுமாகத் திருநெல்வேலியில் மூலை முடுக்கெல்லாம் சென்று பிரசாரஞ் செய்தோம். 'மது விலக்கு', 'தவறணை ஒழிப்பு'ப் பிரசாரத்தில் என் கதர் வேஷ்டியும் சட்டையும் கசங்குவது தெரியாமல் உழைத்தேன்.

காந்தி மாஸ்ரர்! — சிறுவர்கள் எனக்கிட்ட செல்லப் பெயர்.

மாலை வேளைகளில், சாராயத்தால் — மதுவால் மறை முகமாக நைந்துபோன நோஞ்சான் சிறுவர்களோடு பிர சாரப் பவனி வரும் போது, காந்தியைப் பற்றி - மதுவைப் பற்றி 'காந்தி மாஸ்ர'ரிடம் கதைகள் கேட்பதில் அவர்க ளுக் கிருந்த உற்சாகத்தில், அந்தியில் விட்டுப் பிரியும் போது தம்மையும் மறந்து, 'காந்தி மாஸ்ரருக்கு ஜே!'' என அவர்கள் கூவுவதைக் கேட்டு எனக்கு மயிர்க்கூச் செறியும்.

பொதுசன வாக்கெடுப்புத் தினம் வந்து சேர்ந்தது.

அதிகாலையிலிருந்து ஊரிலுள்ள ஆண்களை யெல்லாம் கார்களில் இழுத்து வந்து, இதற்கென அமைத்திருந்த பந் தலுள் இருத்தினோம். முத்துத்தம்பியருடைய 'ஹில்மன்' காரும் அங்கு மிங்கும் ஓடிக்கொண்டிருந்தது.

பந்தலில் சிற்றுண்டிகள், சோடா, மோர், இளநீர் என் பன வழங்கும் சிறுவர்கள் சுறுசுறுப்பாக ஓடியாடினார்கள். முத்துத்தம்பியரின் காரில் தொண்டர்களுக்கு மத்தியான உணவு பொட்டலங்களாக வந்திறங்கியது.

நான் எனது வாக்கைப் போடச் சென்றேன்.

''ஏன் மாஸ்ரர், வராதவர்களின் வோட்டைப் போட யாரையாவது அனுப்புங்கோ. இஞ்சை நாங்க 'செக்'

பண்ண மாட்டம். அனுப்புங்கோ'' என்று தேர்தல் அதிகாரியே என் காதுள் சொன்னர்.

"மாருட்டம் செய்யலாமா?"

'காந்தி மகான் அதை ஒப்புவாரா?'

'சத்தியத்துக்கு இது விரோதமில்லையா?'

'மகாத்தா தம் வாழ் நாள் முழுவதும் வினையின் பலாபலனை நோக்காது, அதை நாடும் வழியின் தூய்மையைத்தானே வலியுறுத்தினர்.'

ஓ, மாலா!

என் மனத்துள் நிகழ்ந்த இப்போராட்டம் நான் பந்தலுக்குத் திரும்பிய பிறகும் நின்று விடவில்லை. நண்பன் ஒருவனிடம் இது பற்றி மனமில்லாமலே பிரஸ்தாபித்தேன்.

''முடிவு நல்லதாயிருந்தா, நாங்க கள்ள வோட் போடுறதாலை யாருக்கு நட்டம்? இதிலே என்ன பிழையிருக்கு?'' என்று, லிஸ்டைப் பார்த்து ஏதோ ஒரு எண்ணையும் பெயரையும் எடுத்துக் கொண்டு அவர் வாக்குச் சாவடிக்கு ஓடினர்.

வெற்றிப் பெருமிதத்துடன் அவர் திரும்பி வந்த போது, முத்துத்தம்பியரும் பந்தலினுள் நுழைந்து கொண்டிருந்தார்.

நண்பனிடம் விஷயத்தை அறிந்ததும் அவர் புன்னகைத்தார்.

''அப்பிடிச் செய்யிறதிலை தப்பில்லை. முடியுமானவரை செய்யுங்கோ. இது பற்றிக் கதைக்கத்தான் நான் இப்ப வந்தது.''

அங்கு நின்றவர்கள் எல்லாரும் வேறு வேறு பெயர்களில் சென்று (மகாத்மாவே, மன்னித்துக் கொள்ளுங்கள்) வாக்குப் போட்டு விட்டு வந்து, மறுபடியும் போனார்கள். மறுபடியும்

நேரம் முடிந்து விட்டது.

எண்ணல்.

நான் உள்ளே போனேன். புன்னகையோடு அதிகாரி எனக்கு ஆசனந்தந்தார். உள்ளே முத்துத்தம்பியர் வந்த போது, அதிகாரி எழுந்து நின்று வரவேற்றார்.

எண்ணல் ஆரம்பித்துவிட்டது.

வெளியே, ''மது அரக்கன் ஒழிக!'', ''மகாத்மா காந்திக்கு ஜே!'' ''காந்தி மாஸ்ரர் வாழ்க!'' கோஷங்கள் ஒலித்துக் கொண்டிருந்தன.

எண்ணி முடிந்ததும் அதிகாரி எழுந்து, மகிழ்ச்சியோடு என் கையைப் பற்றிக் குலுக்கினார்:

''தேவையானதை விட மேலதிகமாக நானூறு வோட் கிடைச்சு உங்களுக்கு வெற்றி, மாஸ்ரர், வெற்றி!''

வெற்றியும் முத்துத்தம்பியரும் சூழ்ந்துவர வெளியே வருகிறேன். அவர் ''வெற்றி'' என்று கூவுகிறார்.

எல்லோரும் எங்களை மொய்த்துக் கொள்கிறார்கள். பல பெரியவர்கள் என்னோடு கை குலுக்கி முதுகில் தட்டுகிறார்கள். இரண்டு மாலைகள் என் கழுத்தில் வந்து விழுகின்றன.

ஓ, மாலா! வழி பிறக்கிறது.

அன்றிரவு, நித்திரையின்றிப் புரண்டு கொண்டிருந்த என் காதுகளில் ''ஜே'' கோஷமே ஒலித்துக் கொண்டிருக்கிறது.

வெற்றியின் வெறியில் இரண்டு நாட்கள் கழிந்து விட்டதே தெரியவில்லை.

மூன்றும் நாளிரவு பதினொரு மணிக்கு மேல் ஒரு நண்பன் ஓடிவருகிறான்.

''மாஸ்ரர், உடனடியா ஒருக்கா வந்திட்டுப் போங்கோ!''.

என்ன அவசரமோ, ஏதோ!

கையிலிருந்த ''சத்திய சோதனை''யை வைத்துவிட்டு அவனோடு ஓடிய நான் வீதியில் ஏறியதும், ''என்னவிஷயம்? என்று கேட்டு வைத்தேன்.

''வாருங்கோ வந்து பாருங்கோ!''

என்னடா, அப்படிப் பெரிய விஷயம்?

சந்தியிலிருந்த வைக்கோல் கடையின் முன்னால் இருட்டில் நிற்கிற ஒரு காரை அவன் சுட்டிக் காட்டினான். அதிலிருந்து ஏதோ பொருள்களை இறக்கி உள்ளே அனுப்பிக் கொண்டிருந்தார்கள்.

''பார்த்தீர்களா?''

''என்ன விஷயம்?''

''சாக்குச் சாக்காய் சாராயம்''.

என் தலையில் யாரோ சம்மட்டியால் அடிப்பது போலிருந்தது.

கிட்டச் சென்று பார்க்கிறேன்.

அந்த 'ஹில்மன்' கார்!

''தவறணையில் கிடைக்கிற லாபத்திலும் இப்படி விற் பனையில் கிடைக்கிற லாபம் இரண்டு மடங்கு'' என்ற நண் பன் என்னை வீட்டை நோக்கி இழுக்கிருன்.

எதிர்த்திசையிலிருந்து கனவேகமாக வந்த கார் ஒன்று எறிந்த ஒரு கண ஒளியில் கூர்ந்து கவனிக்கிறேன். 'ஹில் மன்' காரின் உள்ளே, தும்பைப் பூப் பரமாஸ் சால்வை யால் முகத்தைத் துடைக்கிற பாவனையில் தன்னை மறைக்க முயல்கிருர், திருவாளர் முத்துத்தம்பி!

என்னுள்ளம் ஊளையிடுகிறது.

இன்னும் ஓயவில்லை.

— [illegible]

என். எஸ். எம். ராமையா

# ரகுபதி ராகவ

கோவில் மண்டபத்தில் கொஞ்சங் கொஞ்சமாக, ஜனங்கள் வந்து குழுமத் துவங்கினர். கம்பியில் கட்டித் தொங்க விட்டிருந்த காஸ்லேட்டின் ஒளி கோயிலைச் சுற்றிக் கிடந்த பனிமூட்டத்தையும் இருளையும் மீற முடியாமல், தூரத்தில் வந்து கொண்டிருப்பவர்களுக்கு, புகைக்குப் பின்னால் தெரியும் ஒளியாக மங்கித் தெரிந்தது.

குளிருக்கு அடக்கமாக எல்லோருமே போர்வைக் கண்காட்சியாக காணப்பட்டார்கள். சிவப்புக் கரையுடன் கூடிய கறுப்புப் போர்வை, பழைய காலத்து குங்குமக் கலர் உல்லன் கம்பிளி, சதுரக் கட்டம் போட்ட உள்ளூர் பெட்சீட் ...

ஒரு மூலையில் போர்வையைத் தலைவரைக்கும் இழுத்து முக்காடு போட்டு முழங்காலைக் கட்டிக் கொண்டிருந்த தலைவர் எழும்பி ''என்ன எல்லாம் வந்தாச்சா?'' என்றார்.

''ஆமா! முக்கியமானவங்க எல்லாரும் தான் வந்துட்டாங்களே... நீங்க தொவங்குங்க '' என்றது ஒரு குரல்.

எல்லோருடைய பார்வையும் படுகிறுப் போல ஒரு மத்திய இடத்தில் வந்து நின்றவாறு ''ஆடிப்பூசை கும்பிடனும். நாளு நெருங்கிட்டுது எப்பிடி?'' என்ருர்.

கோயில் கமிட்டியைச் சேர்ந்த ராசமணி தலையை உயர்த்தி அவரைப் பார்த்தவாறு ''அதான் வேலையெல்லாம் நடந்துகிட்டு இருக்கே '' என்ருன். கமிட்டியைச் சேர்ந்த இன்னெருவனுன பழனி ''இந்த வருசம் பிரமாதமா நடக்கும் பாருங்க'' என்ருன்.

தலைவர் அவர்களை வாத்ஸல்யத்தோடு பார்த்தவாறு ''அதெல்லாம் மணி மணியாச் செய்வீங்க. யாரும் சொல்லணுமா? அதுக்கில்லே '' என்றவாறு கூட்டத்தைப் பார்த்து ''முந்தியெல்லாம் ஒரே கட்சியா இருந்தோம், ஒண்ணுக் கும்பிட்டோம். இப்ப ரெண்டு கட்சி '' என்ருர்.

அந்தத் தோட்டத்தில் சம்பள உயர்வுக்காக வேலை நிறுத்தம் செய்து, போராட்டம் வெற்றி பெருது என்று எண்ணி பாதியில் 'கழன்று' கொண்ட மிதவாதிகள் ஒரு பாதியாகவும், கடைசிவரை போராட எண்ணி சக தொழிலாளர்கள் காலை வாரிவிட்டதால் ஏமாந்த தீவிரவாதிகள் இன்னெரு பாதியாகவும் தோட்டம் இரண்டுபட்டது.

அன்றிலிருந்து பிடித்தது சனியன்.

எல்லாவற்றிலும் ஏட்டிக்குப் போட்டி. ''அவுங்களைப் பத்தி நமக்கு என்ன? நாம பாட்டுக்கு வழக்கம் போல கும்பிட வேண்டியது தானே?'' என்று யாரோ சொன்ஞர்கள்.

''வாஸ்தவம். ஆனு நாம எப்ப கொடி ஏத்தம் வைக்க யோசிச்சிருக்கோமோ அன்னைக்குத்தான் அவங்களும் கொடி ஏத்தனுமாம். அதிலேருந்து அஞ்சு நாளைக்கு திருவிழா நடத்தணுமாம். ஓடர் வந்திருக்கு ''

கூட்டம் சிலிர்த்தது.

''யாரு அவுக, ஓடர் போட்டிருக்கிற பெரிய மனுசன்?'' என்முன் ராசாமணி.

''வேறே எவனுவது சொல்லியிருந்தா 'போடா'ன்னு சொல்விட்டு வந்திருப்பேன். தொரைக்கு சொல்லி அவரு கூப்பிட்டுவிட்டு சொல்லி இருக்காரு''

கூட்டத்தினர் கட்டுப்பாடு இல்லாமல் கலகலத்தனர்.

''மறுபடி கரச்சல் இழுக்கப் பார்க்கிறனுக.''

''நாம முந்நூறு பேரு இருக்கோம். அவனுக இன்னைக் கெல்லாம் நூறு பேரு கூட இல்லே..... நாயப்படி நாம தானே முதல்லே கும்பிடனும்?''

''நம்மளே பொம்புளேகன்னு நெனேச்சிருக்கானுக போலே இருக்கு.''

''இந்தப் பயணம் மறுபடி தலே எடுக்க விடாமே சரியான ஒரு போடு போடணும்.''

''பின்னே என்ன .''

தலேவர் இரண்டு கைகளேயும் உயர்த்திக் காட்டினர், கூட்டம் அமைதியடைந்தது. ''ஆளுக்காளு ஒவ்வொண்ணு சொன்ன எப்பிடி? நிதானமா யோசிச்சு ஒரு முடிவு எடுங்க'' என்ருர்.

''ஒரே முடிவுதான்! நாம ஏற்பாடு செஞ்சிருக்கிற நாளிலே கொடி ஏத்தம் வச்சுட வேண்டியதுதான்''

வயது முதிர்ந்த ஒருவன் எழும்பி, ''அதுலே ஒண்ணும் மறு பேச்சுக்கு எடமில்லே. நானும் ஒப்புக் கொள்றேன். ஆன நாளேக்கி தலேவரு தொரைக்கிட்டே போயி எப்பிடிச் சொல்றது? 'நாங்க தான் மொதல்லே சாமி கும்புடுவோம்'

அப்படின்னு ஏதோ நாமளே சண்டித்தனம் பண்ற மாதிரி இல்லே?'' என்றான்.

தலைவர் தலையை ஆட்டிக் கொண்டார். கூட்டம் மௌனமாக சிந்தித்தது. புதுக்கட்சி ஆள்பலம் இல்லா விட்டாலும் தகர்க்க முடியாத விதத்தில் செயலாற்றுவதை அப்போதுதான் அவர்களால் உணர முடிந்தது.

'ஒரேயொரு வழிதான் இருக்கு'' என்றான் பழனி. ''நாம நோட்டீசு அடிப்பமே, அதுலே ஒரு நோட்டீசை கொண்டு போயி காட்டினா.....''

''சரி, நோட்டீசு ரெடியா?''

'நாளைக்கு எத்தனை மணிக்கு ஒப்பீசுக்கு போகணும்?''

''நாலு மணிக்கு''

''ரெண்டு மணிக்கு நோட்டீசைக் கொண்டாந்து ஒங்க கையிலே தந்துடறேன், போதுமா?''

மறுநாள் பழனி ஒரு நாள் சம்பளத்தைத் தியாகம் செய்துவிட்டு முதல் பஸ்ஸில் டவுனுக்குச் சென்றான். வழக்கமாகச் செல்லும் பிரஸ், எனவே பழியாகக் கிடந்து 'இரதோற்சவ விஞ்ஞாபனம்' என்ற தலைப்புடன் கூடிய நோட்டீஸ் ஒன்றை அவசரமாகத் தயாரிது அச்சு வாகனம் ஏற்றி ஐநூறு நோட்டீஸ்களுக்கு 'ஓடர்' கொடுத்துவிட்டு மை உலராத பத்து நோட்டீஸ்களுடன் பஸ் ஏறினான்.

நான்கு மணிக்கு துரை கூப்பிட்டுவிட்டிருந்தார். செம் பட்டை நிற முடியும் பூனை விழிகளுமாய் அமர்ந்திருந்த அவரை நோக்கி ரொம்ப கிராமியமாக நான்கு விரல்களால் நெற்றியைத் தொட்டு ''செலாம் தொரைகளே'' என்றார் தலைவர்.

''என்ன தல்வர்! கோயில் விசயம் எப்பிடி?'' என்ருர் துரை. தலைவர் வெகு பவ்யமாக விஞ்ஞாபன நோட்டீசை மேசை மீது வைத்தார். அதைப் பிரித்துப் பார்த்தார் துரை. மஞ்சள் நிற பேப்பரில் பச்சை எழுத்துக்கள் பளிச்சிட்டன. முகப்பில் சுமான் வளைவாகக் காணப்பட்ட வேலைப்பாடும் இரண்டு பக்கமும் இருந்த பாவை விளக்கும் தவிர வேறு ஒன்றும் புரியவில்லை.

''இதி என்ன?'' என்ருர்.

''நோட்டீசு'' என்ருர் தலைவர். ''நோட்டீசு எல்லாம் அடிச்சு முடிஞ்சு கொஞ்சம் தபால்லேயும் அனுப்பிட்டோம். மத்த ஏற்பாடுகளும் முடிஞ்சுது. இப்ப போயி திரு விழாவை தள்ளிப் போடுறதுன்னு எப்பிடிங்க?'' என்ருர். துரை அமைதியாக 'பைப்'பை எடுத்து வாயில் பொருத்தி பற்ற வைத்தார். இதழ்க் கடையோரம் புகை குப் குப் பென வெளியேறியது. மீண்டும் 'பை'ப்பை கையில் எடுத்து வைத்துக் கொண்டு ''நல்லம் தல்வர்! நீ போ.. நான் யோசிச்சு சொல்றது'' என்ருர்.

ஆபிசுக்குக் கீழே வரிசையாக அடர்ந்திருந்த சப்பாத்திச் செடி வேலிக்குப் பின்னுல் பழனி ராசாமணி ஆகியோர் மறைவாக நின்று கொண்டிருந்தனர். தலைவரைக் கண்டதும் ''என்ன, காயா பழமா?'' என்ருன் ராசாமணி.

''அநேகமா பழம் தான்''

''இழுந்தாப்'லே சொல்றீங்க... ''

''இல்லே யோசிச்சு சொல்றேங்கிருன். ஆனு நோட்டீசைப் பார்த்ததும் ஆளு விதிச்சுப் போனுன். வேறே ஒண்ணும் சொல்ல ஏலலே!''

''பார்த்தீங்களா நம்ம ஐடியாவை'' என்று பழனி தன் காலில் தானே பூவைப் போட்டுக் கொண்டான்.

அடுத்த நாளே முடிவு தெரிந்து விட்டது. பழைய கட்சி அவர்கள் வைத்திருந்த திகதியிலேயே திருவிழாவை நடத்தும்படியும், புதுக்கட்சியினர் உசிதம் போல் வேறொரு சமயத்தில் தங்கள் திருவிழாவை வைத்துக்கொள்ளலாம் என்றும் தீர்ப்பளித்திருந்தார் துரை.

வெற்றிப் பெருமிதத்தில் இருந்த பழைய கட்சியினர் முகத்தில் கரி பூசியது போல ஒரு சம்பவம் நடைபெற்றது. கொடியேற்றத்துக்குச் சரியாக முதல் நாள் கோவிலிலிருந்த உற்சவ விக்ரகமும் பூஜை சாமான்களும் காணமல் போய் விட்டன.

தோட்டம் அல்லோல கல்லோலப்பட்டது. போலீஸ் வந்தது. துப்பறியும் நாய்கள் வந்தன. துப்புத்தான் துலங்கவில்லை.

கோவில் கமிட்டி அவசரமாக தலைவர் லயத்தில் கூடியது. ''இது ஆறுமுகம் பய வேலை... அவன் தான் இந்த மாதிரி 'கோக்கு மாக்கு' வேலை எல்லாம் செய்வான்'' என்றான் பழனி.

''அதைத் தான் சொல்ல வந்தேன்'' என்றார் தலைவர். ''அவன் வீட்டிலே ராத்திரி ரொம்ப நேரம் பேச்சுக் குரல் கேட்டுச்சாம். பதினொரு மணியைப் போல அவனும் இன்னொருத்தனும் வெளியே போனானுகளாம். அவன் வீட்டுக்கு அடுத்த வீட்டுக்காரன் சொன்னான்'' என்றார்.

''இப்ப என்ன செய்றது?''

''போலீசுலே புகார் பண்ணி இருக்குதுதானே? அவங்க என்ன சொல்றாங்கன்னு பாத்துக்கிட்டு மேலே யோசிப்பம்!''

அவருடைய இந்த பொறுமையும் அசமந்தமும் சிலருக்கு எரிச்சலை யூட்டின. குறிப்பாக பழனி கொதித்துக் கொண்

டிருந்தான். ஆறுமுகத்தை நேரில் சந்தித்து சூடாக இரண்டு வார்த்தை கேட்டு விட்டு வந்தால் என்ன என்று தோன்றியது. யாரிடமும் சொல்லாமல் ஆறுமுகத்தின் லயத்தை நோக்கி நடந்தான். வழியில் அவனது கூட்டாளி மாரப்பன் வீட்டில் கொஞ்ச நேரம் நின்று அவனிடம் ஆலோசனை கேட்டான்.

''போய்க் கேட்கிறது என்ன?ஒதைச்சுக் கொல்லணும். வா போவோம். நானும் வர்றேன்'' என்று இருவரும் நடந்தார்கள்.

ஆறுமுகம் லயத்தில் தானிருந்தான். பழனி ரொம்பப் பொறுமையாகவே பேச்சை ஆரம்பித்தான். ''இந்தாப் பாரு ஆறுமுகம். இது ஒன்னைத் தவிர வேறே யாரோட வேலையும் இல்லேங்கிறது எல்லாருக்கும் தெரிஞ்சு போச்சு. மரியாதையா எல்லாத்தையும் திருப்பிக் குடுத்துடு. இது சரியில்லே'' என்றான்.

''எது சரி இல்லே......எதைத் திருப்பிக் கொடுக்கணும்?'' என்றான் ஆறுமுகம்.

''எதையா? ஒண்ணுந் தெரியாதவன் மாதிரி கேட்கிறியே? கோயில் சாமானைத்தான்,''

''போடா போடா! பெரிய துப்பறியும் சிங்கம் கண்டு பிடிச்சுட்டாரு. இன்னொரு வாட்டி இப்பிடி கேட்டுக்கிட்டு இங்கே வராதே'' என்றவாறு ''காட்டிக் குடுக்கிற பயலுக '' என்று வாய்க்குள் முணகிக் கொண்டான்.

''யாருடா காட்டிக் குடுக்கிற பயலுக?'' என்றான் மாரப்பன்.

''நீங்க தாண்டா! ஸ்டிரைக்'லே என்ன ஆச்சு?''

''அந்தக் கதை இங்கே தேவையில்லே, இன்னையப் பேச்சைப் பேசு''

''இன்னைய பேச்சா? அதான் சொன்னேன். இன்னொரு வாட்டி கேட்டுக்கிட்டு வராதேன்னு''

''வந்தா.....''

ஆறுமுகத்துக்கு நல்ல உடல்வாகு. பயில்வான் மாதிரி கரணை கரணையாக கையும் காலும். ஒரே பிடியில் இருவரையும் இரண்டு அறைகள் வைத்து வெளியே தள்ளுவதில் சிரமம் இருக்கவில்லை.

அவர்கள் இருவரையும் ஆறுமுகம் அடித்து விட்டான் என்பது பரவியதும் ஒரு பட்டாளமே கம்பும் கழியுமாக ஆறுமுகத்தின் வீட்டை முற்றுகையிட்டது.

ஜனக்கூட்டமும் இரைச்சலும் நாய்களின் குரைப்புமாகலயத்து வாசல் தூள்பறந்தது.

வந்தவர்களில் பழனியின் தம்பி ஒருவன் நல்ல இரும்புக் கழி ஒன்று கொண்டு வந்திருந்தான். ஆகவே இரண்டே அடியில் ஆறுமுகம் தலைதூக்க முடியாமல் கீழே விழுந்தான்.

விழுந்தவன் பிறகு நிரந்தரமாகவே தலை தூக்கவில்லை!

பழனியின் தம்பி கொலைக் குற்றம் சாட்டப் பட்டு போலீஸ் வேனில் ஏறிக் கொண்டிருந்த போது, கதறிக் கொண்டிருந்த தாயிடம் பழனி ''தம்பி நல்லாபாடம் படிச்சுக் குடுத்திட்டான். நாங்க அண்ணன் தம்பி நாலு பேரு. ஒருத்தன் தூக்குக்கு போறதாலே ஒண்ணும் கொறஞ்சு போகாது நீ அழுகாதே ஆயா ' என்று ஆறுதல் கூறிக் கொண்டிருந்தான்.

வ. அ. இராசரத்தினம்

# மீண்டும் காந்தி பிறப்பார்!

வழமை போற் தேவநாயக வாத்தியார் அதி காலையிலேயே விழித்துக் கொண்டாலும் இன்னமும் படுக் கையை விட்டு எழுந்திருக்கவில்லை. புரட்டாசி மாதத்துத் தலை மழை பெய்து தரை நனைந்ததும், நனையாததுமாகத் தன் வீட்டுத் தோட்டத்தை நேற்றுச் சாயந்தரம் முழுமை யுமே கொத்திப் புரட்டியதில் உடம்பெல்லாம் அலுப்பாக இருந்தது அவருக்கு. மூப்படைந்து விட்ட வாழைப்பாத்தி களை எல்லாம் அழித்து இம்முறை அந்நிலத்திலே நிலக் கடலை பயிரிட வேண்டும் என்பது அவரது திட்டம். அதை மனதில் எண்ணிக் கொண்டே ஆசிரியர் படுக்கையிற் புரண்டு கொண்டிருந்தார்.

விடியற் கருக்களில் எழுந்து கடலுக்குச் செல்லும் மீன் பிடி வள்ளங்களின் தண்டுகள் வலிப்படுகையில், ஏற்படும் 'மரூர் மரூர்' என்ற ஓசை, சாமக் கோழிகளின் கூவலோடு அவர் காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தது. எங்கிருந்தோ ஒரு நாய் குலைக்கும் சப்தம். தொடர்ந்து பெரிய பள்ளி வாசலில் பாங்கு ஓதப்படும் நீட்டோசை

இந்த மண்ணுலகத்து நல்லோசைகளை எல்லாம் கேட்டுக்கொண்டே அலுப்போடு படுத்துக் கொண்டிருந்தார் ஆசிரியர், உடல் முழுவதும் அடித்துப் போட்டது போல வலி!

அந்தோனியார் கோயிலின் 'திருந்தாதி' மணி ஓசை இப்போது அவர் செவிகளில் விழுகிறது. தொடர்ந்து சுவர் மணிக்கூடு ஐந்து அடித்து ஓய்கிறது.

என்னதான் அலுப்பாக இருந்தாலும் இன்னமும் படுக்கையில் இருப்பதென்பது அவரால் முடியாத காரியம். 'யேசுவே!, என்ற முனகலோடு எழுந்து படுக்கையைச் சுருட்டி மூலையில் வைத்து விட்டு, மெதுவாக வெளிக் கதவைத் திறந்து கொண்டு கிணற்றடிப் பக்கம் போனார்.

புரட்டாசி மாதத்துக் கருக்கிருட்டைத் தேய்பிறைத் துண்டு ஒளி செய்ய முயன்று கொண்டிருக்கின்றது. அந்த மங்கலான ஒளியிற் பழக்க வாசனையின் காரணமாகச் சிரமம் ஏதுமே இன்றித் துலாக் கொடியைக் கிணற்றுள் ஆழ்த்தி நீர் மொண்டு, வாய் கொப்பளித்து முகம் கழுவி விட்டு அடுக்களைப் பக்கமாக வந்தார். வந்தவர் அடுக்களைக் கதவைத் திறந்து இரண்டு வாளிகளை எடுத்துக் கொண்டு மீண்டும் கிணற்றடிக்கு வந்தார். சமீபத்தில் மழை பெய்திருந்ததினால் பயிர் பச்சைகட்குத் தண்ணீர் ஊற்ற வேண்டிய வேலை இன்றைக்கு இல்லைத்தான். ஆயின் குடங்களில், சட்டிபானைகளில் எல்லாம் நீர் மொண்டு வைக்க வேண்டிய நித்திய கருமம் அவருக்கு இருக்கவே இருக்கிறது!

அந்த வேலை முடிந்ததும், தேவநாயகம் மீண்டும் கிணற்றடிக்கு வந்து அங்கே கிடந்த இரண்டு தகரப்பீப்பாக்களிலும் நீரை நிறைத்து வைத்த பின்னர் மண்வெட்டியை எடுத்துக் கொண்டு நிலத்தைக் கொத்தத் தொடங்கினார்.

அதிகாலை நேரத்தில் வேலை சுறு சுறுப்பாகவே ஓடியது. வீட்டோடு சேர்ந்திருந்த அந்த இரண்டு பரப்புக் காணியை அவர் எத்தனையோ தடவைகளிற் கொத்தியிருக்கிறார். பென்னம் பெரிய 'முதலை மார்க்' மண்வெட்டியால் ஆழக் கொத்தி, ஒவ்வொரு வேராய், ஒவ்வொரு கிழங்காக அரித்து எத்தனைதான் சிரமப்பட்டாலும், வெட்ட வெட்டத் தழைக்கும் அசுரன்' போல வளர்ந்து வரும் முத்தக் காசிக் கிழங்கையும் கோரைப்புல்லையும் அவரால் அழிக்கவே முடியவில்லை. 'நிழல் இருந்தால் அவை வளராது' என்று யாரோ சொல்லியதைக் கேட்டு ஒரு முறை அந்த நிலத்திலே மரவள்ளி நட்டிருக்கிறார். அதன் பின்னால் வாழைத்தோட்டம் போட்டார். என்னதான் செய்தாலும் மனத்திலே கிளர்ந்தெழும் தீய எண்ணங்கள் போல, அவைகள் வளரத்தான் செய்தன. அந்த ஆத்திரத்தில் வேதநாயக வாத்தியார், மண்வெட்டியை ஓங்கி எறிந்து பூமாதேவியே அதிருப்படியாகக் கொத்திப் புரட்டிக் கொண்டேயிருந்தார்.

சமையற்கட்டிலே எரிந்து கொண்டிருந்த குப்பி விளக்கொளி, பிள்ளைப் பேறுகளினால் ஒல்லியாய் இளைத்து விட்ட அவர் மனைவியும் வேலை செய்யத் தொடங்கி விட்டார் என்பதை அவருக்கு அறிவித்துக் கொண்டேயிருந்தது. எல்லாருக்கும் கோப்பி போட்டு, ஒன்றரைச் சொத்து மாவிற் காலைப்பலகாரஞ் செய்து, அதற்கு வியர்சனமாக எதையோ படைத்து... ஆமாம் அவளுக்கு என்றைக்குமே ஓய்வே இல்லை.

தேவநாயக வாத்தியார் கொத்திக் கொண்டேயிருந்தார்.

ஆலய மணி ஓசை நீளமாக ஒலித்துக் காலைப் பூசையை நினைவூட்டிற்று.

ஆசிரியரைப் பொறுத்த அளவிற் திருப் பூசைக்குச் சென்று எவ்வளவோ காலமாகி விட்டது. மனமில்லாத தினுல் அல்ல. நேரந்தான் கிடைக்கவில்லை, காலைப்பூசைக்கு அழைக்கும் கோயில் மணி, அவரைப் பொறுத்த மட்டிற் பாடசாலையில் அடுத்த பாடத்துக்கு அடிக்கப்படும் மணி ஓசையைப்போல ஒரு வெறும் அறிவித்தலாக மட்டுமே அமைந்திருந்தது.

அந்த அறிவித்தல் கிடைத்ததும் மண்வெட்டி ஒன்றைத் தோளில் வைத்தபடி வீட்டினுள்ளே சென்று ஒரு மூலையில் அதைச் சார்த்தி வைத்துவிட்டு, மண்டபத்திலே கிடத்தப்பட்ட வாழைக் குட்டிகளைப் போல அணி அணியாகப் படுத்திருக்கும் தன் குழந்தைகளை ஒவ்வொருவராக எழுப்பத் தொடங்கினுர். முணகலோடும், சிணுங்கலோடும், அழுகையோடும், ஒவ்வொருவராக அவர்கள் எழுந்ததும், எல்லாரையும் அழைத்துக் கொண்டு கிணற்றடிப் பக்கம் போனுர். போகு முன்னர், வானெலிப் பெட்டியைத் திறந்து அதன் முள்ளைச் சென்னை நிலையத்திற்குத் திருப்பி வைக்கும் வழமையான பணியைச் செய்ய அவர் மறக்கவேயில்லை!

அதிகாலையிற் கிணற்றடியில் அவர் ஒரு போரே நடத்த வேண்டியிருக்கும். மூத்த குழந்தை மொண்டு வைத்திருக்கும் நீரில் ஒவ்வொருவராகக் குளிப்பாட்டி, இன்னமும் அழுதபடியே இருக்கும் 'சின்னதுகளை' முகம் கழுவித் துடைத்து, வீட்டுக்குள் எங்கெங் கெல்லாமோ கிடக்கும் அவர்கள் உடைகளைத் தேடி ஒவ்வொருவருக்கும் அணிவித்து அவர்கள் எல்லாரையும் காலைப் பூசைக்கு அனுப்பி வைப்பது அவருக்கு ஒரு வில்லங்கமான சடங்கு!

அன்றும் அவரது அபிமான புத்திரன், ஐந்து வயதுத் 'தவா' என்ற தவநாயகம் அடம்பிடித்துக் கடைசி ஆளாகப் பூசைக்குப் புறப்பட்டபோது சென்னை வானொலியிற்

தோத்திரப்பாடல் முடிவடைந்து யாரோ உபதேசம் பண்ணிக் கொண்டிருந்தார்.

வானொலியின் உபதேசங்களையோ, அல்லது நெக்குருக வைக்கும், அதன் தோத்திரப் பாடல்களையோ ஆசிரியர் என்றைக்குமே இரசித்துக் கேட்டவரல்ல. காலை நேரங்களில் அவ்வானொலிப் பெட்டி அவருக்கு ஒரு கடிகாரத்தின் சேவையைத்தான் பிரதிப்பயன் கருதாது செய்து கொண்டிருந்தது. தோத்திரப் பாடல்கள் முடிந்தால் மணி ஆறரை. பின்னர் ஆறு முப்பத்தைந்துவரை நிகழ்ச்சிக் குறிப்பு. மறை வழி என்ற உபதேசம் ஆறு நாற்பதுவரை. அதற்கும் பின்னால் ஐந்து நிமிடங்கட்கு ஆங்கிலச் செய்தி. இந்த நேர அட்டவணை வானொலிக்காரரை விட வாத்தியாருக்கு நன்றாகத் தெரிந்திருந்தது.

வீட்டைத் தட்டிக் கூட்டிக் கொண்டிருந்த ஆசிரியர், வானொலியைச் சென்னையிலிருந்து கொழும்புக்குத் திருப்பி வைத்தார். அங்கே இஸ்லாமிய நற்சிந்தனை நடந்து கொண்டிருந்தது.

நற்சிந்தனை என்பதிலேயே இஸ்லாம்—கிறீஸ்தவம் — சைவம் என்ற பாகுபாடு! இதெல்லாம் சுத்த அபத்தம் என்பது ஆசிரியரின் கொள்கை. ஆனால் காலைப்போதில் வானொலி அவருக்கு ஒரு கடிகாரம் மட்டுமே. இஸ்லாமிய நற்சிந்தனையோ — அல்லது கிறீஸ்தவ நற் சிந்தனையோ முடிந்தால் நேரம் ஆறே முக்கால் மணி ஆகிறது என்பதில் மட்டுமே அவர் கண்!

இஸ்லாமிய நற்சிந்தனை முடிந்து இலங்கை வானொலி செய்திகளை ஒலி பரப்பிக் கொண்டிருந்தது. ஆசிரியர் வீட்டைப் பெருக்கி முடித்துக் கொண்டிருக்கையிற் செய்திகள் முடிவடைந்து அறிவிப்புக்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. மரண அறிவிப்புக்கள்... காலை வேளையிலே அபசகுனம் போல...

ஆசிரியர் வானெலியின் கழுத்தைத் திருகி அதைக் கொன்று, மீண்டும் அதற்கு உயிரூட்டிச் சென்னைக்குத் திருப்பினர். சென்னை நாதஸ்வர கானத்தைப் பொழிந்து கொண்டிருந்தது.

வீட்டிலே இத்தனை ஆர்ப்பாட்டங்கள் நடை பெற்றுக் கொண்டிருக்கையிலும் தூங்கிக் கொண்டேயிருந்த அவர் மூத்த மகன் ஜோசப், அப்போதுதான் எழுந்து வந்து முன் விருந்தையிற் கிடந்த சாய்கதிரையிற் சார்ந்து கொண்டே, கையோடு கொண்டு வந்த புத்தகத்தைப் படிக்கத் தொடங்கினன். அவன் கோப்பியை எதிர் பார்த்திருக்க வேண்டும், ஆனல் அப்பா தும்புக்கட்டும் கையுமாக நிற்பது, அவன் அடுக்களைக்குட் செல்வதையோ, அதிகாரஞ் செய்வதையோ தடுத்து நிறுத்தியிருக்கக்கூடும்.

தேவநாயக வாத்தியார் மகனின் கையிலிருந்த புத்தகத்தை ஒரு நோட்டம் விட்டார்! அவர் மனதிலே ஒரு நிறைவு... ஆமாம். எச். எஸ். சி. சோதனை எடுத்துவிட்டுச் சர்வகலாசாலைக்குப் போக முடியாத வகையில் அப்பரீட்சையிற் சித்தியடைந்து வீட்டுக்கு வந்திருந்த ஜோசப், எந்த விதத்திலும் உடம்பை வளைக்காது, குடும்பத்திற்குப் பாரமாய், நாளும் பொழுதும் கார்ல் மாக்ஸின் 'கபந்த தத்துவ' நூல்களையே படித்துக் கொண்டிருந்தான். ஆயின் இப்போது அவன் கையில் வைத்துக்கொண்டிருந்த நூல் மகாத்மாவின் சுயசரிதம்; சத்திய சோதனை...

'எந்தத் தொழில் செய்வதிலும் இழிவில்லை' என்ற தத்துவத்தை அந்த நூலாவது அவனுக்கு விளக்குமா? என்ற ஆசையோடு வீட்டைக் கூட்டி வெளியிற் தள்ளி, ஈர்க்கு விளக்குமாற்றை எடுத்துக் கொண்டு முற்றத்தைக் கூட்டத் தொடங்கினர். அப்படிப் பெருக்கிக் கொண்டிருக்கையில் அவர் மனம் மட்டும், இறந்தகாலச் சருகுகளைப் பெருக்கிக் கொண்டிருந்தது?

இருபத்தொரு ஆண்டுகளின் முன்னே... அப்போது அவருக்குத் திருமணம் நடந்து சில மாதங்கள்தான் ஆகியிருந்தன. அப்போதுதான் அந்தச் செய்தி உலகையே அதிர வைத்தது.

தழ தழக்கும் குரலிலே மனிதருள் மாணிக்கமான ஜவகர்லால் நேரு வானொலியிற் பேசினார்.

> 'நண்பர்களே! தோழர்களே! ஒளி அணைந்து விட்டது' (Friends and Comrades! The Light has gone out.)

ஆட்டுப் பாலையும் மொச்சைக் கொட்டையையும் சாப்பிட்டு உலக வரலாற்றிலே விந்தை புரிந்த அந்த வாமனர், வெறியனின் குண்டுக்கு இரையாகிச் செத்த அந்தச் சேதியைக் கேட்டு உலகமே கண்ணீர் வடித்தது.

அந்த அருட்டுணர்வின் காரணமாகத்தான் தேவநாயகமும் மகாத்மா காந்தி பற்றிய நூல்களை எல்லாம் படித்தார். அம் மகாத்மாவின் பிரதம சீடர்களில் ஒருவரான ஜோசப் கொர் நீலியஸ் குமரப்பா எழுதிய கிராமப் பொருளாதாரம் என்ற நூலைப் படித்துக் கொண்டிருக்கையிலே தான் அவர் மூத்த மகனும் பிறந்தான். அவர் தாயார் எத்தனையோ தடுத்தும், தேவநாயக வாத்தியார், தன் குழந்தைக்குத் தன் தந்தையின் பெயரைச் சூட்டாது, ஜோசப் கொர் நீலியஸ் என்று பேரிட்டார்!

இப்போது இருபது ஆண்டுகள் கழிந்து விட்டன. மகாத்மாவே 'வலிந்து' கைக்கொண்ட பிரமச் சாரியத்தைக் கைக் கொள்ளத் தவறியதினால் இன்று ஏழு குழந்தைகட்கு அவர் தந்தையாகி விட்டார். ஆசிரியத் தொழிலின் அற்ப ஊதியத்தினிடையே தன் மூத்த மகனை எங்கெங்கெல்லாமோ அனுப்பிப் படிக்க வைத்தார். இன்று அவன் படித்து விட்டு, அந்தப் படிப்பினால் உடலுழைப்பே அவ

மானம் என்ற எண்ணத்தோடு வீட்டிற் குந்திக் கொண்டிருக்கிறன். கார்ல் மாக்ஸின் 'கபந்த தத்துவம்' அவனை ஆட்கொண்டிருக்கிறது. தான் ஆசையோடு சூட்டிய பெயருக்கே ஹானி விளைவிப்பவனாய், 'துப்பாக்கிக் குண்டுகளிலிருந்துதான் அதிகாரம் பிறக்கிறது' என்று வாதிக்கிறன். கூட்டங்களிற் பேசுகிறன். நண்பர்களைக் கூட்டுகிறன். உலகத் தொழிலாளர்கட்காகப் பரிந்து பேசும் அவனால் உழைத்து ஓடாகிக் கொண்டிருக்கும் அவன் தாய்க்கு ஒரு வாளித் தண்ணீர் அள்ளிக் கொடுக்க மட்டும் முடியவில்லை!

நேற்றுப் பாடசாலைக்குப் புறப்படுகையில் அவர், ஜோசப்பிடம் சொல்லி விட்டுப் போனார்.

> 'தம்பி. நம் வயலிலே அறுவடை நடக்கின்றது. மத்தியானச் சாப்பாட்டிற்கு அறுவடை செய்பவர்கட்கு அரிசி சாமான்களைக் கொண்டு போய்க் கொடு.'

ஆனால் அவன் போகவே இல்லை. புத்தகம் படித்துக் கொண்டே சோம்பேறித்தனமாக இருந்து விட்டான்.

அதை நினைக்கவே ஆசிரியருக்கு ஆத்திரமாக இருந்தது. காந்தியை மஹாத்மா ஆக்கிய முடிவுமட்டும் (Unto the last) என்ற நூலைப் படித்து விட்டுக் காந்தியடிகள் குறிப்பிட்டது அவர் ஞாபகத்திற்கு வந்தது.

> 'எல்லாரும் தத்தமது தொழிலைச் செய்ய உரிமை இருப்பதால், ஒரு வழக்கறிஞன் தொழிலும் ஒரு நாவிதன் தொழிலும் ஒரே மதிப்புடையவை. உழைப்பின் பாற்பட்ட வாழ்க்கைதான்-அதாவது வேளாண்மை செய்யும் உழவனின், கைத்தொழில் செய்யும்

உழைப்பாளியின் வாழ்க்கை தான் வாழ்வதற்கே ஏற்றது.

தன் மைந்தனைப் பொறுத்தவரையிற் தொழில் செய்வதையே அவன் இழிவாகக் கருதுகிறான். தோட்டத்தைக் கொத்துவதையோ, வயலில் வேலை செய்வதையோ, தன் தாயாருக்கு உதவி செய்வதையோ, ஏன் புழுதியில் விளையாடி அலங்கோலமாக இருக்கும் தன் உடன் பிறப்புக்களைக் கழுவித் துடைப்பது கூட அவனுக்கு வெட்கமாக இருக்கிறது. இந்த நிலையில் அவன் 'சோஷலிஸம்' பேசுவதில் மட்டும் சலிப்படையாது இருக்கிறான். 'உழைப்பவனுக்கே நிலம் சொந்தம் என அடித்துப் பேசுகிறான். செல்வம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்று குமுறுகிறான். அவனைப் போன்று உழைக்கவே முடியாத, சோம்பேறித்தனம் படைத்தவர்களால் சிருஷ்டிக்கப்பட்ட வறுமையைப் பகிர்ந்தளிப்பதுதான் சோஷலிஸமா?

நாதஸ்வர கானம் பொழிந்து கொண்டிருந்த வானொலி செய்தி அறிக்கையை ஒலிபரப்பத் தொடங்கிற்று.

ஏழேகால் மணியாகிவிட்டதைத் தெரிந்து கொண்ட ஆசிரியர் அவசர அவசரமாக முற்றம் பெருக்குவதை முடித்துக் கொண்டு, கிணற்றடிக்குச் சென்று தலையில் மள மள வென்று இரண்டுவாளி தண்ணீரை ஊற்றித்தன் குளிப்பை முடித்துக் கொண்டு வீட்டுக்கு வந்தார்.

செய்தி அறிக்கை இன்னமும் தொடர்ந்து கொண்டே இருந்தது.

ஜோசப்பிற்குத் தன் வாசிப்பில் இரசனை ஏற்படவில்லை என்பதை அவன் முகம் காட்டிற்று. சத்திய சோதனையாவது மண்ணாவது! விறுவிறுப்போ வேகமோ இன்றி ஒரே 'வழா வழா' என்று, வேகமே இல்லாமல் அந்நூல் இருப்பதாக அவன் எண்ணினான்.

'இந்த இயந்திர யுகத்திலே இராட்டையிலே நூல் நூற்பதும், ஆட்சியாளரின் தடியடிக்கு எதிராகக் கையைக் கூட உயர்த்தாமல் ராம நாம ஜபம் பண்ணிக் கொண்டு அசமந்திருப் பதும், பிறர் செய்த குற்றங்கட்காக உண்ணு விரத மிருப்பதும் — எல்லாமே வேடிக்கை யான வாதங்களாகத்தான் இருக்கின்றன' என்று எண்ணிக் கொண்டே வெறுப்போடு புத்தகத்தை மூடினுன் ஜோசப். மூடியவன் அப்போதுதான் பூசை முடிந்து வீட்டுக்கு வந் திருந்த தம்பியைப் பார்த்து ''போய்க் கோப்பி கொண்டு வாடா'' என்று விரட்டினுன்.

'உழைக்காத உனக்குச் சாப்பிட மட்டும் என்ன உரிமை இருக்கிறது' என்று கேட்க விழைந்தார் ஆசிரியர். ஆனுல் வானெலி செய்தியை முடித்துக் கொண்டதை உணர்ந்ததும் தன் உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு அவ சர அவசரமாகத் தன் காலை ஆகாரத்தைக் கொறிக்கத் தொடங்கினுர்.

செய்திகளை முடித்துக் கொண்ட வானெலி மகாத்மா வின் நூற்றுண்டு விழாவை யொட்டி அவரது பொன் மொழிகளை ஒலிபரப்பத் தொடங்கிற்று.

'நான் வெற்றி பெறும் ஆற்றல் ஏதுமே இல் லாத சாதாரணமான மனிதப் பிறவி. நான் செய்ய முடியும் ஒன்றை ஏன் எல்லோரும் செய்ய முடியாது? சாதாரண மனிதப் பிறவி யாகிய நான், என் ஆசா பாசங்களைக் கட்டுப் படுத்துவதைவிட மற்றவர்கள் மிக எளிதில், அல்லது என்னளவுக்காவது நிச்சயம் கட்டுப் படுத்த முடியும்.'

இதனைக் கேட்டதும் ஆசிரியருக்கு மகாத்மா காந்தியைப் பற்றி வின்சன்ற் ஷீன் என்பவர் எழுதிய வரிகள் ஞாபகத்திற்கு வந்தன.

> 'இவ்வாக்கியங்களிலுள்ள முரண்பாடு தான் தென் ஆபிரிக்கா, இந்தியா, உலகம் ஆகியவற்றில் அவர் கண்ட தோல்விக்கு அளவு கோல். தான் செய்ததை மற்றவர்களும் செய்ய முடியும் என அவர் நம்பினுர். காந்தியடிகள் இழைத்த இம்மாபெரும் தவறு தான் மனித வரலாற்றில் மகத்தான தோல்வி கண்ட சாக்ரட்டீஸ், புத்தர், யேசு ஆகிய மூவரின் வரிசையில் அவரைச் சேர்க்கிறது. இவர்கள் எல்லாரும் தாங்கள் செய்ததை எல்லாம் ஏனையோரும் செய்ய முடியும் என நம்பினர். அவர்கள் தவறு செய்தனர். அது போலவே காந்தியடிகளும் செய்து விட்டார்.'

மனக்கலக்கமடைந்த ஆசிரியர், எதிரே மாட்டப்பட்டிருந்த யேசு பிரானின் படத்தைப் பார்த்தபடி 'ஆண்டவரே உடலுழைப்பு அவமானத்துக்குரியதல்ல' என்று என் மகனுக்குப் புத்தி தருவித்து காந்தியடிகளைத் தவறு செய்யாதவராக ஆக்கி விடும்' என்று மன முருகப் பிரார்த்தித்த வண்ணம் தன் பாடசாலையை நோக்கிப் பயணப் பட்டுக் கொண்டிருந்தார்.

ராஜ. மித்ரா

# சில நேரங்களில் சில தோழர்கள்

அன்பு வாசகனே,

இந்தக் குறிப்பினை வாசித்த பிறகே என் கதையை வாசிக்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன். பரஸ்பர வசதி குறித்தே இந்த ஏற்பாடு.

''நான் இப்பொழுது புதிதாய் என்னை ஒரு சோதனையில் ஈடுபடுத்திக் கொண்டுள்ளேன். பயன் கதைகளுக்கு எதிர்ப்பும் ஆதரவும் இருக்கும். வாழ்க்கையே அப்படித் தான். பிரச்னைகள் இல்லாத வாழ்வுக்கு அர்த்தமில்லை. எனவேதான் வாழ்க்கை மாதிரி பிரச்னைக் கதைகளும் ரசமானவையாக இருக்கின்றன.''

''காலங்கள் மாறும் என்ற இந்தத் தொடர்கதையை எழுதிக் கொடுக்கையில் — இடையில் ஒரு சிறுகதை எழுதினேன். அந்தச் சிறுகதைக்கு 'சில நேரங்களில் சில மனிதர்கள்' என்று தலைப்பிட்டேன். திடீரென்று தோன்றியது

'ஆ! இந்தத் தலைப்பு அந்தக் கதைக்கு அல்லவா ஏற்ற, பொருத்திய, அதற்காகவே வாய்த்த தலைப்பு' என்று. வாழ்க்கையில் எது எதுவோ மாறுகின்றது. மாற்றத்தின் மூலம் சிறப்பு ஏற்படுகின்றது; வளர்ச்சி மிகுகிறது என்பதனாலேயே மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை ஆகின்றன; வரவேற்கவும் படுகின்றன. காலங்கள் மட்டும்தான் மாறுமா? ஒரு கதையின் தலைப்பு மாறாதா? மாறும். மாறியிருக்கிறது. 'சில நேரங்களில் சில மனிதர்கள்' என்று மாறி இருக்கிறது. கதை முடிகிறவரை இது மாறாது.''

தோழர் ஜெயகாந்தனின் எழுத்துக்களில் எனக்குள்ள மோகத்தால், அவர் எழுதிக் கொண்டிருக்கும் 'தொடர் கதை' ஒன்றுக்கு அவர் எழுதியுள்ள முன்னுரையின் பகுதிகளை இங்கு பொறித்து விட்டேன் என்று பிழைபடக் கருதத் தேவையில்லை. ஆனால், சில நேரங்களில் சில தோழர்களுக்கு நிச்சய புத்தி இருப்பதில்லை என்பதற்கு — அதுதான் இச் சிறுகதையின் தொனிப் பொருள் — மேலே உள்ள இரண்டு பந்திகளும் மிக அச்சாவாகப் பொருந்துகின்றன.

தோழர் ஜெயகாந்தன் ஜனசக்தி காரியாலயத்திற் புகுந்து எழுத்துப் 'பயிற்சி' பெறுவதற்கு முன்னர் எழுத்தாளன் என்ற 'மிடுக்குடன்' கம்யூனிஸ்ட் கட்சிப் பணிகளிலே என்னை இணைத்துக் கொண்டவன் நான். இன்று ஜெயகாந்தன் காங்கிரஸ் கட்சி அரசியலுக்காக மாரடித்துக் கொண்டிருக்கிறார். ஆனால், மாஸ்கோ - பீகிங் வாதப்பிரதிவாதங்களினால் மனம் புழுங்கிக் கட்சி அரசியலிலிருந்து ஒதுங்கிக் கொண்டாலும், மாக்ஸிஸ சித்தாந்தத்தில் எனக்கு இருக்கும் பிடிப்பு இம்மியும் தளர்ந்துவிடவில்லை. எனவே, நான் மூத்த தோழர் என்ற வாத்ஸல்யத்துடனும் இதனை எழுத நேரிடுகின்றது. புதிதாய் சோதனை ஒன்றிலே ஈடுபடும் பொழுதுகூட சோதனையில் நிச்சயபுத்தியின்றித் தவிக்கின்றார். கருத்துக்கள் மாறலாம்; வளர்ச்சியுடன் மாறவேண்டும். ஆனால், 'சஞ்சல புத்தியே என்

வித்துவம்' என்று ஜெயகாந்தன் கூத்தாடுவது பொருந் தாது. 8-8-69இல் 'தத்துவார்த்தமாக' எழுதியதிற்கு, 15-8-69இல் துப்பல் போட்டு அழிக்க வேண்டிய அளவுக்கு அவருக்குச் சஞ்சல புத்தி நிரம்பி வழிகின்றது. தனது சிறு கதைக்கு ஏற்ற தலைப்பு இன்னமும் கிட்டவில்லை என்பதை ஒப்புக் கொள்ளும் ஜெயகாந்தனின் நேர்மையைப் பாராட் டலாம். 'கதை முடிகிற வரை இது மாறுது' என்று கூறுவ தின் மூலம் இந்தத் தலைப்புக்கூட பொருத்தமானதா என்ற சஞ்சலத்தில் அவருடைய மனம் அலை மோதுகின்றது. கதை என்ற கலைப்படைப்பிலும் பார்க்க, அதற்கான தலைப்பு என்ற 'பிஸினஸ்' விவகாரத்தில் தனக்குள்ள ஈடு பாட்டினைத் தோழர் இவ்வளவு அம்மணமாகக் காட்டுவது மிக ரஸக் குறைவானது என்பது என் அபிப்பிராயம். 'தலைப்பு வைத்தல்' என்ற வியாதி நமது எழுத்தாளத் தோழர்களை வெகுவாகப் பீடித்துள்ளது என்பதையும் அவ தானிக்க முடிகின்றது. 'சடங்கு' என்ற தலைப்பில் நான் ஏதோ கதை பண்ணிக் கொண்டிருக்க, அதே தலைப்பில் தோழர் கணேசலிங்கன் ஒரு நாவலைச் சுடச்சுட அச்சிட்டு வெளியிட்டார். 'சடங்கு என்ற தலைப்பு உமக்கு மட்டுந் தான் சொந்தமோ?' என்று அவர் கேட்டால் என்னால் பதில் சொல்ல முடியாது. கலையென்று நான் நேசிக்கும் ஒரு துறையில் இவ்வளவு 'கோக்கு மாக்கு' இருக்கிறதா என நான் அசந்துவிடவும் இல்லை. சில நேரங்களில் சில தோழர்கள் அப்படித்தான் இருக்கிறார்கள் என்பது யதார்த்தம்.

இனி, என் கதைக்கு வருவோம். தோழர்கள் இருவரு டைய டயறிக் குறிப்புக்கள் சில என் கதையிலே புகுந்து விட்டன. தோழர் மார்க்கான் ஆங்கிலத்திலும் தேதியுள்ள டயறியை உபயோகிப்பவர். ஆங்கிலத்திலேயே சிந்திப்பவ ராகிய அவர் தமது குறிப்புக்கள் சிலவற்றை ஆங்கிலத்தி லும் எழுதி வைத்துள்ளார். அவருடைய ஆங்கிலத்தை விளங்கிக் கொள்ளாவிட்டாலும் பாதகமில்லை. கதையின்

தொனிப் பொருளை நுகருவதற்கு இது தடையாக இருக்க மாட்டாது: மற்றைய தோழரின் டயறிக் குறிப்புக்கள் கதையின் ஓட்டத்திற்கு ஈடுசெய்யும் என்பது கவனத்தில் வைத்துக் கொள்ளத் தக்கது. இந்த டயறிக் குறிப்புக்கள் 1962 ஆம் ஆண்டு மே மாதம் 9ஆம் நாளுக்கும், 1964ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29ஆம் நாளுக்கும் இடைப் பட எழுதப்பட்டவை என்பதுங் கவனத்திற்குரியது. இவை தவிர, மகாத்மா காந்தி தமது சுய சரிதையான 'சத்திய சோதனை'யின் மூன்றும் பாகத்திலே 'பிரமச்சாரியம்' என்ற தலைப்பில் எழுதியுள்ள ஏழாம் எட்டாம் அத்தியாயங்களின் பகுதிகள் சிலவும் இடையிலே புகுத்துவிட்டன என் பதைக் கூறி உன்னுடைய வாசகப் பரப்பினைச் சந்தேகிப்ப தற்குக் கூச்சமாக இருக்கின்றது. இக்கதையை வாசிக்கும் பொழுது, ஆரம்ப கட்டத்திலாவது, குறுக்கெழுத்துப் போட்டி நிரப்புவதான அவதி உனக்கு ஏற்படலாம். இந்த அவதி தற்காலிகமானதுதான். கதையிலே முற்றுக ஈடு படும் பொழுது, நான் எழுதாது, கோடி காட்டி, உன்னு டைய கற்பனைக்கு விட்டுள்ள பகுதிகள் இன்னமும் சுவைப் பாய் இருப்பதையும் உணர்ந்து கொள்வாய். உன் கற்பனை யிலும் நான் கொண்டுள்ள நம்பிக்கைதான் இக் கதையின் பரிசோதனைத் தளம்.

May 9 மே

Wednesday புதன்

மேதின சபதம் வெற்றி. Com சுந்தர் elected Mayor.

நாளை மத்திய கமிட்டிக் கூட்டம்.

Trunk Call: Colombo & Hatton.

## 13 மே — புதன்

என் கணவர் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது, நானே அப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதான மன நிறைவினைத் தருகின்றது. இருக்காதா? முதல் தட

வையாக என் கணவர் முனிசிப்பல் தேர்தலிலே போட்டியிட்டபொழுது கட்டுக் காசையும் இழந்தார். இரண்டாந்தடவை வெற்றி கிட்டுவதான அறிகுறிகள் தென்பட்டன. ஆனல், ஈற்றிலே தோல்வி. அத்துடன், தனது அரசியல் வாழ்க்கை அஸ்தமித்துவிட்டதாக என் கணவர் வருந்தத் தொடங்கினர். பிரசாரக் கூட்டங்களுக்குத் தோழர்கள் வருவார்கள் போவார்கள். வெற்றியிலும் தோல்வியிலும் அவருக்கு உறுதுணையாக இருக்க வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. மூன்ருவது தடவை தேர்தலிலே நின்று தோற்ருல், அவர் எவ்வளவு தூரம் பாதிக்கப்படுவார் என்பதை நான் ஒருத்தியே பூரணமாக அறிந்திருந்தேன். நான் ஏருத வீடில்லை; நேரிலே பார்த்துப் பேசாத வாக்காளரில்லை என்ற அளவிலேதான் பிரசாரம் செய்தேன். வெற்றி பெற்ருர். அவர் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது, அந்த வெற்றிக்கு மகுடம் சூட்டுவது போல அமைந்துள்ளது.

## 21 ஒக்டோபர் — ஞாயிறு

ஒக்டோபர் புரட்சி விழாவையும், மாநகர சபையில் என் கணவர் கொண்டுவந்த சீர்திருத்தங்களுக்காக அவரைப் பாராட்டும் வைபவத்தையும் ஒன்ருக இணைத்துப் பிரமாதப்படுத்தி விட்டார்கள். இக்கூட்டத்தில் தோழர் மார்க்கான் பேசிய ஒவ்வொரு சொல்லும் என் நினைவுக்கு வருகின்றது. 'தோழர் சுந்தர் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது, நமக்குத் தமிழ் மக்கள் மத்தியிலே வளர்ந்துவரும் செல்வாக்கையே காட்டுகின்றது. அப்பன் பொன்னரும், தந்தை செல்வாவும் வளர்த்து வந்த தமிழ் வகுப்புவாதத்தைத் தமிழ் மக்கள் தூக்கி எறிந்து விட்டார்கள். இதனுலேதான் தோழர் சுந்தரின் வெற்றி அவருடைய மனைவியின் தாலிப் பாக்கியத்திற்குக் கிடைத்த வெற்றி என்று

வெட்கங்கெட்ட முறையில் ஏரிக்கரைப் பத்திரிகைகள் வாந்தி எடுக்கின்றன. நமது பாட்டாளி வர்க்கத்தினர் ஆட்சிக்கு வந்தால், ஏகாதிபத்தியத்தின் மிச்ச சொச்சங்களும், முதலாளித்துவத்தின் அடிவருடிகளுமான ஏரிக்கரைப் பத்திரிகைகளின் விலா எலும்பை நொருக்குவார்கள் என எச்சரிக்க விரும்புகின்றேன்... தோழர்களே! நமது'தோழர் சுந்தரர்க்குக் கிடைத்த வெற்றி பட்டாளி வர்க்கத்திற்குக் கிடைத்த வெற்றி என்பதைப் பறை சாற்றுங்கள்... இந்த மேடையிலே இன்னும் ஒன்று கூற விரும்புகின்றேன். ஒரு நல்ல கம்யூனிஸ்டின் நல்ல மனைவி எப்படி வாழ வேண்டும் என்பதற்கு தோழர் சுந்தரின் மனைவி பொன்னுன எடுத்துக் காட்டு. மேடையிலே அமர்ந்திருக்கும் அவரைப் பாருங்கள். நிறை குடம் போலவும், குத்து விளக்குப் போலவும் அமர்ந்திருக்கின்றார். அவரைப்பற்றிக் கூசாது அவதூருக எழுதிய கைக்கூலிகளைப் பாட்டாளி வர்க்கம் என்றும் மன்னிக்க மாட்டாது...' தோழரின் பேச்சைக் கேட்கும் பொழுது உண்மையில் என் தேகம் புல்லரித்தது.

ஸ்ரீ கிளாஸ்டன் பார்லிமெண்டுக் கூட்டத்திலே இருக்கும் பொழுது கூட, அவருக்குத் தம் கையினுலேயே தேயிலைப் பானம் தயாரித்துக் கொடுக்க வேண்டுமென்று அவர் மனைவி வற்புறுத்தி வந்தார் என்று நான் எங்கேயோ படித்திருந்தேன். புகழ் பெற்ற இத்தம்பதிகளின் ஒழுங்குபடுத்தப்பட்ட வாழ்க்கையில் இது ஒரு நியதியாக ஆகிவிட்டதாம்.

November 14 நவம்பர்

Wednesday புதன்

இன்று தான் சீனுவிலிருந்து திரும்பினேன். என்னை
வரவேற்பதற்கு தோழர் V
விமான நிலையத்திற்கு வந்ததில் மகிழ்ச்சி.
**Must brief the inner party comrades.**

17 ஜனவரி — வியாழன்

என் கணவரின் தேகநிலே மிகவும் மோசமாகி வருகின்றது. மேயர் பதவியை அவர் ராஜினமாச் செய்ய வேண்டும் என்று சில தோழர்கள் வற்புறுத்தி வருகிறார்கள். தோழர் மார்க்கானுக்கு எங்கள் குடும்ப நலனிலேதான் எவ்வளவு அக்கறை? அடுத்த வாரமே என் கணவர் ருஷியாவுக்கோ அல்லது சீனவுக்கோ அனுப்பப்பட இருக்கிறார். என் கணவருக்குப் பதிலாக நானே போலிட்பீரோ மெம்பராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றேன். இப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப் பட்ட முதலாவது பெண் நான்.

இவ்வரலாற்றில் பிரமச்சாரிய விரதத்தை மேற்கொள்வதைப் பற்றி நான் தீவிரமாக நினைக்கத் தொடங்கிய கட்டத்திற்கு இப்பொழுது வந்திருக்கின்றோம். எனக்கு மணமான காலத்திலிருந்தே நான் ஏக பத்தினி விரதத்தில் உறுதி கொண்டிருந்தேன். என் மனைவியுடன் உண்மையோடு நடந்துகொள்வது என்பது சத்தியத்திடம் நான் கொண்டிருந்த பக்தியின் ஒரு பகுதியாயிற்று.

February 18 பெப்ரவரி

Monday திங்கள்

Rivisionist clique and the bloody பறங்கி. Must move fast.

February 19 பெப்ரவரி

Tuesday செவ்வாய்

தொழிற் சங்கத்தில் திரிபுவாதிகளுக்குச் செல்வாக்கில்லை.
C. W. F. is Solidly behind me.
மா ஓ பாட்ஜ் வந்து சேர்வதில் என்ன கணக்கம்?

February 20 பெப்ரவரி

Wednesday புதன்

தோழர் V யின் அறிக்கை ஜோர். It will strengthen my stand.

Youth league உசாராக்க வேண்டும்.

Big C is not pulling fast.

February 21 பெப்ரவரி

Thursday வியாழன்

திரிபுவாதிகள் முகத்தில் கரி. பறங்கிக் கும்பல் எடுத்தது ஓட்டம்.

Vital Conference with Big C.

கேரளாவுக்கு 100,000 Literature அனுப்பவேண்டும்.

5 ஏப்ரல் — வெள்ளி

என்ன விந்தை? நான் தோழர் மார்க்கானைக் கனவிலே கண்டேன். அந்த இனிய கனவு நிறைவேறுமா? நிறைவேறினால் எனக்கு அரசியலும் வேண்டாம். புகழும் வேண்டாம். அடுக்களைப் பெண்ணாகவும் படுக்கைப் பாவையாகவும் இருப்பதில் பூரண திருப்தி அடைவேன்.

ஸ்ரீமதி கிளாஸ்டன் தமது கணவரிடம் கொண்டிருந்த அபார பக்தி குறித்து ஒரு சமயம் ராய்ச்சந்திரபாயிடம் சொல்லிக் கொண்டிருந்தேன்.

9 ஏப்ரல்—செவ்வாய்

தோழர் மார்க்கான் எனக்காக எதுவும் செய்வார்...... என்ன அர்த்தம்.

10 ஏப்ரல்—புதன்

ஒரே பானையில் வெந்த சோற்றையும், ஒரே சட்டிகளில் ஆக்கிய கறியையும் தோழர் மார்க்கானுடன் ஒன்றாக இருந்து சாப்பிடும் பொழுது எவ்வளவு இன்பமாக இருந்தது? பாவம், என் கணவர். பச்சை அரிசிச் சோறும் மரக்கறியும்!

## 11 ஏப்ரல் — வியாழன்

**ஆகா, பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் ஏற்பட்ட சுகம். இந்த இரவை வாழ்நாளில் மறக்க மாட்டேன்:**

May 1 மே

Wednesday புதன்

இன்று தலைநகரில் மூன்று May Day ஊர்வலங்கள்.
என்னுடைய Ceylon Workers' Federation நடத்திய ஊர்வலமே the biggest and the longest.
Long Live Mao. தோழர் V மட்டக்களப்புக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கச் சென்றுள்ளார்.

May 2 மே

Thursday வியாழன்

யாழ்ப்பாண விநியோகத்திற்கு 50,000 சுருட்டுக்கள் அனுப்பப்பட்டுள்ளன.

June 4 ஜூன்

Tuesday செவ்வாய்

என் 50th பிறந்த நாள். தோழர் தேசப்பிரியா வீட்டில் விருந்து.
தோழர் Vயும் வந்திருந்தார்.

June 9 ஜூன்

Sunday ஞாயிறு

அச்சுவேலிக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கும் பொழுது தோழர் V மயங்கி விழுந்தார். Telegram: கொழும்பு வரும்படி.

June 10 ஜூன்

Monday திங்கள்

தோழர் V consulted Doctor.
Admitted. Must undergo Plastic surgery.

June 12 ஜூன்

Wednesday புதன்

Treatment success. Vital conference with Big C.

ராய்ச்சந்திரபாய் என்னிடம் பின்வருமாறு கேட்டார்: ஸ்ரீமதி கிளாஸ்டன் மனைவி என்ற முறையில் தன் கணவரிடம் கொண்ட அன்பு பெரிதா? ஸ்ரீ கிளாஸ்டனிடம் அவருக்குள்ள உறவு எதுவானாலும் அதைப் பற்றிய சிந்தனையின்றி ஸ்ரீமதி கிளாஸ்டன் அவருக்குப் பக்தியோடு செய்து வந்த சேவை பெரிதா? ..... அப் பெண்மணி அவருடைய சகோதரி என்றோ, வேலைக்காரி என்றோ வைத்துக் கொள்வோம். அதே கவனிப்போடு அப்பொழுதும் தொண்டு செய்திருந்தால் அப்பொழுது நீங்கள் அந்தச் சேவையைப் பற்றி என்ன கூறுவீர்கள்?

## 7 ஜுலை—ஞாயிறு

என் கணவர் கிழக்கு ஜேர்மனியிலிருந்து திரும்பிவிட்டார். பூரண சுகமடைந்துள்ளவராகக் காணப்படுகின்றார். தேர்தல் நொமினேஷனுக்கு இன்னும் ஒரு மாதம் இருக்கின்றது.

July 9 ஜுலை

Tuesday செவ்வாய்

சபாஷ்! ஆலயப்பிரவேச இயக்கத்தில் நம் தோழர்கள் கேந்திரப் பதவிகளைக் கைப்பற்றியுள்ளார்கள்.
அடுத்த கிழமை சங்கானையில் பலப்பரீட்சை.
Telegrams to: K. D., K. S., Hidler and Kaleel.

July 10 ஜுலை

Wednesday புதன்

1000 மா ஓ பாட்ஜ் அனுப்பப்பட்டது.
C. W. F. இன் சொந்த அச்சகம் நிறுவப்பட்டது.

## 17 ஜுலை—புதன்

பத்து நாள்களுக்கிடையில் இவருடைய உடல்நிலை இப்படி மோசமாகிவிட்டதே. வெளிநாட்டிலிருந்து

திரும்பியதும் புது வாழ்வு கிட்டும் என்று எதிர் பார்த்து ஏமாந்தேன். பன்னிரண்டு ஆண்டுகளாக என் உடலையே தொட்டுப் பார்க்காமல்......

கணவனுக்கும் மனைவிக்கும் இடையே பிரிக்க முடியாத பந்தம் இருக்கிறது. ஆகையால் கணவனிடம் மனைவி பக்தி கொள்வதில் ஆச்சரியம் எதுவுமில்லை. இந்த பக்தி முற்றிலும் இயற்கையானது. ஆனால், எஜமானுக்கும் வேலைக்காரனுக்கும் இடையே இதற்கு இணையான ஒரு பக்தியை வளர்ப்பதற்கு விசேட முயற்சி அவசியம் ஆகிறது.... கவிஞரின் கருத்து எனக்கு மெள்ள மெள்ள விளங்கலாயிற்று.

## 2 ஆகஸ்ட்—வெள்ளி

உடல் நிலை காரணமாக என் கணவர் தேர்தலிலே போட்டியிடக்கூடாது என்றும், அந்த இடத்திற்கு தோழர் மார்க்கான் போட்டியிட வேண்டும் என்றும் மத்திய கமிட்டியில் வந்த பிரேரணை ஒரு வாக்கினால் தோற்றது. என் கணவருக்கு எதிராக எப்படிப் பகிரங்கமாக வாக்களிப்பது? தோழர் மார்க்கானிடம் நாளை முழுவதையும் விளக்க வேண்டும்.

## 10 ஆகஸ்ட்—சனி

என் 46 வது பிறந்த தினம். எனக்கு இவ்வளவு வயது என்று யாரும் நம்பமாட்டார்கள். தோழர் மார்க்கான் சினத் தங்கத்திலே செய்த மோதிரம் ஒன்றை என் கணவருக்குத் தெரியாமல் பரிசளித்தார். எனக்கு நாற்பது வயதாகின்றது என மழுப்பினேன்.

## 1 செப்டம்பர்—ஞாயிறு

'நான் படுக்கையிற்கிடக்கும் பொழுது நீ மார்க்கானுடன் ஊர் சுற்றித் திரிவது வடிவில்லை. தோழர்கள் ஒரு

மாதிரியாகப் பேசுகிருர்கள்' என்று சொன்னுர். என் கணவர் ஒரு பேராசைக்காரன். இந்த உடல் நிலையிலும் தேர்தல் பிரசாரம் நடத்துகின்ருரே.

'அப்படியானுல் எனக்கும் என் மனைவிக்கும் இடையே இருக்கும் உறவு எப்படி இருக்க வேண்டும்?' இவ்வாறு என்னை நானே கேட்டுக்கொள்வேன்.

October 4 ஒக்டோபர்

Friday வெள்ளி

Big C agreed.
C. W. F. திரிபுவாதத் தலைமையை முற்ருகப் புறக்கணித்து,
என் தலைமையை ஏற்றுக்கொண்டது.
பறங்கிக் கூட்டம் Labour Federation of Ceylon
என்று புதிய தொழிற் சங்கம் தொடங்கியிருக்கிருர்கள்.
Must break it up.

October 6 ஒக்டோபர்

Sunday ஞாயிறு

உண்மையான மார்க்ஸிஸ - லெனினிஸ - மா ஓ வழிவந்த
புதிய புரட்சிவாதக் கட்சி அமைக்கப்பட்டுவிட்டது.
தோழர் V, Hidler, Stalin, Liu, கோப்பாய், ராமன்குட்டி பிராந்திய அமைப்பாளராக நியமிக்கப்பட்டிருக்கிருர்கள்.

என் மனைவியைப் பொறுத்தவரை நேர்மையாக சொல்வதானுல் காம இச்சைக்கு என்னைத் தூண்டுபவளாக அவள் என்றுமே இருந்ததில்லை என்றே கூறவேண்டும்.

## 5 ஜனவரி — ஞாயிறு

தேர்தல் தோல்வி இவரை வெகுவாகப் பாதித்து விட்டது. நாளுக்கு நாள் உடல் நிலை சீர் குலைந்து வருகின்றது. தன்னை நான் விவாகரத்துச் செய்யக் கூடாது என்று கெஞ்சுகின்ருர். அவ்வாறு செய்ய மாட்டேனென்று வாக்குறுதி அளித்துள்ளேன். இன்னும் சில

வாரங்களுக்கு மேல் அவர் உயிர் வாழமாட்டார் என்று டாக்டர்கள் கூறிவிட்டார்கள். எனக்குப் பொறுமை இருக்கின்றது; விதவையான நான் தோழர் மார்க்காளை மறு மணஞ் செய்வதைப் புரட்சி வாதத் தோழர்கள் ஆட்சேபிக்கவில்லை என்பதல்ல; முழு மனத்துடன் ஆதரிக்கவும் செய்கின்றார்கள்.

சமூகத்தின் சேவைக்கே என்னை இந்த வகையில் அர்ப்பணஞ் செய்து கொள்ள விரும்பினால், பிள்ளைப் பேற்றில் அவாவையும் பொருளாசையையும், அறவே ஒழித்துவிட்டுக் குடும்பக் கவலையினின்றும் நீங்கியதான வானஸ்பிரஸ்த வாழ்க்கையை நான் மேற்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் உதயமாயிற்று.

January 7 ஜனவரி

Tuesday செவ்வாய்

தோழர் V Plastic surgery செய்ய மறுக்கின்றார்.
நியாயமற்றது. Must convince.

January 9 ஜனவரி

Thursday வியாழன்

Plastic surgery successful.

January 15 ஜனவரி

Wednesday புதன்

Com. சுந்தரலிங்கம் காலமானார். அவர் ஆத்மா சாந்தியடைய.

February 5 பெப்பிரவரி

Wednesday புதன்

சிறுபான்மைத் தமிழர்... கிளர்ச்சிக் கூட்டம்.
குழப்பம் சூடு பிடிக்கவில்லை.
கொழும்பு மாம்பழம் 1000 தேவை நமது தோழர்களுக்கு.
அப்பொழுதுதான் குழப்பநிலை வளரும்.
இன்றிரவு தோழர் V யுடன் கழிந்தது.

March 2 மார்ச்

Monday திங்கள்

K. K. S. கூட்டம். மாவிட்டபுரம்.
மாம்பழங்கள் தயார்.

March 3 மார்ச்

Tuesday செவ்வாய்

குழப்பம். வெற்றியில்லை. ஆரம்பம்.
பத்திரிகைகள் இருட்டடிப்பு.
அறிக்கை.

March 4 மார்ச்

Wednesday புதன்

என் தத்துவ விளக்கக் கட்டுரை Daily News இல் பிரசுரமாகியுள்ளது.
Why should Big C insist on Govigama Sinhala orientation of Our Party.

March 29 மார்ச்

Sunday ஞாயிறு

துண்டுப்பிரசுரம். A C. L. C. ஐக் காண வேண்டும்.
File affidavit.
Plastic surgery... தீராத பிரச்சினை.

April 4 ஏப்ரில்

Saturday சனி

Bank loan?? Labour Trib. சாட்சிகள் தயார்.
தோழர் V பிரச்சினை பற்றி Q. C. ஐச் சந்திக்க வேண்டும்.

April 9 ஏப்ரில்

Thursday வியாழன்

Courts... Proxy to Proctor.
கொழும்பு போக முடியாது. தோழர் Vயை அனுப்பலாம். அத்துடன் Q. C. யின் ஆலோசனைகளையும் அவர் நேரில் கேட்டு வரலாம்.

ஆனால் அத்தகைய பிரமச்சரியத்தை மனிதப் பிரயத்தினால் மட்டும் அடைந்து விடுவது முடியாத காரியம் என்பதை நான் இந்தியாவுக்கு வந்த பிறகே அறியலானேன்.

12 ஏப்ரில்—ஞாயிறு

என் தாய்க்கிழவிக்கு எது சொன்னாலும் விளங்குவதில்லை. கணவர் உயிருடன் இருக்கும் பொழுதே இருந்து வந்த தொடர்பு...கணவனும் அறிவார். இப்பொழுது கிழவி "நான் பொலிடோல் குடிப்பேன்" என்று பயமுறுத்தினால், நான் என்ன செய்வது? கிழவி செத்துத் தொலையட்டும்.

April 13 ஏப்ரில்

Monday திங்கள்

தோழர் Vயின் தாயார் தற்கொலை செய்துவிட்டதாகத் தகவல் வந்திருக்கிறது. Contact Q. C. inmmediatly.

13 மே—புதன்

இன்று தாயாரின் அந்தியேட்டி...... இன்று தான் இந்த வீட்டில் கடைசி நாள். சிறைவாழ்வு ஒழிந்தது. நாளை மறு தினம் செல்வி சுப்பையா புவனேஸ்வரியாகிய எனக்கும், நவக்கிரி மார்க்கண்டு அவர்களுக்கும் மிக இரகசியமாகப் பதிவுத் திருமணம் நடை பெற இருக்கின்றது. Q. C. எல்லா ஏற்பாடுகளையும் கவனித்து விட்டார். புதுமணப் பெண்ணின்குறு குறுப்பு மனத்தை அரிக்கின்றது. இவ்வளவு காலமும் P. Sunderalingam என்று கையெழுத்து வைத்துள்ள நான் இனிமேல் P. Markandoo என்றல்லவா கையெழுத்து வைக்க வேண்டும். நாளை முழுவதையும் கையெழுத்து வைத்துப் பழகுவதிலேயே கழிக்க உத்தேசம்.

இந்திரியங்களைத் தடுத்து வைப்பவனுக்கு விஷயானுபவங்கள் இல்லை; ஆனால் ஆசை மட்டும் இருக்கும். பர

மாத்மாவை தரிசித்த பிறகு அவனுடைய ஆசையும் அழி கிறது.

May 12 மே

Monday திங்கள்
Parliament dissolved.

June 7 ஜூன்

Sunday ஞாயிறு
மா ஓ சிந்தனைகள் 50,000 விநியோகிக்கப்பட்டுவிட்டன.
50,000 மா ஓ Badges தேவை.
துப்பாக்கிக் குண்டுகளிலிருந்துதான் அதிகாரம் பிறக்கிறது' என்ற கோஷத்திற்கான விளக்கவுரை. Big C uses pressure tacties on the Govigama Sinhala orientation of Our Party.

June 9 ஜூன்

Tuesday செய்வாய்
டிராஸ்கிய திரிபுவாதி கே. கனகசிங்கம் புளுகுணி எரிக்கரைப் பத்திரிகையில் புளுகுணிக் கட்டுரை ஒன்று எழுதியிருக்கின்றான்.
பதில் கட்டுரை எழுதி வாயை அடைக்க வேண்டும்.
தோழர் V என் மனையியாகிவிட்டபடியால், நான் தேர்தலில் நிற்க வேண்டுமென்று Big C விரும்புகின்றது. Big C யே எனக்கு நிதியும் மதியும். தேர்தலில் நிற்பதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று: என் மனைவியின் தேர்தல் ஞானத்தைப் பயன் படுத்துவது. இரண்டு: மா ஓ சிந்தனைகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்குத் தேர்தல் பிரசார கூட்டங்கள் பயன்படும்.

9 ஜூன்—செவ்வாய்

என் கணவர் பாராளுமன்ற அங்கத்தவராக வேண்டும். இதுவே என் ஆசை; இலட்சியம். இதனைக் கண்டிப் பாகச் சொல்லி விட்டேன்.

June 17 ஜூன்

Wednesday புதன்
Six of Our Party candidates are selected.

'துப்பாக்கிக் குண்டுகளிலிருந்துதான் அதிகாரம் பிறக்கிறது'
என்ற கோஷத்துடன் தேர்தல் பிரசாரம் அங்குரார்ப்பணம்.

## 4 ஜுலை — சனி

**என் கணவருக்கு நல்ல ஆதரவு. தோழர் சுந்தரலிங்கத்திற்கு இருந்ததிலும் பார்க்க, தொழிற் சங்க வாதிகள் மத்தியில் என் கணவருக்கு அமோக ஆதரவு இருக்கின்றது. முழுகி இரண்டு மாதம். அதற்காகத் தேர்தல் பிரசாரத்தைக் கைவிடமுடியுமா?.**

**ஆகவே மோக்ஷத்தை நாடுகிறவனுக்கு ஆண்டவனுடைய திருநாமமும் ஆண்டவனுடைய பேரருளுமே கடைசி ஆதாரங்கள். இந்தியாவுக்குத் திரும்பிய பின்னரே இந்த உண்மை எனக்குப் புலனாயிற்று.**

September 11 செப்டம்பர்

Friday வெள்ளி

Printing Press Completed.

15ல் இருந்து சிங்களத்திலும் தமிழிலும் நமது பாட்டாளி வர்க்க தினசரிகள் வெளிவரும். நமது கட்சியைச் சேர்ந்த ஆறு வேட்பாளரும் கட்டுக்காசை இழந்துவிட்டதாகப் புளுகுணி ஏரிக்கரைப் பத்திரிகைகள் வாந்தி எடுக்கின்றன. புகட்டுவோம் பாடம்.

Agreed with Big C to give a Govigama Sinhala colouring to Our Party.

September 28 செப்டம்பர்

Monday திங்கள்

செஞ்சீனக் குடியரசின் பதினைந்தாவது ஆண்டு விழாவில் கலந்து கொள்ள மனைவியும் நானும் நாளை மறுதினம் பீக்கிங் புறப்படுகின்றோம்.

## 29 செப்டம்பர் — செவ்வாய்

**நானும் என் கணவரும் நாளைக்கு பீக்கிங் புறப்படுகின்றோம். தேசப்பிரியாவும் எங்களுடன் வருகின்றார்.**

அங்கொடை எம். பீ. யான அவர் சுதந்திரக்கட்சியி லிருந்து விலகியுள்ளார். பீக்கிங்கிலிருந்து திரும்பியதும் அவர் நமது கட்சியிலே சேருவார். நமது கட்சிக்கு சிங் களத் தலைமை உண்டு என்று கூறுவதற்கும் வாய்ப்பாக இருக்கும்.

## வாசகனுக்கு பிற்குறிப்பு:

தோழர் மார்க்கான் என்பது தோழர் மார்க்கண்டு வையும், தோழர் V என்பது திருமதி சுந்தரலிங்கமாக இருந்து, திருமதி மார்க்கண்டு ஆகிவிட்ட தோழரையும் குறிக்கும் என்பதை உங்களைப் போலவே என்னாலும் சுலப மாக அறிந்து கொள்ள முடிந்தது. சுருட்டு என்பது ரூபா வையும், மாம்பழம் என்பது கைக்குண்டையும், Big C என்பது சீன அரசாங்கத்தையும் குறிக்கும் என்பதை என் விசாரணைகளில் அறிந்து கொண்டேன். டயறிக் குறிப்புக்க ளில் எனக்கும் விளங்காத பகுதிகளும் வருகின்றன. மா ஓ சிந்தனைகளைத் தினமும் வாசித்து வந்தால் எல்லாப் பகுதி களும் நன்கு விளங்கும் என்று 'திரிபுவாத' வைரிகளான புரட்சிவாதத் தோழர்கள் அபிப்பிராயம் தெரிவிக்கின் றார்கள். இதன் உண்மை பொய்யை அறிவதற்கு எனக்கு நேரம் இல்லை. என்னைப் பிற்போக்குவாதி எனச் சபித்தா லும் பாதகமில்லை. நீ வேலையற்ற படித்த வாலிபனாக இருந் தால், மா ஓ சிந்தனைகளுடன் இதனை ஒப்புநோக்கிப் படித்து எனக்கும் விளங்காத பகுதிகளையுந் துப்புத் துலக்க முன் வருவதில் எனக்கு ஆட்சேபனை கிடையாது.

தெளிவத்தை ஜோசப்

# கத்தியின்றி ரத்தமின்றி

அந்த மலைகள் மிகவும் பயங்கரமாக எழுந்து நிற்கின்றன.

சத்தியாக்கிரகத்துக்கு முன் இந்தியர்களின் உடமை, உரிமை, இத்தியாதிகளை சங்காரம் செய்த தென்னாபிரிக்கக் கொடுமைகளை விடக் கோரமாகத் தலைவிரித்துக் கொண்டு நிற்கின்றன.

உள்ளே எது நடந்தாலும் அதை வெளி உலகுக்கு காட்டுவதில்லை என்று கங்கணம் கட்டிக் கொண்டது போல் அந்த தேயிலைத் தோட்டத்தை அரண் செய்து கொண்டு நிற்கின்றன.

அந்த மலைகளின் ராட்சத உடலில் பட்டி பிடித்தாற் போல் சுற்றிவரும் செம்மண் பாதையில் கைப்பிரம்பைச் சுழற்றியபடி நடந்துவந்து கொண்டிருந்தார் தோட்டத்து டிஸ்பென்ஸர்-தோட்ட மக்கள் பாஷைப்படி டக்டரய்யா.

பையில் ஸ்டெதஸ்கோப்பும், கையில் பிரம்பும் இருக் இருக்கின்றனதானே, டக்டரில்லாமல் பிறகு !

தலையில் 'பாய்த்' தொப்பியும், மனதில் துவேஷமுமாக வெள்ளைக்கார நடை நடந்து கொண்டிருந்த சிங்கள டக்ட ரய்யாவைக் கண்டதும் நாய்களுக்கு ஒரே குஷி. குரைத்துக் கொண்டு ஓடிவந்தன.

கூலிக்காரன் நாய்தானே என்னை எப்படிக் கடிக்கும் என்றஅசட்டையுடன் நடந்து கொண்டிருந்த அய்யா டக் கென்று நின்றார்.

பாய்ந்து வந்த நாய்கள் பிறேக் போட்டு நின்றன.

பாதையடியில் நாய் குரைத்த சத்தம் கேட்டு காந்திப் படத்துக்கு மாலை போட்டுக் கொண்டிருந்தவன் றேட்டுப் பக்கம் திரும்பிப் பார்த்தான்.

''செலாங்கய்யா... லயம் பார்க்கவா... ?

''ஆமாம் தலைவர் என்ன இன்னிக்கு வேலை இல் லியா'' என்று கேட்டபடி இறங்கி வந்த அய்யா ''யாருட்டு படம் இது ..? மாலை எல்லாம் போடுறே?'' என்று கேட் டார்.

முன்பொரு தடவை அவரே அவனிடம் கூறியுள்ளார் ''இந்தியாக்கார ஆளுங்களுக்கு கொஞ்சம் கொட தேசப் பற்று கெடையாது. இந்த லயம் முழுக்கப் பாரு அத்தனை பேரு வீட்டிலேயும் ஒரு காந்தி ஒரு நேரு அல்லது ஒரு சுபாஷ் போஸ் படம் இருக்கும். எவன் வீட்டிலேயாவது ஒரு நம்ம தலைவர்களுடைய படம் இருக்கா, ஒரு சேனுநாயகா ஒரு பண்டாரநாயக்கா! கிடையாது. ஆனு சொல்லிக்கிறது மட்டும் இது எங்க நாடு; இதுல எங்களுக்கு உரிமை வேணும்? அப்படி இப்படின்னு'' என்று.

'அய்யாவுக்கு ஏன் இந்த வேண்டியில்லாத வியவகாரம் எல்லாம், லயம் பாக்க வந்தா லயத்தைப் பார்த்துட்டுப் போக வேண்டியதுதானே!' என்று நினைத்துக் கொண்டாலும் அவரிடமே கேட்டு வைத்தான் ''யார் வீட்டுல என்ன படம் மாட்டியிருக்குன்னும் அய்யா கணக்கெடுக்குறீங்க போல இருக்கு'' என்று.

''இல்லே தலைவரே இந்த ஆளுகளை எல்லாம் புடிச்சு வெறட்டிப் புடனும், இது உங்க நாடு இல்லே இந்த நாட்டுத் தலைவர்கள்லாம் உங்க தலைவர்கள் இல்லே, உன் காந்தி உன் நேரு இருக்குற நாட்டுக்கே போடான்னு இவர்களை எல்லாம் வெறட்டிப் போடணும்.''

''இதையே தானே உங்க தலைவர்மார்களும் சொல்றுங்க, சொன்னுங்க, சொல்லப் போறுங்க. நீங்கள்லாம் இந்த நாட்டு மக்கள் இல்லே, நீ எல்லாம் ஓடிப்போ, எங்க நாட்டுல உங்களுக்கு எதுவும் கிடையாதுன்னு'' கடைசி தமிழனையும் இந்நாட்டை விட்டுக் கப்பலேற்றிய பிறகு தான் நான் சாவேன் என்று சங்கல்பம் செய்து கொண்டவர்களுடைய படங்களை கண்ணாடி போட்டு வீட்டில் மாட்டிக் கொள்ள இவர்கள் என்ன பேடிகளா!

''எங்களை அடிப்பதற்கு ஆள் கூட்டவில்லை காந்தி. ஆனால் அவர் எங்களுக்காக அடிபட்டார். ஆகவே அவரை எங்களுடைய தலைவராக ஏற்றுக் கொள்கின்றோம். காந்தி படத்துக்கு கண்ணாடி போட்டு மாட்டிக்கொள் என்று யாரும் இந்த ஆட்களுக்குக் கட்டளை இடவில்லையே.''

— இப்படிச் சுடச்சுட முகத்திலடித்தாப் போல் முன் பொரு தடவை டக்டரய்யாவுக்கு பதில் கொடுத்தது அவன் நினைவிற்கு வந்தது. மகாத்மா காந்தியடியின் படத்தைக் காட்டி ''இது யாருடைய படம்?'' என்று கேட்பதன் மூலம் தனக்கும் தனது தலைவர்களுக்கும் பெருமை தேடிக்

கொள்வதாக எண்ணிக் கொள்ளும் அய்யாவின் அறியாமை அவனுக்கு சிரிப்பூட்டியது.

''இது யாருன்னு அய்யாவுக்கு தெரியாதா? அடப்பரி தாபமே! 'மனிதர்கள் தங்கள் நாட்டை நேசிக்கிறார்கள் என்பதால் மற்ற நாட்டை வெறுக்கின்றார்கள் என்பதல்ல பொருள்' என்று கூறிய மகாத்மா இவர்தான். மற்றவர் களுடைய நாட்டை, மற்றவர்களுடைய தலைவர்களை வெறுப்பதன் மூலம் உங்கள் நாட்டை, உங்கள் தலைவர்களை நேசிப்பதாகக் கற்பனை பண்ணிக் கொள்ளும் உங்களுக்கு உலகுக்கே ஒப்பற்றவரான ஒருவரைத் தெரிய முடியாது தான் ''

''தெரியாமல் என்ன. நல்லாத் தெரியும்.. ஏன் மாலை போடுறேன்னுதான் கேட்டேன்'' என்ற படி பேச்சை முறித்துக்கொண்டு தலைவர் வீட்டுக் கோடியில் நுழைந்து அடுத்த லயத்துக்குப் போய் விட்டார் அய்யா.

மேசையில் கிடந்த நோட்டீசை மறுபடியும் எடுத்துப் பார்த்துக் கொண்டார் தலைவர்.

அவர் சார்ந்துள்ள காங்கிரஸ் கட்சி கொண்டாடும் காந்தி விழா பற்றிய நோட்டீஸ் அது.

பேச்சாளர்கள் வரிசையில் அவருடைய பெயரும் தடித்த எழுத்தில் காணப்பட்டது.

தென்னாபிரிக்காவிலும் நேப்பாளம் போன்ற இடங்களி லும் அகிம்சையுடன் அவர் செய்த அறப்போரைப் பற்றிப் பேச வேண்டும் என்பது அவருடைய அவா. முக்கியமாகத் தென்னாபிரிக்காவில் அவர் அனுபவித்த கொடுமைகளைப் பற்றி இன்றெல்லாம் பேசலாம்.

மகாத்மா காந்தி எழுதிய 'தென்னாப்பிரிக்க சத்தியாக் கிரகம்' என்ற நூல் மேசையில் கிடந்தது. அதை எடுத்து வாசிக்கும் போதே அவருடைய நெஞ்சு உருகியது.

கறுப்பர்கள் நடக்கக் கூடாது என்று தடுக்கப்பட்டுள்ள ஒரு வீதியில் தெரியாத்தனமாக காந்தி நடந்து விட்ட போது அங்கு காவல் நின்ற போலீஸ்காரன் நேராக அவரிடம் வந்து ஒரு பேச்சும் பேசாமல் ஏன் வந்தாய் என்று கேட்காமல், திரும்பிப் போய்விடு என்று கூறுமல் தன்னுடைய பலம் பொருந்திய பூட்ஸ் காலால் அவர் நெஞ்சில் எட்டி உதைத்தான்.

இந்தத் திடீர்த் தாக்குதலை அவர் எதிர்பார்க்கவே இல்லை.

அவருடைய நோஞ்சான் உடம்புக்கு போலீஸ்காரனின் எதிர்பாராத முரட்டு உதையைத் தாங்கிக் கொள்ளும் சக்தி கிடையாது. உதைப்பட்ட வேகத்தில் எதிரில் போய் விழுந்தார். பாதையின் எதிர்ப்பக்கம் இருந்த வெள்ளைக்கல்லில் அவருடைய முகம் மோதி நசுங்கியது.

என்ன நடந்து விட்டது என்று தன்னைச் சுதாகரித்துக் கொண்டு அந்த இடத்தை விட்டு எழுந்திருக்க அவருக்கு சில நிமிடங்கள் பிடித்தன.

வாயில் வழிந்த இரத்தத்தை துடைத்து விட்டுக் கொண்டார். நெற்றிப் பொட்டு வீங்கிப் புடைத்திருந்தது. எங்கே வலிக்கிறது என்று தெரியாமல் முகம் முழுவதும் நோவு எடுத்தது.

காந்தி உதைபட்ட செய்தி காட்டுத்தீபோல் பரவியது. அவரை உதைத்தவனை கோர்ட்டுக் கிழுத்துப் பழி வாங்குமாறு அனைவரும் அவரை வேண்டினர்.

ஆனால் காந்தி மறுத்துவிட்டார்.

''அவனுக்கென்ன தெரியும் பாவம். சாவி கொடுத்து விட்டவன் யாரோ' இவன் ஆடுகின்றான்.''

அவன் என்னை உதைத்தான் என்பதல்ல அவமானம்; என் சமூகத்தையே உதைத்திருக்கின்றான்!

தலைவர் கண்களை மூடிக் கொண்டார். கோடாக நிற்கும் இமை விளிம்பில் மணியாக உருள்வது கண்ணீரல்ல, கரைந்த அவரது உள்ளம்.

''ஆகா இவரல்லவா மகாத்மா!''

கத்தியின்றி ரத்தமின்றி காந்தி நடத்திய அகிம்சைப் போர்களைப் பற்றி தன்னால் எவ்வளவு அழகாகப் பேச முடியும் என்பதை தீர்மானித்துக் கொண்ட பிறகே ஜில்லாவில் இருந்து வந்த கடிதத்துக்கு ஒப்புதல் பதில் போட்டார்.

தான் ஒன்றித்துப் போன ஒரு விஷயத்தை மற்றவர்களுக்கு எடுத்துக்கூறும் போது உணர்ச்சிப் பெருக்குடன் சொற்பெருக்காற்றலாம் என்ற நம்பிக்கையும் அவருக்கிருந்தது.

இன்று நேற்றா மேடை ஏறுகின்றார்?

சொற்பொழி வாற்ற ஒத்துக் கொண்டால் தலைப்பையும் தரும்படிக் கேட்டிருந்தார்கள் விழாக் குழுவினர்.

அவர் எழுதி அனுப்பிய தலைப்பைத்தான் அவர்களும் விழா நோட்டீசில் அச்சடித்திருக்கின்றார்கள்.

தலைப்பை நினைக்கையில் அவருக்கு இப்போதும் புல்லரிக்கிறது.

'கத்தியின்றி ரத்தமின்றி..... '

அன்று ஒரே அடை மழை.

வானம் பொத்துக் கொண்டதோ என்று ஐயுறுமளவுக்கு அடித்துக் கொண்டு ஊற்றுகிறது. இந்த பூமியே

இப்படித்தான். எப்போது காயும் எப்போது பெய்யும் என்று யாராலும் நிர்ணயித்துக் கூற முடியாது.

நோவா காலத்தைய நாற்பது நாள் மழையும் அன்றே பெய்து தீர வேண்டும் என்ற நோக்கத்துடன் அதிகாலையிலே காற்றும் மழையுமாகக் கொட்டத் தொடங்கி விட்டது.

மலையில் நிற்கும் மரங்கள் ஆடி அழன்று சோபை கெட்டுப்போய் நிற்கின்றன. கூடையும் தலையுமாக மலையிலேறி விட்டவர்கள் குன்னிப்போய் மரத்தடிக்கு மரத்தடி நிற்கின்றனர், நனைந்த கோழிகள் போல்.

தட தட வென்ற சத்தத்துடன் எங்கோ ஒரு சவுக்குக் கிளை முறிந்து விழுந்தது.

''ஏ புள்ளே ஒருத்தரும் மரத்தடியில நிக்காதே . வாதேதும் புண்டுவிழுந்தா ஆபத்து'' என்று கத்தியவாறு நின்று கொண்டிருந்த மரத்தடியில் இருந்து பெயர்ந்தோடினான் கங்காணி.

கொழுந்தெடுக்க முடியாவிட்டாலும் பெயருக்குக்கூட மலையில் நிற்க முடியவில்லை ஆட்களால். கையும் காலும் நீட்டியது நீட்டியபடி சுரணை கெட்டுப் போய்க் கொண்டிருக்கின்றன.

தலைவர் வேறூர் மலையிலிருந்து இறங்கி ஓடினார் ஆபிசை நோக்கி.

கம்பளிச் சட்டையும் தானுமாக கத கதவென்று உட்கார்ந்திருந்த துரை இழுத்த புகையை கூரையை நோக்கி ஊதிவிட்டு ''எஸ் தலைவர்'' என்றார்.

''வேலை விட்டுறனுங்க மழை அடி தாங்க ஏலாமல் இருக்கு மரம் ஏதும் ஒடிஞ்சு விழுந்தா ஆபத்து...''

''சரி விட்டுறுவோம் . இன்னைய சம்பளம்..?''

''முழுப் பேரு கொடுக்கணும்ங்க .. தோட்டத்துக்கே ஒழைச்ச ஆளுக தானே! மழை இப்படிப் பேயாட்டி முழு நேரம் வேலை செய்யுங்கதானே...''

''சரி இன்னும் அரை மணி நேரம் பார். மழை விடாட்டி எடுத்த கொழுந்தை நிறுத்திட்டுப் போகச் சொல்லு.''

''நல்லங்க'' என்று ஆபீஸ் படி இறங்கிய தலைவரை துரையின் குரல் நிறுத்தியது.

''கணக்கப் பிள்ளையை வரச் சொல் உடனே...''

''இப்போது மணி ஒன்பது தானாகிறது. இப்போதே வேலை நிப்பாட்டி முழுச்சம்பளம் கேட்கிறார்கள். நீ எப்படியாவது பனிரெண்டருதி கொழுந்தெடுக்கப்பார். அப்போது தான் பாதிக்குப் பாதியாவது தேறும்... ஒரே நேரம் நிறுத்தாலும் பாதகமில்லை. சரி போ.''

தொப்பையாக நனைந்தபடி மழைக் கோட்டையும் சுமந்து கொண்டு ஆபீசுக்கோடி வந்த கணக்கப்பிள்ளையிடம் துரை இப்படிக் கூறினார்.

''வெரி வெல் சர்'' என்று பெருமாள் மாடாய் தலையாட்டி விட்டு படி யிறங்கினார் கணக்கப்பிள்ளை.

மூட்டையுடன் ஊரும் கட்டெறும்புக் கூட்டமாய் கூடையுடன் சாரி சாரியாக ஆட்கள் ஊர்ந்து கொண்டிருந்தனர் பெறட்டுக் களத்தை நோக்கி.

கைக்கடிகாரம் நனைவதையும் பொருட்படுத்தாமல் மழைக் கோட்டிற்கு வெளியே கையை நீட்டி மணியைப் பார்த்தார் கணக்கப்பிள்ளை.

மறுபடியும் உற்றுப்பார்த்தார்.

மணி ஒன்பது ஐந்து.

இந்த மழையில் ஆட்கள் மலையில் நிறுத்தி வைப்பதும் ஒன்று தான் வீட்டுக்கனுப்புவதும் ஒன்று தான். மலையில் நின்ருலும் வேலையா செய்யப் போகின்ருர்கள். இல்லை வேலை செய்யத்தான் முடியுமா!

ஆனால் பனிரெண்டுக்கு முன்பாக அவர்களை வீட்டுக் கனுப்பினால் துரையிடம் தப்பிக்க முடியுமா அவரால்!

சாரைப் பாம்பாய் விர்ரென்று இறங்கினார் ஆறுக்கு ரூட்டில்.

சர்ரென்று ஊற்றிய மழை சப்பாத்து, தொப்பி, மழைக் கோட்டு ஆகியவற்றில் டப்டப்பென்று விழுந்து தெறித்தது.

நீரடித்த காடாய் கிடந்தது பெறட்டுக்களம்.

ஆட்கள் கூடையும் படங்குமாய் கூனிக் குறுகிக் கொண்டு நின்றனர்.

''ஏ கங்காணி இதுகளை எல்லாம் ஏன் இழுத்துக்கிட்டு வந்தே மணியைப் பார்'' இடக் கையை நீட்டிக் காட்டு கின்ருர்.''ஒன்பதேகால் தான்......இப்பவே நிறுக்க ஏலாது .. போ... போய் வேலை செய்யச் சொல்லு .. ம்ம்... போ எல்லாம்...''

கணக்கர் கத்தினார்.

கணக்கப் பிள்ளைக்குப் பயந்த ஓரிருவர் கூடையைத் தூக்கி தலையில் மாட்டினர்.

''ஒருத்தரும் போகவேணும் போடு கூடையைக் கீழே!''

தலைவர் நின்று கொண்டிருந்தார்.

கணக்குப்பிள்ளை அவரை முறைத்துப் பார்த்தார்.

''அய்யா மொறைக்காதீங்க... நான் தொரைக் கிட்ட கேட்டுட்டுத்தான் ஆளுகளை எறங்கச் சொன்னேன்...''

''வேலை செய்யுற ஆளுகளை மலையை விட்டு எறங்கச் சொல்ல நீ யார்... தொரையே சொல்லியிருந்தாலும் நீ வந்து எனக்கிட்ட சொல்லியிருக்கணும்...''

''இங்க பாருங்கையா'' ஒரு பெண் காலைக் காட்டுகின்றாள். நாட்டியக் காரிக்கு சலங்கை கட்டியது போல் விரல் பருமனில் அட்டைகள் தொங்கிக் கொண்டிருந்தன. அதைக் கணக்கப்பிள்ளை கவனித்ததாகக்கூட காட்டிக் கொள்ளவில்லை.

''தொரை தான் போகச் சொல்லிட்டாரே உங்களுக் கென்னங்கய்யா வந்தது... நீங்க கையை ஒடிச்சுக்கிட்டு சம்பளம் குடுக்கிறுப்புல ..''

"கையை ஒடிக்கிற; காலை ஒடிக்கிற கதை எல்லாம் நமக்கிட்ட வாணாம். நான் நெறுக்கப் போறதில்லை. நீ எல்லாம் மலைக்குப் போ...''

''நிறுக்காட்டிப் போ... கொஞ்சம் கொட ஈவு இரக்கம் கெடையாதவன்'' என்றபடி ஒருவன் கூடையை காலால் எட்டி உதைத்தான்.

கொழுந்து விசிறியடித்தது.

''ஏண்டா பார்த்துக்கிட்டு நிக்கிறீங்க கொட்டிட்டு வா...''

நாலைந்து இளவட்டப் பையன்கள் கூடைகளை எத்தி விட்டனர்.

''நிறுக்கப் போறியா இல்லையா'' - இது தலைவர்.

''நீ ஆயிரங் காரணம் சொல்லு நான் நிறுக்கப்போற தில்லை.'' - இது கணக்கப்பிள்ளை.

''ஆளுக குளிர் பிடுச்சு செத்தா...''

''மண்ணு ஈரமா தான் இருக்கு குழி வெட்ட லேசா இருக்கும் ''

''திமிர் பிடிச்ச ருஸ்கல் உனக்குக் குழிவெட்டவும் தரை ஈரமாத்தான் இருக்கும்... தொலைந்து போ...''

ஆத்திரம் கொண்ட தலைவரின் கத்தி கணக்கப் பிள்ளை யின் தோளில் பாய்ந்தது. கொய்யா மரத்தில் கொத்தி யதுபோல் கணக்கரின் தோள் எலும்பில் கொத்தி நின்ற கத்தியுடன் பிரக்ஞை அற்று கீழே விழுந்தார் கணக்கப் பிள்ளை.

ரத்தத்தில் மூழ்கிய கத்தி தனது சிவந்து விட்ட கண்க ளால் தலைவரை உற்று நோக்கிக் கொண்டிருந்தது.

இரசிகமணி கனக - செந்திநாதன்

# அன்பின் ஒலி

இந்நிலையில் எனக்குள்ள ஒரே ஒரு வழி கடவுள் கட்டளைகளைப் பின்பற்றுவதேயாகும். மனிதர்களின் உள்ளத்தினுள்ளே கடவுள் அவர்களுடன் பேசுகிறார். நமது உண்மையான நண்பன் கடவுள் தான். நாம் முற்றிலும் அவருடைய கையிலே தான் இருக்கிறோம்.''

காந்தி பொன்னையா அம்பாள் ஆலயத்திலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்தார். வழியில் செழுங் கிளை பரம்பி நின்ற மரத்தடியில் நாலைந்து மாடுகள் படுத்திருந்து அசை போட்டுக் கொண்டிருந்தன. நிழலுக்கு உட்கார்ந்து ஊர்வம்பு பேசிய இரண்டு நறுக்குமீசை வாலிபர்கள் பீடியைக் குடித்தபடி 'இந்த மனுஷன் கோயில் கோயிலென்று சாகுது. வாழ்க்கை முழுவதும் ஒரே துக்க மயம். கடவுளாவது கண் திறப்பதா

வது' என்று உரக்கப் பேசியதும் அவர் காதில் விழுந்தது. அந்தச் சொற்கள் அவருடைய உள்ளத்தில் எவ்வித சல னத்தையும் ஏற்படுத்த வில்லை.

அவர் வீட்டுக்குப் போகும் ஒழுங்கையில் திரும்பினர். அப்பொழுது தான் அவர் எதிர்பாராத சம்பவம் நடந்தது. அவர் மைத்துனர்—மாஞ்சோலை 'மெத்தை வீட்டு'ச் சுப் பிரமணியம் - குறுக்கிட்டார்.

''ஓய், நீர் பெரிய மனுஷன்; காந்தி பக்தன் என்று வேடம் போட்டதெல்லாம் போதும். எனக்கு நீர் எழுதித் தந்த நோட்டுக்குரிய பணத்தைத் தரப்போகின்றீரா இல்லையா?'' என்று அரைந்தார்.

பொன்னையா ஒன்றும் பேசவில்லை. சிரித்தார். அந் தச் சிரிப்பு மெத்தை வீட்டாருக்கு மேலும் கோபத்தை மூட்டியது.

''என்ன சிரிப்பு வேண்டிக் கிடக்கிறது'' சிரிச்சுச் சிரிச்சு இந்த ஊரை ஏமாற்றினது போதும். கிராம முன்னேற்றச் சங்கத் தலைவராக வர ஒரு சிரிப்புச் சிரித்தீர். வந்துவிட் டீர். நெசவுசாலை கட்டுவதற்குச் சிரிச்சுச் சிரிச்சுப் பணஞ் சேர்த்திருக்கிறீராம். அந்தப் பணத்திலை கொஞ்சத்தை எடுத்து என் கடனைத் தீர்க்கிறதுதானே? வெட்கம் மானம் இருந்தால் நாளைக்கே பணத்தை கொண்டு வந்துகொடும்'' என இரைந்தார்.

ஊர் கூடிவிட்டது. மெத்தை வீட்டாரின் மனைவி பத் திரகாளியின் உருக்கொண்டு அங்கு வந்து சேர்ந்தாள்.

''என்ன பார்த்துக் கொண்டு நிக்கிறியள். அவர் பல் லைக் காட்டினுல் உங்களுக்கு எல்லாம் அடங்கிப் போகும். நாமெனண்டால் உவங்களுக்குப் பழஞ் செருப்பாலைதான் குடுப்பன்.''

பொன்னையா அதைக் கேட்டும் ஆத்திரம் கொள்ள வில்லை. அந்த இடத்தைவிட்டுப் போய்விடுவது உசிதம் என்று மட்டும் நினைத்தார். அவர் நினைத்தது நடக்கவில்லை. அங்கு வந்து சேர்ந்த அவருடைய மகன் நடராசாவினு டைய குரல் ஒலித்தது.

''ஏன் நிற்கிறீர்? அடியுமேன் பார்ப்போம். அம்மை யாரும் சப்போட்டுக்கு வந்துவிட்டார். செருப்பைக் கையிலை தூக்கும் பார்ப்பம். தூக்கிய கை நிலத்தில் விழும். கவனம்'' என்று சற்றுக் கேலியோடு கூறினன் அவன்.

''ஆகா! வாரும் வாரும். அப்பன் போலிக் காந்தி. மகன் வாய்ப் புரட்சி! உந்த 'புரட்சி', 'சண்டை', 'குண் டெறி' எல்லாத்தையும் மேடையோடை வைச்சுக்கொள். என்னோடு சருவினயோ தெரியும்... வாங்கின காசைக் கொடுக்க வக்கில்லை. வக்கணை பேச மாத்திரம் வாயி ருக்கு.''

''கொடுக்கல் வாங்கலுக்கு முடிவு கட்டக் கோடு இருக்கு. நீதி வழங்க நீதவான் இருக்கிருர். பழஞ் செருப் புக் கதை எல்லாம் எதுக்கு?''

''பணத்தையும் கொடுத்துவிட்டு கோட்டுக்கு அலையும் படி சொல்லுகுது தம்பி. வாங்கிறபடி வாங்க எனக்குத் தெரியும். இந்தக் காந்திக்கு ஒரு பழஞ் செருப்படி போதும் என் பணத்துக்கு. இந்தப் புரட்சிக்கு இரண்டு பழஞ் செருப் படியும் காணுது போல வா, தம்பி, வா ''

''அடியும் பார்ப்பம்... காந்தியின் மகன் காந்தியல்ல. அடிக்கு அடி .. இரத்தத்திற்கு இரத்தம்! இதுதான் என் கொள்கை ''

மெத்தைவிட்டார் செருப்பைக் கழற்றிக் கையிலெடுக்கிறார். இரண்டொருவர் அவரை வளைத்துப் பிடிக்கிறார்கள். அவர் திமிறுகிறார்.

"அவரை விடுங்கள்..." என்றபடி நடராசன் முன்னேறினான்.

"அவன் வாலிபன், விபரம் தெரியாமல் படபடக்கிறான். அடிக்கப் பிரியமானால் — அவமானஞ் செய்யக்கருதினால் — எனக்கு அடிக்கலாமே" என்று கூறிய காந்தி பொன்னையா மீண்டுஞ் சிரித்தார். கோபத்தின் சுவடே இல்லை. ஆழ்ந்த அமைதியின் மோனத் திருக்கோலம்.

மெத்தைவிட்டாரின் கை தாழ்ந்தது. கூடி நிற்கும் சனங்கள் தம்மைப் பார்த்து நகைப்பதைப் போன்ற கூச்சம் அவர் நெஞ்சில் உறைத்தது. "தூ!......" என்று வார்த்தைகளைத் துப்பியும், மென்றும் ஏசியபடி அவர் வீட்டிற்குத் திருப்பினார்.

"ஒவ்வொரு விஷயத்திலும் எங்களை விட்டுக் கொடுக்கச் சொல்லுகின்றீர்கள்... உங்கள் சொற்படி நடந்தால் என்ன விளையும் என்பதை நீங்கள் சிந்தித்தீர்களா? நாங்கள் படாத கடனுக்காக எங்கள் மேல் வழக்குத் தொடரும் போதும், எங்கள் சொத்துக்களைக் கொள்ளையடிக்கும் போதும் நாங்கள் என்ன செய்வது?"

என்றோ, யாரோ, மகாத்மா காந்தியிடம் கேட்டது, இப்பொழுது துளிர்ப்புப் பச்சை காட்டுகின்றது.

காந்தி பொன்னையா சாய்வு நாற்காலியில் வந்தமர்ந்தார். அவரைப் பின் தொடர்ந்து வந்த நடராசன், "இதெல்லாம் என்ன? அவர் ஏதோ பணம் என்று கத்துகின்றார். நீங்கள் அவருக்கு அடிமை போல ஒதுங்கிப்

பதுங்கி நிற்கின்றீர்கள். நீங்கள் கோழையைப் போல...'' என்று நிறுத்தினுன்.

''அவரைப் போல நானும் நீதியற்ற முறையில் நாலு தகாத வார்த்தைகளைப் பேசியிருந்தால் நானும் வீரனுகி யிருப்பேன். அப்படித்தானே?... நீ வளர்ந்துவிட்டாய். குடும்பப் பொறுப்பையும் அறிவாய். உனக்குச் சில உண் மைகளைச் சொல்ல விரும்புகின்றேன். முதலில் போய் செம்பில் கொஞ்சம் தண்ணீர் கொண்டுவா. குடித்துவிட்டு ஆறுதலாகப் பேசலாம் '' என்ருர் பொன்னையா.

நடராசன் உள்ளே போனுன்.

வாசலில் மணியோசை கேட்டது. தபாற்காரன் இரண்டு கடிதங்களை கொடுத்துவிட்டுப் போனுன். நடரா சன் பெயருக்கே கடிதங்கள் வந்திருந்தன. அவற்றைத் தமது கையிலே பொன்னையா வைத்திருந்தார்.

தண்ணீர் கொண்டுவந்த நடராசன், கடிதங்களைக் கண்டதும், ''இன்று என்றன்ஸ் பரீட்சைக்கு முடிவு வெளி வரும் என்ருர்கள். அதை வழியில் வாங்கலாம் என்றுதான் புறப்பட்டேன்... மறு மொழிதான் வந்திருக்கிறது போலே. உடைக்கட்டுமா?'' என்று பரபரத்தான்.

சாந்தி பொன்னையா சிரித்தார். ''ஓம், அது எனக்கும் தெரியும்'' என்று ஒருவிதச் சலனமுமின்றிச் சொன்னுர்.

தண்ணீரைக் குடித்துவிட்டு மிக அமைதியாக, ''மகனே குடும்பக்கதை — அதுதான் எனக்கும் மச்சான் சுப்பிர மணியத்திற்கும் உள்ள பிணக்கு - அதனை அறிய வேண்டு மென்று ஆத்திரப்பட்டாயே... இந்தக் கடிதம் — உன் சொந்தப் பிரச்சினை — வந்ததும் அந்த மான அவமானங்க ளெல்லாம் போய்விட்டதா?'' எனக் கேட்டார்.

நடராசன் தலை கவிழ்ந்தான்.

''நேற்று அசாத்தியமாக இருந்தவை இன்று சாத்தியமாகும் விந்தையை நாம் தினசரி கண்டு வருகின்றோம். அப்படி அசாத்தியமானவற்றைத்தான் அந்தக் காந்தியடிகள் சாத்தியமாக்கினார். என்னைப் போலிக் காந்தி என்று ஏசினார்கள். பாதகமில்லை. உண்மையில் அவரைப்போல நாம் நடக்க முடியாது. சிலவற்றையாவது பின்பற்ற நான் பாடுபடுகின்றேன். அவ்வளவுதான். கடவுளில் நம்பிக்கை வைத்து நடந்தால் சில காரியங்களாவது சாத்தியமாகலாம் என்று நம்புபவன் நான். இன்ப துன்பங்களை அவன் கையிலே ஒப்படைத்து விட்டடால் மனம் தெளிவு பெறும். இந்தக் கடிதம் என்ன செய்தி கொண்டு வந்திருக்கின்றது? சித்தி பெற்றிருந்தால் பல்கலைக்கழகம் சென்று படித்து டாக்டராகலாமென நீ மகிழலாம். ஐந்து வருடமும் படிக்கப் பணத்திற்கு எங்கே போவது? அதற்காகச் சித்தி பெறாமலிருந்தால் நல்லது என்று எதிர்பார்ப்பதா?''

''அதைப் பற்றிப் பிறகு யோசிக்கலாம்... இப்பொழுது கடிதத்தை உடைத்துப் பார்ப்போம்'' என்று அவசரப்பட்டான் நடராசன்.

''இல்லை. எனக்கொரு வாக்குறுதி தேவை. அதைத் தந்துவிட்டுக் கடிதத்தை உடை'' என்றார்.

அவனுக்குத் தகப்பனார் கூறுபவை புதிராக இருந்தன. இருட்டில் நடப்பதைப் போன்ற அவதி.

''இமயமலைக்குச் சென்று அங்குள்ள அமைதியை ஆனந்தமாக அனுபவிப்பதில் நான் அக்கறை கொள்ளவில்லை. இந்தக் கொந்தளிப்பான சூழ்நிலையில் இருந்து நான் எவ்வளவு அமைதியைப் பெற முடியுமோ அதைக் கொண்டு நான் திருப்தி அடைவேன். எனவே தான் உங்கள் மத்தியிலே தங்கியிருக்க விரும்புகின்

றேன். நீங்கள் எல்லோரும் இமயமலைக்குச் சென்றால் உங்களுடைய ஊழியனாக உங்களைப் பின் தொடர்ந்து வருவேன்.''

''..... நான் விவாகஞ் செய்த புதிதில் இரண்டு குழந்தைகள் பிறந்த உடனேயே இறந்துவிட்டன. குடும்பத்திலும் பல கஷ்டம். மனத்தில் அமைதியில்லை. எப்படியோ துறவு மனப்பான்மை உள்ளத்திற் புகுந்து கொண்டது. இந்த ஊரை விட்டே ஓடிவிட்டேன்... ஊரைவிட்டுக் கிளம்பிய நான் தமிழ் நாடு போய்ச் சேர்ந்தேன். ஊர்ஊராக அலைந்தேன். மடங்களிலே தங்கினேன். ஆசிரமங்களைப் பார்த்தேன். காந்தீயக் கொள்கைகளை அறியும் வாய்ப்பும் கிட்டியது... ஊரைவிட்டு ஓடிவந்தது பிசகு என்பதை மெல்லம் மெல்லமாக உணரலானேன்....

''திரும்பி ஊர் வந்தேன். மூன்று வருடங்கள் கழிந்து விட்டன. அந்த மூன்று ஆண்டுகளும் உன் தாயைக் காப்பாற்றியது யார் தெரியுமா? உன் மாமன் சுப்பிரமணியந்தான்'' என்று கூறி நிறுத்தினார்.

''அந்த அவர், இன்று இப்படிப் பேசுகின்றாரே...'' என்று அங்கலாய்த்தான் நடராசன்.

''நாம் தெய்வ நம்பிக்கை அற்றவர்களாகி விட்டோம்...''

நடராசனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. மறுபடியும் இருட்டுக்குள் தகப்பனார் தன்னைத் தவிக்க விடுகின்றார் என்றே நினைத்தான்.

இந்நிலை நீடிக்கவில்லை. காந்தி பொன்னையா பேசத் தொடங்கினார்.

''பிரிந்த குடும்பம் இணைந்தது. கால ஓட்டத்தில் நீ பிறந்தாய். நீ தனியாகப் பிறக்கவில்லை. உன்னோடு கங்கா

தரனும் பிறந்தான். இரட்டைக் குழந்தைகள். அப்பொழுது நான் பட்ட கஷ்டம். உன் அம்மா பட்ட துயரம். தெய்வ சோதனை என நம்பி வளர்த்தோம்.

''மேலும் இரண்டு வருடங்கள் உருண்டோடின. அப்போதும் உதவிக்கு வந்தவர் உன் மாமா சுப்பிரமணியம் தான். இரட்டைப்பிள்ளைகள் ஒரே வீட்டில் வாழ்ந்தால் ஒரு குழந்தைக்கு ஏதாவது தீங்கு ஏற்படலாம் என்று ஊரார்கள் பயமுறுத்தினார்கள். தெய்வ சித்தத்தை மறந்து — ஊரார் பேச்சை நம்பி — கங்காதரனை வளர்க்கும் பொறுப்பை அவரிடம் விட்டுவிட்டேன். நீ அனுபவிக்காத செல்வத்தையும் சீராட்டையும் அவன் அனுபவித்தான். சொந்தப் பிள்ளையைக்கூட அப்படி வளர்க்க மாட்டார்கள்......''

''அப்பா, மாமாவைத் தெய்வம் மாதிரிப் பேசுகிறீர்களே ... அப்போ நான் அவரைப் பேசியது குற்றம் என்று......'' நடராசன் வார்த்தைகளை முடிப்பதற்கிடையிலேயே பொன்னையா மிக அமைதியாகக் குறுக்கிட்டார்.

''அதற்கல்ல, தினைத்துணை நன்றி செய்தாலும் பனைத் துணையாகக் கொள்ள வேண்டும். இது வள்ளுவர் வாக்கு. அவர் நன்மை செய்யும் பொழுது வாழ்த்தத் தெரியாத நாம், தெரிந்தோ தெரியாமலோ ஒரு பிழைவிடும் பொழுது பொறுமையாக இருக்கக் கூடாதா? பொறுமையாக இருந்தால் கோழை என்று அர்த்தமாகி விடுமா?''

> ''பொய்மையும் அடக்கமின்மையும் உள்ள ஒரு மனிதன் தன்னகத்தே கடவுள் இருப்பதாகச் சொல்லிக் கொள்வது போலித்தனமானது......''

மகாத்மா என்ற தடங் கடலின் ஒரு திவலையைத் தன் தகப்பனார் மூலம் நடராசன் தரிசித்தான். அவன் மனம் அலை ஓய்ந்த சமுத்திரம் போல அமைதி அடைந்தது.

''மனத்திலுள்ள பகையுணர்ச்சிகளை எல்லாம் உதறி எறிந்துவிடு. எங்கள் குடும்பங்களுக்கிடையில் பகைமை வளரக்கூடாது. அவர் எப்படி ஏசினலும் பேசினலும் பொறுமையாக இரு. அன்பை வளர். இதுவே நான் உன்னிடம் எதிர்பார்க்கும் வாக்குறுதி. இதோ, உன் கடிதங்கள்......'' என்ருர்.

நடராசனின் கண்களில் நீர் துளிர்த்தது. யாதொரு பரபரப்புமின்றிக் கடிதங்களைப் பிரித்துப் பார்த்தான்.

''அப்பா, கடவுள் நம்மைக் கைவிடவில்லை'' என்று நாத் தழுதழுக்கச் சொன்ஞன்.

''சந்தோஷ வெறி வந்து விடும் போது சில காரியங்களைச் செய்துவிட முற்பட்டு விடுகின்ருேம். இதற்காகப் பிறகு வருத்தப்பட வேண்டியிருக்கிறது. பிரதிக்ஞை செய்து கொள்வது என்பது தெய்வீகமான காரியம். உணர்ச்சி வேகத்தில் நாம் இதைச் செய்து விடக் கூடாது. புனிதமான மனத்துடனும் நிதானத்துடனும் கடவுளைச் சாட்சியாகக் கொண்டே நாம் பிரதிக்ஞை செய்து கொள்ள வேண்டும்.''

நடராசன் சித்தியெய்திய செய்தி மாஞ்சோலைக் கிராமம் எங்கும் பரவியது. புதுப்பணக்காரர்கூட இது குறித்து அக்கறையாக விசாரிக்கத் தொடங்கி விட்டார்கள். ஆனல், அவரோ உள்ளூர்ப் பெண் குழந்தைகள் வாழ நெசவுசாலை கட்டும் முயற்சியில் ஆழ்ந்திருந்தார்.

இச் செய்தி மெத்தை வீட்டுச் சுப்பிரமணியத்துக்கும் எட்டியது. காந்தி பொன்னையா இனிமேல் தூசாகக்கூட மதிக்கமாட்டார் என்று அஞ்சினர். இரண்டு வருடங்களுக்கு முன் எப்படி ஒற்றுமையாக இருந்த குடும்பங்கள்... இதை நினைத்துப்பார்க்க மனைவியின் மேல்தான் அவர் கோபந்திரும்பியது.

அந்த நேரத்தில் நடராசன் உள் நுழைந்தான்?

"மாமா, அன்று நடந்த சம்பவத்திற்குத் தங்களிடம் மன்னிப்புக் கேட்கவே வந்திருக்கின்றேன். தாங்கள் எங்கள் குடும்பத்திற்குச் செய்த உதவி - கங்காதரனை வளர்த்த பெருந்தன்மை, இவையெல்லாம் எனக்குத் தெரியாது. தகப்பனூர் விளக்கமாகச் சொன்னூர். அதனால் தங்களிடம்."

"இல்லை. பொய். சோதனையில் சித்தியடைந்து விட்டேன் என்ற மமதையில் நீ வந்திருக்கின்ருய். 'நீ செருப்பால் அடிக்க நினைத்த மகன் இனி டாக்டராகப் போகின்ருன் பார்' என்று உன் தகப்பன் அனுப்பியிருக்கின்ருன். இவை எல்லாம் எனக்குத் தெரியும்..."

"இன்னுமா மாமா உங்கள் கோபம் தணியவில்லை? துடிக்கும் இந்த வயதிற்குக்கூடப் பொறுமையைக் கற்பித்தார் என் தகப்பனூர். உங்களிடம் நான் என்றுமே பகைமை பாராட்ட மாட்டேன் என்று அவருக்கு சத்தியம் செய்து கொடுத்துவிட்டேன். நீங்கள் ஏசினூலும் - திட்டினூலும் - விரட்டினூலும் நான் இவ்விடத்தை விட்டுப் போகமாட்டேன். என்னை மன்னித்து, மாமியிடமிருந்து தண்ணீர் வாங்கித் தாருங்கள். குடித்துவிட்டுப் போகின்றேன்" என்ருன் நடராசன்.

சுப்பிரமணியம் அவன் முகத்தைப்பார்த்தார். அன்றலர்ந்த செந்தாமரை போல இருந்தது. 'அடிக்கு அடி, இரத்தத்திற்கு இரத்தம்' என்று இவன் பேசியிருப்பானூ என எண்ணிப் பார்க்கவும் அவர் மனம் கூசியது.

"மன்னிக்கக்கூடிய பெரிய மனுஷன் அல்ல நான். நான் சாதாரண மனிதன்... நான் எல்லாவற்றையும் மறந்துவிடுகின்றேன்... போய்வா..."

"மாமியிடமிருந்து தண்ணீர் வாங்கித்தாருங்கள். குடித்துவிட்டுப் போகின்றேன்."

''அவள் எங்கே தரப்போகின்ருள்?... அவள் திருந்த மாட்டாள்... உன் தகப்பஞர் தன்னைத் தூய்மைப் படுத்திக் கொள்வதாகக் கூறும் போலி என்று நினைத்தேன். இல்லை. தன்னை மட்டுமல்ல, உன்னை - சூழ உள்ள எல்லோரையுந் தூய்மைப் படுத்துகின்ருர்... போய்வா தம்பி... என் மனைவி திருந்தமாட்டாள்.''

''இந்தா தம்பி தேத்தண்ணி சூடியும்...'' என்று கூறியபடி மெத்தை வீட்டுமாமி உள்ளே வந்தாள். இருவரும் திகைத்தனர். அவள் தேநீர்க் கோப்பையைப் பரிவுடன் நடராசனிடம் கொடுத்தாள்.

''நீங்கள் பேசிக் கொண்டிருந்தது என் காதிலும் விழுந்தது. நான் தான் எல்லோருக்கும் கொடியவளாகி விட்டேன். உன் சகோதரன் கங்காதரனை முலைப்பால் ஊட்டாததைத் தவிர என் சொந்தப் பிள்ளையாகவே வளர்த்தேன். அவன் வளர்ந்ததும், எங்கே எங்களை விட்டுப் போய்விடுவாஞே என்ற பயத்தில், நம்முடன் ஒரு 'பிடி' இருக்க வேண்டும் என்பதற்காக, கங்காதரனை வளர்க்கும் சாட்டில் காசு கொடுக்காமலே பொய் நோட்டு எழுதி வாங்கிக் கொண்டோம். எந்தக் கங்காதரன் என்னை விட்டுப் பிரியக் கூடாது என்று ஏங்கினேஞே அவன் எல்லோரையும் விட்டுப் பிரிந்து மீளாத உலகிற்குப் போய்விட்டான்...'' அவளுடைய கண்கள் நீரைச் சொரிந்தன.

''வளர்த்த பாசம் எல்லாவற்றையும் மறக்கத் தூண்டியது. கங்காதரனுக்குப் பதிலாக நீ ஏன் செத்திருக்கக் கூடாது என்று கூட நினைத்தேன். உங்களைப் பழி தீர்ப்பதின்மூலமே கங்காதரனின் பிரிவை மறக்கலாம் என்று தெரியாத்தனமாக நம்பினேன்... இதுதான் நமது குடும்பங்களுக்கிடையில் கடந்த இரண்டு வருடங்களாக இருந்து வரும் பகைக்குக் காரணம். என்னை மன்னித்துவிட்டாலே போதும்.''

அவ்விடத்தில் அமானுஷ்ய மௌனம்.

''நம்மை யாராவது தூற்றினுல் அதற்குப் பதி லாக நாம் அவரது கன்னத்தில் அறைகிறேம், அந்த அடிக்குப் பதிலாக இரண்டு அடிகள் விழுகின்றன. அதற்குப்பதில் உதை. உதைக்குப் பதில் துப்பாக்கிக் குண்டு. இப்படியாகப் பாவச் சுழல் விரிந்து கொண்டே போகின்றது ... மன்னித்தல் என்ற ஒரு பொதுவான விதியை நாம் பின்பற்றுவது அசாத்தியமானதா? ஒரு வருக்கொருவர் செய்த தவறுகளை மறந்து பரஸ்பரம் மன்னிக்கும் இந்த விதியை அனுசரிக்கும்படி எனது நண்பர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.''

''உன்னை மன்னிக்க வேண்டுமென்றுல், கங்காதரன் என்று இவனை நினைத்து, இவனை டாக்டருக்குப் படிப் பித்து ஆளாக்க வேண்டியது உன் கடமை'' என்றுர் மெத்தை வீட்டார்.

''அப்படியே செய்வேன். நீங்கள்தான் நோட்டு என்று ஏதாவது வாங்கி வைத்துவிடப் போகின்றீர்கள் கவனம்'' என்றுள் மெத்தைவீட்டு மாமி.

மூவரின் சிரிப்பொலியும் திருவேணி சங்கமத்தின் புனிதத்துவத்தைப் பரப்பியது.

கே. வி. நடராஜன்

# கதவே திற!

"நீங்கள் நல்ல இந்துக்களாக இருக்க விரும்பினுல், நீங்கள் கடவுளை வழிபட விரும்பினுல், நீங்கள் அறிவுள்ளவர்களாக இருந்தால் தீண்டாதார் என அழைக்கப்படுபவர்களுக்கு எல்லா ஆலயங்களின் கதவுகளையுந் திறந்து விடுங்கள்" என மகாத்மாகாந்தி, 1927ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் 27ஆம் நாள் யாழ்ப்பாண இந்துக்கள் மத்தியிற் பேசும் பொழுது குறிப்பிட்டார்.

மேலும் பேசுகையில், "உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து வருமானுல், உங்களுடைய பிரார்த்தனையை ஏற்றுக் கொள்வது போலவே, ஹரிஜனர்களுடைய பிரார்த்தனைகளையும் ஆண்டவன் ஏற்றுக் கொள்ளுகின்ருன்" என வலியுறுத்தினுர்.

''முருகா!''

துரையனின் கரங்கள் சிரசின்மேல் குவிந்து கிடக்கின்றன. சிந்தையை அடக்கியே அவனுடைய உதடுகள் முருக நாமத்தை உச்சரித்த போதிலும், வேறு நினைவுகள் சிலவும் அவன் மனத்தில் எழுந்தன.

'முருகா, இன்றிருந்தோரை நாளை காணமுடியவில்லை. இதற்கிடையில் எத்தனை எத்தனை கொடுமைகள் - பிரிவுகள் - சாதி வேற்றுமைகள்... போன வருஷம் இருந்த சின்னப்பன் இந்த வருஷம் இல்லை. அடுத்த வருஷம் நானும் இருப்பேனோ......'

'சின்னப்பன் உன்னை ஆலயத்தின் உள்ளேவந்துபார்க்க வேண்டும் என்ற அவதியிலேதான் உயிரைப் பலி கொடுத்தான். முருகா என்ன விசித்திரம்? இன்று உன் ஆலயத்தின் கதவுகள் சகலருக்கும் திறந்து கிடக்கின்றன. ஆனால் உள்ளே வருவதற்குச் சின்னப்பன் இல்லை. உன் சன்னிதானத்தின் உள்ளே நுழைய 'இதுதான் வழி' என வழிநடத்தி அவன் உயிரைப் பலியெடுத்துக் கொண்ட அவனுடைய 'தோழர்'களையும் இங்கு காணவில்லையே ... அவர்களுக்கு எத்தனை எத்தனை போராட்டங்களோ?

துரையனின் வணக்கத்தைச் சின்னப்பனின் நினைவு ஆக்கிரமித்துக் கொள்ளுகின்றது.

மோனம்.

> தொடர்ந்து, ''தங்களை வைதீக இந்துக்கள் என அழைப்போர் என் உரிமை பாராட்டுதலை ஏற்றுக் கொள்ளாத போதிலும், நான் வைதீக இந்து என்று அழைப்பதையே வலியுறுத்துவேன்'' என மகாத்மா காந்தி தொடர்ந்து கூறினார்.

பழைய நிகழ்ச்சியொன்று துரையனின் நினைவில் அசை போடுகின்றது.

சிவத்தப் பட்டுடுத்தி, 'சிரைத்துக் கட்டிய' கச்சைக் கட்டுடன் முள்ளு மிதியடியின் மேல் நிற்கும் துரையன், மேளத்தில் முழங்கும் தாள லயத்திற்கு ஏற்றவாறு, முன்னுக்கு இழுத்து இழுத்து, சுற்றியும் சுழன்றும் கழுத்தின் ஏரியில் கிடக்கும் காவடியுடன் ஆடுகின்றான். அவனுடைய அகன்றமார்பிலும், திரண்ட தோள்களிலும் ஆயிரத்தெட்டு வேல்கள் குத்தப்பட்டிருக்கின்றன. வாயைப் பிளந்து குத்தப்பட்டுள்ள பெரிய அலகு வேலும், நெற்றியில் கொலுவிருக்கும் நெற்றி வேலும் சூரிய ஒளியில் தகதகக்கின்றன. சவாரிமாட்டின் நாணயக் கயிற்றின் முடிச்சில் செடில் முட்கள் கைப்பிடிக்குள் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கின்றன. நண்பன் சின்னப்பன் செடிலை இழுத்துப் பிடிக்கின்றான். காவடி ஆடும்போது ஆட்டத்திற்கேற்றவாறு இழுத்தும், உயர்த்தியும், பதித்தும் பிடிக்க வேண்டும். நிதானம் தவறினால் செடில் முட்கள் தோலைப் பிய்த்துக் கொண்டு வெளியே வந்துவிடும். செடிலை இழுத்துப் பிடிக்கக்கூடிய தைரியமும் நுட்ப ஞானமும் கொண்ட சின்னப்பனும் துரையனுடன் சுழலுகின்றான், செடிலை இழுத்துப் பிடிக்கும்போது, செடில் வரிசைகளின் துளைப்பிற்கு ஆக்கினைப்பட்ட தோலிலிருந்து இரத்தம் கசிந்து, முட்களைத் தோய்த்து, வியர்வையுடன் கலக்கின்றது. இக் காட்சியைக் கண்ட பக்தர்களின் தேகம் புல்லரிக்க, ''அரோகரா... ஆற்றங்கரையானுக்கு அரோகரா...'' என்று கத்துகிறார்கள். சிலர் பக்தி மேலீட்டால் கூடவே ஆடுகிறார்கள். வருடா வருடம் எத்தனை வருடங்கள் பக்தி ஆட்டத்திலும் துரையனுடன் பிணைந்திருந்த இனிய நண்பன் இன்றில்லை. திரும்பி வர முடியாத உலகத்திற்குப் போய்விட்டான்.

சென்ற ஆண்டும், அதற்கு முந்திய ஆண்டும் துரையன் காவடி எடுக்கவில்லை. முந்திய ஆண்டு முருகன் கோயில் கத

வுகள் ஹரிஜனர் பிரச்சினையால் மூடப்பட்டிருந்தது காரணம். சென்ற ஆண்டு... ஆலயப்பிரவேச இயக்கத்தில் புரட்சித் தத்துவமும் புகுந்து கொண்டது. அதன் பலன் நண்பன் சின்னப்பன் கொலை செய்யப்பட்டான் என்பது மட்டுமா?

அந்த நிகழ்ச்சிகளை நினைக்கத் துரையனின் மனம் கூசுகின்றது.

> மேலும் தொடர்ந்து, "ஒருவனுடன் சமபந்தி இருக்கலாம், இன்னொருவனுடன் அவ்வாறு செய்யலாகாது; ஒருவனைத் தொடலாம் இன்னொருவனைத் தொடலாகாது என்றோ, அல்லது முஸ்லிம்களுடனுடன் கிறிஸ்தவர்களுடனும் சண்டை இடுவது தான் வைதீக இந்துவுக்கு இருக்க வேண்டிய இலட்சணம் என்றால், நான் வைதீக இந்து அல்ல " என்றார் மாகாத்மா காந்தி

''ஆத்தையும் அப்புவும் பிச்சை எடுக்கினம் பொடியன் கந்தசாமி கோயிலைத் திறந்துவிடச் சொல்லி நிக்கிறான் மேன் கோயிலுக்கை பூரப் போய் செப்பமா வாங்கிக் கட்டிக் கொண்டு வந்து கிடக்கிறான் '' என்கிறான் புதியான்.

புருஷனின் வார்த்தைகளைக் கேட்ட சிவப்பி சவுக்குச் சொடுக்கல் கண்ட சவாரி மாடாகிவிட்டாள்.

'எட அறுதலா, பிள்ளை அடிபட்டு வந்து கிடக்குது. அதை வைச்சுக் கொண்டு நெக்காட்டியம் பண்ணிக் கதைக்கிறியே! பெத்த வயிறு பத்தி எரியுது. நீ குடிச்சிட்டு வந்து முஸ்பாத்தியே பண்ணுறாய்?'' என்று தலையில் கிடந்த புல்லுக்கடகத்தை நின்ற நிலையிலேயே 'தொப்'பென்று போடுகிறாள்.

''ஓமடி, எனக்கு மொசு மொசுப்பு. உவங்கள் பொடியன்களுக்கு கரகரப்பு. ஓடிப்போய் உருவடி துரைக்கு. கீழ் சாதிப் பயலுகள். கோயிலுக்கை அல்லோ பூரப்போகினமாம்...'' புதியான் குரல், மனசார, பத்து வீடுகளுக்கு அப்பாலும் கேட்கும்.

''அந்த முருகன்தான் காப்பாத்தினது என்ரை பிள்ளையை காயம் ஒண்டுமில்லை. கண்ணுக்கு வந்தது கண் புருவத்தோடை போச்சுது. உம்... எல்லாம் கேட்பார் புத்தி கேட்டதாலை வந்த கேடு .'' என்று கூறியபடி சிவப்பி குடிசைக்குள் நுழைந்தாள்.

''சொல்லுறவன் சொன்னால் கேட்கிறவனுக்கு மதி என்னடி? ஆயிரம் நாள் படிச்சுப்படிச்சு சொல்லி இருப்பன். அறுதலிமேன் கேட்டாத்தானே? அதிலையும் போனவருஷத்திலை இருந்து என்ரை சொல்லை இல்லிப்போலையும் மதிக்காமல் திரிஞ்சான். அதுகின்ரை வினைதான் உதெல்லாம்'' என்றான் புதியான்.

''உவ்வளவு காலமும் வெளியாலை நிண்டுதானே கும்பிட்டனங்கள் உள்ளுக்கை போனாத்தான் சாமிக்குத் தெரியுமோ? இப்பதான் புது நாணயமாக எங்கேயோ இருந்து வந்துட்டானுகள், கோயிலுக்கைகூட்டிக் கொண்டு போக! இஞ்சை இருக்கிற குழந்தை குஞ்சுகளையும் பலி குடுத்து துண்டு கேக்கிறதுக்கு மாய்மாலம் போடுறானுகள். குறுக்காலை போன இவங்கள் ஏமாந்து பின்னாலே திருயுறானுகள். அந்தப் பாழ்பட்டுப் போன கட்சிக்காரன்கள் பத்தி எரிஞ்சு போக!'' எனச் சிவப்பி கட்சிக்காரன்கள் இருக்கும் திக்கை நோக்கி மண் அள்ளிப் போடுகின்றாள்.

''குந்தி இருக்கவும் குடிக்கிற கூழுக்கும் வெள்ளாளன் வேத்தாளன்ரை கையைக் காலைப்பிடிச்சுக் கெஞ்ச வேண்டிக் கிடக்குது. பட்டணத்திலை இருந்து கொண்டு ஆரோ மூத்திரம் பெய்யிறுங்கள் எண்டாப்போலை இவங்கள் அதைக் கயி

றெண்டு பீடிச்சுக் கொண்டு நிக்கிறுங்கள். கந்தனையும் பெடி பெட்டையளேயும் இருந்த நிலத்தாலே எழுப்பித் தெருவிலே பிடிச்சு விட்டார் விஞசித்தம்பிக் கமக்காரன். முத்தரின்ரை வீட்டையும் இரவோடு இரவா எரிச்சுப் போட்டான்கள். அவன்ரை தாய்க்கிழவி அதுக்கிள்ளே கருகிக் கிடந்தாள். முருகா இதெல்லாம் இந்தப் பொடியளுக்குத் தெரிய மாட்டன் என்குதே... சின்னப்பன்ரை பிணம் விழுந் தோடனே பட்டணத்துத் தலைவன்மாரெல்லாம் பறிஞ்சிட்டான்கள். இந்த ஊரையே சுடலையாக்கிப் போட்டுப் போறுங்களே பாவியள் '' புதியான் அழுகையும் ஆத்திரமும் இழையோடப் 'பழஞ்சீலை கிழித்தான்'!

முருக வழிபாட்டில் ஈடுபட்டிருந்த துரையன், இந்த நினைவுகளுக்குச் செடில் மாட்டி இழுத்து நிறுத்தமுயன்றுன். முடியவில்லை. செடில் பிடிப்பவன் 'நோஞ்சான்'. காவடி ஆட்டக்காரனின் இழுவையின் போக்கில் இழுபடும் அவதி.

> மேலும் பேசுகையில், "நான் தென்னிந்தியப் பேச்சுக்களில் அநேக தடவைகள் கூறியதுபோல வர்ணசிரமத்திற்கும் ஜாதி முறைமைக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. வர்ணசிரம முறைமை உயிர்த்துவம் கொடுக்கும் பொழுது ஜாதிப் பாகுபாடு அதனைக் கொலை செய்கின்றது. ஜாதி முறைமையின் மிக அருவருக்கத்தக்க போக்குத்தான் தீண்டாமை முறைமை... " என்று விளக்கினர் மகாத்மா காந்தி.

''சின்னப்பு நீ வலுவாய் ஆவேசப்படுருய். அடா முடாங்காறுன வழி சரிவராது.. யதார்த்தமாக யோசித்துப் பார். இன்னும் நாங்கள் இரவல் காணியளிலே குடியிருந்தும், இரந்துண்டும் வாழ்க்கையை நடத்துகின்ருேம் ''

''அதுக்காக நாங்கள் அடிமைகளா?''

''அப்பிடியில்லை. முள்ளை முள்ளாலை எடுக்க வேணும் எண்டது போலை பக்தியை பக்தியாலைதான் எடுக்க வேணும்.''

''இவ்வளவு காலமும் இந்தப் பித்தலன்கள் எங்கடை பக்தியை அறியேல்லையே?...''

''இஞ்சை பார் சின்னப்பு நாங்கள் அவர் இலருக்காக பக்திமான்களாக இருக்கேல்லை.. தர்மசிங்கத்தாரும், பெரிய புலத்து மாணிக்கத்தாரும், இப்பத்தைய இளம் பொடியங்களும் எங்கடை பக்கம் இல்லையே...''

''உவங்கள் சரியான கள்ளங்கள். அதிலையும் தர்மசிங் கத்தார் பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன் என்ற கணக்கா உடும்பு நாக்குக்காரன். வெளியிலைதான் காந் திக் கதை எல்லாம். உள்ளுக்கை காஞ்சோண்டி விஷம். வெளியிலை காந்தி வேஷம் போடுறான்கள்...''

''அப்பிடிச் சொல்லாதை சின்னப்பு. இப்ப உன்னை இழுத்தடிச்சுத் திரியிறவங்கள் யோக்கியவான்களோ? இந் தப் புத்துகளிலை எந்தப் பாம்புகள் இருக்கோ?''

''என்ன துரை மெள்ள மெள்ள வெள்ளைக்காரனு கிறுய்?... உந்த வெள்ளாளன்கள் நினைச்சால் எப்பவோ கத வைத் துறந்து விட்டிருக்கலாம்''

''உன்ரை கதை பேய்க் கதை சின்னப்பு. கடவுள் நம் பிக்கை இல்லாதவங்களுக்கு ஏன் ஆலயப் பிரவேசம்? இவங் கள் பசுத்தோல் போர்த்த புலியள். கடவுள் இல்லை எண்டு சொல்லுறவன்கள் ஏன் விபூதிப் பூச்சோடை கோயிலுக்கு வருகினம்? திமூர் பக்தியாலை கட்சி வளரும் எண்ட நினைப்பு...''

''துரை உனக்கு ஒண்டும் தெரியாது. இந்தச் சாதிப் பிரச்சினை வர்க்கப் பிரச்சினைதான். அப்பிடித்தான் அணுக

வேண்டும். வர்க்கந்தான் வர்க்கத்தோடை சேரும். விளங்கிச்சுதே... அதுவும் சத்தியாக்கிரகந்தானே செய்யப் போறம் முதலிலை... நீயும் வா...''

''சத்தியாக்கிரகமோ? சண்டித்தனம் செய்தல்லே கோயிலுக்கிள்ளை போகப் பாக்கிறுங்கள்? தேங்காய்க்கும் கைப்பூரத்துக்கும் பதிலாகக் கைக்குண்டும் துப்பாக்கியளும் எல்லோ கொண்டருவானுகள்...''

''உனக்கு வர்க்கப் போராட்டம் பற்றி ஒண்டும் தெரியாது. நான் புத்தகம் ரண்டுதாறன் படிச்சுப்பார்...

> தொடர்ந்து பேசுகையில், ''எனவே, உங்கள் மத்தியிலிருந்து தீண்டாமையை ஒழியுங்கள். இன்று பயிலப்படும் இந்து சமயத்திற்குத் தீண்டாமை எவ்விதத்திலும் ஒவ்வாது...'' என்ருர் காந்திஜி.

''பெண் புரசுகளும் வந்திருக்கு. நான் ஒரு நாளும் உதுக்கு ஏர்வைப்படமாட்டன். துரையன்ரை கதையை நான் கேட்காதபடியால், இப்ப நான் மொக்குப் பட்டத் தோடை நிக்கிறன்... நான் வாறன்...'' என்றுன் சின்னப்பன். அவனுடைய குரலில் நம்பிக்கையின் பங்கமும், அதனுலேற்பட்ட ஏமாற்றமும் இழையோடிக் கிடந்தன.

''தோழர் இப்ப என்ன செய்யப் போறீர்?'' என்று சத்தியாக்கிரகத் தலைவர்களுள் ஒருவர் மடக்குகிருர்.

''நான் கூட்டிக் கொண்டுவந்த ஆக்களோடை போகப் போறன்...''

''உது கருங்காலி வேலை... விடமாட்டம்...'' தலைவரின் குரலில் உறுதி தொனித்தது.

''எனக்கு மனச்சாட்சி இருக்கிறது...'' சின்னப்பன் குரலில் இரட்டிப்பு உறுதி இருந்தது.

''தோழர் நீர் திரிபுவாதம் பேசுறீர்...''

''தத்துவம் பேச இதுவல்ல இடம்...'' என்று கூறி, ஆலயப்பிரகாரத்தில் குழுமியிருந்த கரவெட்டிப் பக்தர் இருந்த இடத்தை நோக்கி சின்னப்பன் நடந்தான்.

விரல் சொடுக்கும் நேரத்திற்குள் எல்லாம் நடந்தேறின. கைக்குண்டு திடீரென்று வெடித்தது. 'மு...ரு...' என்று சின்னப்பன் நிலத்தில் விழுந்தான் ''...கா!'' என்ற அட்சரத்தை ஒலிக்கும் அவகாசந்தானும் கிடைக்கவில்லை. அந்த இடத்திலேயே பிணமாகக் கிடந்தான்.

'சின்னப்பன் மடியில் வைத்திருந்த குண்டு வெடித்தது' என்று பொலிஸார் நிறுவுவதற்கு, 'தோழர்கள்' உதவி செய்தார்கள்.

"பௌத்தர்களுள்ள இந்த நாட்டிலே .."

''முருகா! உனக்கு உண்மை தெரியும். சின்னப்பன் கைக்குண்டைக் கண்ணாலையும் பாத்திருக்கமாட்டான்...'

மதிய பூசைக்காகக் கோயில் மணி கணீரென்கிறது. கண்களைத் திறந்து நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கியபின் துரையன் எழுந்தான். அப்பொழுதுதான் கோயிலுக்கு வந்து கொண்டிருந்த தர்மசிங்கத்தார் அவன் பக்கத்தில் தரிக்கின்றார்.

''துரை, நான் சொல்லுறன் எண்டு வருத்தப்படாதை மோட்டுத்தனம் முடிஞ்சு போச்சு. ஏதோ நாங்களும் பாடுபட்டம், கடவுள் நினைக்கிற வேலைதானே எல்லாம் நடக்கும்? வாவன், உள்ளுக்கைபோய் ஒரு அருச்சனை குடுத்துட்டு வருவம்.'' என்றார் தர்மசிங்கம்.

''நான் கும்பிட்டுப் போகலாம் எண்டுதான் வந்தனான் ..''

''மனசாரச் சொல்லுறன்... அடுத்த வருஷம் நீ கட்டாயம் காவடி எடுக்கவேணும்...''

துரையனின் முகத்திலே சோக மேகங்கள் கவிகின்றன.

''சின்னப்பன் கெட்டிக்காரன். நானும் வடிவாச் செடில் பிடிப்பன். நீ ஓமெண்டால் நான் செடில் பிடிக்கிறன்...'' என்று பதிலை எதிர்பார்ப்பவர்போல தர்மசிங்கம் நிறுத்தினார்.

> "பௌத்தர்களுள்ள இந்த நாட்டிலே இந்து மதத்தின் தூய்மையிலே நீங்கள் வாழ விரும்பினால், நீங்கள் எவரையுமே தீண்டாதவர் என்று பாராட்டமாட்டார்கள்" எனக் கூறி, யாழ்ப்பாண இந்துக்கள் மத்தியிலே மகாத்மா காந்தி தமது பேச்சைத் தொடர்ந்தார்.

துரையனின் கரங்கள் சிரசின்மேல் குவிந்தன.

''முருகா!''

எம். ஏ. ரஹ்மான்

# உண்மையில் உறுதி*

அந்த அவசரநிலை குறித்து, பிராந்திய அரசியல் 'தலை' கள் மயிர் பிளக்கும் விவாதங்களைப் பற்றி, இரவின் மையத்தைப் பிளந்தும் உறங்கா நோன்பு இயற்றி, ஆலோசனைக் கூட்டம் நடத்தினார்கள். தலைவர்கள் என்ன முடிவெடுக்கப் போகின்றார்களோ என்பதை அறியத் தினவெடுக்குந் தோள்களுடன் பொதுமக்கள் கூடியிருந்தார்கள். அவர்களைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கத் தொண்டர்களுந் 'தளபதி'களும் அரும்பாடுபட்டார்கள். நடுநிசி வைகறையாக வளர்ந்தது. அப்பொழுது தனிப்பெருந் தமிழ்த் தலைவர், கரங்குவிப்பே அவராக மக்கள் முன் தோன்றினார். நெடிதுயர்ந்த ஆரவாரம் அமைதியிற் கரையலாயிற்று. அவர் பேசத்தொடங்கினார். "..மறக் கூட்டமே, தமிழ்ப் பெருங்குடி மக்களே! மயிர் நீப்பின் வாழாக் கவரிமான்

* சத்தியாக்கிரகம் என்பதற்கு 'உண்மையில் உறுதி' என்பது பொருள்.

அன்னுர் தமிழ் இனம். துயர் துடைக்கக் களம் குதிக்கத் துணிந்தோம். செய் அல்லது செத்துமடி என்பது நமது வேதம். நாம் வீர மறவர். அக்கிரமக்காரர்களுக்கு எதிராக நாம் அறப்போர் தொடுப்போம். நாளை மறுதினம் காலை ஒன்பது மணிக்கு நமது சத்தியாக்கிரகப் போராட்டம் ஆரம்பமாகும். பொழுது புலர்ந்ததும் பட்டி தொட்டிக ளெல்லாம் இது பற்றிய விபரங்களை நமது தொண்டர்கள் பிரசாரம் செய்வார்கள்...''

## பிறிதொரு கனு

'சுயேச்சைப் பிறப்பு' என்ற நூலின் ஆசிரியர் ஜோய். அவள் கணவர் ஜோர்ஜ். அத்தம்பதிகள் கென்யாவிலுள்ள மேரு தேசியக் காட்டினூடாகச் செல்கிருர்கள். நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் அறிமுகமான 'நண்ப'ரைச் சந்திக் கிருர்கள். அது ஒரு சிங்கம். அவளுடைய நூல் படமாக்கப் பட்ட பொழுது, அதிலே நடித்த சிங்கங்களுள் அதுவும் ஒன்று. இன்று எலும்புக் குவியலாகக் காட்சி தருகின்றது. கால் ஒன்று முறிந்திருந்ததினுலும், மேலுதட்டில் எட டங்குல நஞ்சு தீட்டிய இறகு ஏறியிருந்ததினுலும், அது மிகுந்த வேதனையுடன் காணப்படுகின்றது. ஜோர்ஜ் அந்த நச்சிறகினை அகற்றுகின்ருர். ஆடு ஒன்றை வெட்டி அதற்கு விருந்து படைக்கிருர்கள். இரைக்கு அலையும் மிருகங்களிட மிருந்து அதனைக் காப்பாற்ற விடியும் வரை அத்தம்பதிகள் அதற்குக் காவல் செய்கிருர்கள் ..

## இன்னொரு கனு

பிரித்தானிய 'சிங்க'த்தின் அடக்கு முறை ஆட்சி பாரத பண் ணிலே கவிந்திருந்த காலம். அதன் ஓர் அங்கமாகச் சென்னை அரசு அன் னிபெஸண்ட் அம்மையாரையும் மற்றும் தலைவர்களையும் சிறைப்படுத்திக்

கோயமுத்தூரில் பாதுகாப்புக் கைதிகளாக வைத்திருந்தது. அவர்களை விடுவிப்பதற்கான வழிவகைகளை யோசித்தார்கள். சத்தியாக்கிரகமே சிறந்த மார்க்கமாகப் புலப்பட்டது. அதன் கர்த்தாவான காந்திஜியை பம்பாயிலிருந்து வரவழைத்து, சத்தியாக்கிரகத்தை எப்படி நடத்துவதென ஆலோசித்தார்கள். "போராட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதற்குக் குறைந்த பட்சம் எத்தனை தொண்டர்கள் தேவை?" எனப் 'பிரபலம்' ஒருவர் கேட்டார். அப்பொழுது காந்திஜியின் முகத்திலே மந்தகாச முறுவல் ஒன்று சுழிந்தது. சிந்தனையிலே தரித்து, மறுகணம் அமைதியாக, "சத்தியாக்கிரகத்தை நடத்தக்கூடியவர்கள் நீங்கள் அல்லர். ஏனெனில், உங்களுக்கு அதில் நம்பிக்கையில்லை" என்றார் காந்திஜி. "வெற்றியின் நுக்குமம் எண்ணிக்கையிற் பெறப்படுவதில்லை. எண்ணிக்கைகளைப் பார்த்துக் கோழைகளே மகிழ்கிறார்கள்" என்று தொடர்ந்தவர் நிறுத்தினார். 'முழு உலகமே திரண்டு நின்றாலும் தன்னந்தனியாக எதிர்க்க முடியும் என்ற நம்பிக்கை வேண்டும். பிரிக்கப்பட இயலாத அகிம்சையிலும் சத்தியத்திலும் பூரண விசுவாசம் பூணுவதினால் இத்தன்னம்பிக்கை பிறக்கின்றது. ஒருதட்வை முகம்மது நபியின் உயிருக்கு ஆபத்தான நிலை ஏற்பட்டது.'—இவற்றைக் கூற உன்னினார். அதற்கிடையில் நபிநாயகம் அவர்களுடைய வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சி அவர் உள்ளமெல்லாம் வியாபித்தது.

### நினைவுக் கனு

நபி பெருமானார் உத்தம தோழராம் அபூபக்கருடன் மக்காவிலிருந்து மதீனாவுக்குத் தமது 'ஹிஜ்ரத்'தை மேற்கொண்டார். இடையில் எதிரிகள் வளைத்துக் கொண்டார்கள். பெருமானாரும் அபூபக்கரும் 'தௌர்' குகையிலே பாதுகாப்புத் தேடித் தங்கினார்கள். குகையின் வாசலில் எதிரிகளின் நடமாட்ட ஆரவாரம் கேட்டது. "அல்லாஹ்வின் திருத் தூதரே! நம்மைப் பிடிக்க வந்துள்ள ஆட்களின் எண்ணிக்கையைப் பார்த்தீர்களா? இத்தனை பேரையும் எதிர்த்து நாம் இருவர் என்ன செய்ய முடியும்?" என அபூபக்கர் அச்சந் தெரிவித்தார். "யா! அபூ பக்கரிப்னு ஸித்தீக், அஞ்சவேண்டாம். நாம் இருவர் மட்டுமல்ல, நம்முடன் அல்லாஹ்வும் இருக்கின்றான்" என இறுதி இறை

நாதர் அமைதியாகவும், திட நம்பிக்கையுடனும் கூறினார்கள்.

## நிகழ்ச்சிக் கனு

"...இவ்விதமாக அவரிடம் (நபிபெருமானிடம்) தன்னம்பிக்கை அதிகமாக இருந்த காரணத்தினால், எடுத்த காரியத்தில் அவர் வெற்றி பெற்றார்" என முகம்மது நபி அவர்கள் பற்றிய நினைவுக் கனுவை 'யங்' இந்தியா என்ற பத்திரிகையில் காந்திஜி எழுதி முடித்தார்.

## நுனிக் கனு

அக்கம் பக்கமாக இரண்டு கட்டடங்கள். ஆயிரம் சத்தியாக்கிரகிகள் அக்கட்டடங்களை மறியல் செய்வது போல அமர்ந்து கொண்டார்கள். 'குண்டாந்தடி முருங்கைத்தடி' 'துப்பாக்கிக் குண்டு விளையாட்டுக் குண்டு' என்று சத்தியாக்கிரகிகள் இடையிடையே கோஷமிட்டு ஆர்ப்பரித்தார்கள். தனிப்பெருந் தமிழ்த் தலைவர் பெரியதொரு காரில் வந்திறங்கி, கரங்குவிப்பே அவராகச் சத்தியாக்கிரகிகள் முன் தோன்றினார். ''தலைவரே! தொண்டர்களின் எண்ணிக்கை காணாது. படப்பிடிப்பாளன் பின்னேரம் வருவான்'' என்று தளபதி ஒருவர் அவருடைய செவிகளைக் கடித்துக் குசுகுசுத்தார். ''இன்னும் சற்று நேரத்தில் தென்பகுதி ஊர்களிலிருந்து சுமார் ஐநூறு தொண்டர்கள் வந்து சேருவார்கள். அவர்களை பஸ்ஸுகளிலும் லொறிகளிலும் ஏற்றி விட்டு, அவர்களுக்கு முன்னதாகக் காரிலே வந்து சேர்ந்திருக்கின்றேன்'' என்று தலைவர் அபயமளித்தார். அவர்களுடைய குசுகுசுப்பிலே ஒட்டிக் கொண்ட இன்னொரு தளபதி, ''இப்பொழுது வரும் தொண்டர்களுக்கு மத்தியானச் சாப்பாடு?'' எனத் தமது சந்தேகத்தை விண்டார். ''வரும் வழியில் மாதவி ஹோட்டெல் முதலாளி கறுத்தாப் போடியைச் சந்தித்தேன். இறைச்சிக் கறியுடன் ஐநூறு

சோற்றுப் பார்சல் அனுப்புவதாக வாக்களித்துள்ளார்'' என்றார் தலைவர் உற்சாகத்துடன். ''கறுத்தாப்போடி ஒரு மகான்'' என்று இரண்டு தளபதிகளும் ஏக காலத்தில் கூறினார்கள். தென்பகுதித் தொண்டர்களை ஏற்றி வந்த முதலாவது பஸ் அவ்விடம் நின்றது. தொண்டர்கள் இறங்கினார்கள். ஒருவர் ஓடோடி வந்து தலைவருக்கு மலர்மாலை சூட்டினார். 'குண்டாந்தடி முருங்கைத்தடி' போன்ற கோஷங்கள் விண்ணதிர எழுந்து மடிந்தன... ''எதுக்காம் இந்தச் சத்தியாக்கிரகம்?'' என்று கேட்டபடி, 'புதிய' சத்தியாக்கிரகி ஒருவர், பீடி ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டு 'பழைய' சத்தியாக்கிரகிகளுடன் கலந்து கொண்டார். ''இந்த இரண்டு படமாளிகையிலும் இப்ப சிங்களப் படம் காட்டுறாங்கள் சிங்கள மொழியை நம்மீது திணிக்க நடத்தப்படும் சூழ்ச்சி'' என்று 'பழையவர்' ஒருவர் விளக்கினார். ''முந்தி இந்தத் தியேட்டர்களில் இங்கிலீசுப் படங்கள் தானே காட்டினாங்கள்? சட்டையள உரிஞ்சு காட்டிற வடிவான படங்கள். நானும் மூண்டு நாலு இங்கிலீசுப் படங்கள் பாத்தனான். வெள்ளைக்காரியள் நல்ல சாங்கம்...'' என்றார் பீடிச் சுவைப்பாளர். ''ஆங்கிலப்படம் காட்டினா பாதகமில்லை. சிங்களப் படம் காட்டக் கூடாது என்பது தானே எங்கள் கோரிக்கை'' என்று விளக்கிய தளபதி ஒருவர் 'சிகரெட்' ஒன்றைப் பற்ற வைத்தார். லொறி ஒன்றிலிருந்து இன்னொரு சத்தியாக்கிரகிகள் கோஷ்டி இறங்கியது. தலைவர் கரங்குவிப்பே அவராக வரவேற்றார். 'குண்டாந்தடி முருங்கைத்தடி' போன்ற கோஷங்கள் மீண்டும் விண்ணதிர எழுந்தன!

Mayad
20/2
74

Feuerned

# GANDHIYAK KATHAIKAL

first published in ceylon
under the auspices of
ilampirai
by
m. a. rahman
of arasu publications
on the occasion
of gandhi centenary (1969)
&
printed in ceylon by
rainbow printers
231 wolfendhal street colombo 13